# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 17 புதன்கிழமை (03.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 342


# கூட்டமைப்பு அரசுடன் பேச்சு நடத்தி அரசியல் தீர்வைக் காண வேண்டும்

## இதுவே இந்தியாவின் நிலைப்பாடு என்கிறார் இந்தியத் தூதுவர்

கொழும்பு, நவம்பர் 03

**இலங்கை அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்க்கமான தீர்வைக் காணவேண்டும் என்பதே இந்திய அரசின் நிலைப்பாடாகும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக்.கே.காந்தா தெரிவித்தார். நேற்று தன்னைச் சந்தித்துப் பேசிய கூட்டமைப்புப் பிரதிநிதிகளிடமே அவர் இதனைக் கூறினார்.**

இந்தியத் தூதுவர் அசோக். கே காந்தாவின் அழைப்பை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலை 7.00 மணிக்கு கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் இந்தியத் தூதுவரைச் சந்தித்தனர். இச்சந்திப்பின்போதே இந்தியத் தூதுவர் அசோக். கே.காந்தா இலங்கைப் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தமது சொத்துகள் அனைத்தையும் இழந்த நிலையில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நான்கு சக்கர உழவு இயந்திரங்கள் 500ம், விவசாயத்துக்குத் தேவையான உழவு இயந்திரப் பாகங்களும் இந்திய அரசால் இலவசமாக வழங்கப்பட்டமை குறித்தும் இந்தியத் தூதுவர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விளக்கினார்.

இந்திய அரசு வழங்கிய உழவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய உதவிகள் உரியவர்களைச் சென்றடைய வேண்டும், பயனாளிகள் தெரிவுசெய்யப்படும்போது வெகுவாகப் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்திய கூட்டமைப்பினர் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு இந்தியா வழங்கும் உதவிகளுக்காக நன்றியும் தெரிவித்துக்கொண்டனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் (24 ஆம் பக்கம் பார்க்க)

# நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் ரூபா 8,000 சம்பள உயர்வு கோரி

### பட்ஜட் நெருங்கும் நேரத்தில் அரசுக்கு நெருக்கடி

கொழும்பு, நவ.03

நாடாளுமன்றத்தில் இம் மாதம் வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படும் நிலையில் அரச ஊழியர்களுக்கு 8,000ரூபா சம்பள உயர்வு கோரித் தொழிற்சங்கங்கள் தொடர் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிக்கவுள்ளன.

அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கம் நாளை வியாழக்கிழமை நாடு முழுவதுமுள்ள வைத்தியசாலைகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்களை நடத்தப்போவதாக அறிவித்துள்ளது. இந்த ஆர்ப்பாட்டங்கள் நாளை பகல் 12.00 மணிக்கு பகல் போசன இடைவேளையின் போது நடைபெறுமெனவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை புகையிரத சேவை ஊழியர்பொதுச் சேவைச் சங்கம் எதிர்வரும் 9ஆம் திகதி 8,000ரூபா (24 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசின் எதிர்ப்புக்கு மத்தியில் பாரிஸில் தமிழ்ச்செல்வன் சிலை திறப்பு

பாரிஸ், நவ.03

இலங்கை அரசின் எதிர்ப்புக்கு மத்தியில் பாரிஸில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் சிலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

சிலையை பாரிஸ் லாக்கூர்னோவ் நகரசபை உறுப்பினர் அந்தோனியோருசெல் கூடியிருந்த மக்களின் ஆரவாரத்துக்கு மத்தியில் திரைநீக்கம் செய்துவைத்தார். (24 ஆம் பக்கம் பார்க்க)




உள்ளே

**குறைந்த விலைக்கே பசும்பால் கொள்வனவு**
நெஸ்லே நிறுவனம் யாழ். மாவட்டத்தில் பசும்பாலை கூட்டுறவுச் சங்கத்தின் கொள் விலையைவிட குறைந்த விலையிலேயே கொள்வனவு செய்யும். பக்கம் 3

**சிறுபான்மைக் கட்சிகளுக்கு எதிராக உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்திருத்தம்**
உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டத்தின் மூலம் சிறுபான்மைக் கட்சிகளை ஒழிக்கும் விதத்தில் அரசு நடந்து கொள்கின்றது. என மனோ கணேசனின் கருத்து பக்கம் 11

**ஆச்சரியமான நாடும் கடனும்**
சிங்கள வார இதழின் ஆசிரியர் தலையங்கத்தின் தமிழ் வடிவம் பக்கம் 13


# சட்டவிரோத மின் பாவனையாளரிடமிருந்து ஒரே நாளில் ரூ.12 லட்சம் அறவீடு

### யாழ்ப்பாணத்தில் நேற்று அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ். குடாநாட்டில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 55 பேரிடம் இருந்து யாழ். நீதிமன்றில் நேற்று 12 லட்சம் ரூபா அறவிடப்பட்டது. 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை மின்சார சபைக்கு நஷ்டஈடாக வழங்குமாறும் யாழ். மேலதிக நீதிபதி அ.பிரேம்சங்கர் உத்தரவிட்டார்.

உரும்பிராய், செல்வபுரம், பொம்மைவெளி, ஒட்டுமடம் பகுதிகளில் மின்சார சபையினரும், கொழும்பில் இருந்து வந்த விசேட குழுவினரும், யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாரும் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட திடீர் சோதனையில் ஈடுபட்டனர். இதன்போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த 55 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் யாழ். நீதிமன்றில் மேலதிக நீதிவான் சு.பிரேம்சங்கர் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் குற்றத்தை (24 ஆம் பக்கம் பார்க்க)

# ஏ-9 வீதி புனரமைப்பு ரூ. 14 ஆயிரம் மில்லியன் செலவில் விரைவில்

யாழ்ப்பாணம், நவ. 3

அனுராதபுரம் முதல் யாழ்ப்பாணம் வரையான ஏ-9 வீதி அகலமாக்கப்பட்டு புனரமைக்கப்பட உள்ளது. இதற்கென 14,000 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

வவுனியா செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்தக் கூட்டத்தில் ஏ-9 பாதையின் புனரமைப்பு மற்றும் அகலப்படுத்தல் பணிகள் குறித்தே முக்கியமாக ஆராயப்பட்டன.

இதனடிப்படையில், அனுராதபுரம் முதல் யாழ்ப்பாணம் வரையான ஏ-9 வீதி மூன்று (24 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் புலிகளின் செயற்பாடுகள் தொடர்கின்றன தடையை நீக்கினால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது

### தனிநபர் தீர்ப்பாயத்தின் முன் கருணாநிதி அரசு கருத்து

புதுடில்லி, நவ. 3

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தமிழகத்தில் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர் என்று தமிழ் நாடு அரசு தெரிவித்துள்ளது. அந்த இயக்கத்தின் மீதான தடையை நீக்கினால் தமிழகத்தில் அந்த இயக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் என்றும் அது தெரிவித்துள்ளது.

புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குவது தொடர்பாக மீளாய்வு செய்யும் தனிநபர் தீர்ப்பாயத்தின் முன்பாக தமிழக அரச சட்டத்தரணி நேற்றுத் தனது கருத்துக்களை முன்வைத்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எனினும் புலிகள் தரப்பில் வாதாடும் மறுமலர்ச்சி (24 ஆம் பக்கம் பார்க்க)

# கப்பலில் ஆஸி. செல்ல முயன்ற 14பேர் தமிழகத்தில் நேற்று கைது

விசாகப்பட்டினம், நவ. 3

தமிழகத்தின் நாகப்பட்டினத்தில் இருந்து கடல் வழியாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றனர் எனக் கூறப்படும் இலங்கை அகதிகள் 14 பேர் நேற்று தமிழக கியூ பிரிவு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுதும் உள்ள அகதி முகாம்களில் இருந்து 40 ஈழத் தமிழர்கள் தூத்துக்குடி சென்று, அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்லத் திட்டமிட்டிருந்தனர் எனப் பொலிஸார் கூறினர். (24 ஆம் பக்கம் பார்க்க)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடமாகாணத் திணைக்களங்கள் ஜனவரி முதல் யாழ்ப்பாணத்தில்

வடமாகாணசபையின் அணைத்து அமைச்சுக்களுக்கும் உரியதிணைக் களங்கள் யாவும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் இயங்க உள்ளன. இதற்கான நடவடிக்கைகளை வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி மேற்கொண்டுள்ளார்.

ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வடமாகாண அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர், மாகாணசபையின் அணைத்துத் திணைக்களங்களும் ஜனவரியில் யாழ்ப்பாணம் வந்துவிடும் என்று தெரிவித்தார்.

''வடக்கின் அபிவிருத்திகள் யாவும் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. அபிவிருத்திகளை மேன்மேலும் சிறந்தமுறையில் மேற்கொள்வதற்கு வசதியாக மாகாணத்தின் அணைத்துத்திணைக் களங்களையும் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் இயங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திணைக்களங்களை அமைப்பதற்கான இடங்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.'' - என்றார்.

திருகோணமலை வரோதய நகரில் தற்போது இயங்கி வரும் வடக்கு மாகாண சபையின் சகல நிர்வாகச்செயற்பாடுகளும் மக்களின் நலன் மற்றும் அவர்களுக்கான சேவைகளைத் துரிதப்படுத்தும் நோக்கிலேயே யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்படுகின்றன என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அதேவேளை வடக்கு மாகாண ஆளுநரின் துணைப் பணியகம் ஒன்று கிளிநொச்சி நகரில் திறக்கப்படவுள்ளது. வடக்கு மாகாண சபையின் முக்கிய நிர்வாகப் பணியகங்கள் யாழ்ப்பாணத்திற்கு தற்காலிமாகவே மாற்றப்படவுள்ளன.

மாகாண ஆளுநர் பணியகம், பிரதம செயலர் பணியகம் மற்றும் அதன் கீழ் உள்ள சகல திணைக்களங்களும் மாங்குளத்திலேயே நிரந்தரமாக அமைக்கப்படவுள்ளன.

வடக்கு மாகாண சபையின் நிர்வாகப் பணியகங்கள் யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்ட பின்னர் வரோதய நகரில் உள்ள பணியகம் மற்றும் கட்டடங்கள் கிழக்கு மாகாண சபையிடம் கையளிக்கப்படும்.

நேற்றைய கூட்டத்தில் வட மாகாண அபிவிருத்தி குறித்து பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. இதில் வடமாகாணத்தில் உள்ள அனைத்துத் திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

# ஆயுதங்களுடன் கூரையூடாக நுழைந்த கொள்ளையர்களால் பணம், நகைகள் சூறை

## வேலணையில் திங்கள் இரவு துணிகரச் சம்பவம்

வேலணை, நவ.3

வேலணை 5ஆம் வட்டாரப் பகுதியில் வீடொன்றுக்குள் ஆயுதங்களுடன் நுழைந்த கொள்ளையர்கள் ஓய்வூதியம் பெறும் கணவன், மனைவி இருவரையும் பயமுறுத்திப் பெருந்தொகைப் பணம், நகைகள் மற்றும் உடைமைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 10 மணிக்கு நடைபெற்றுள்ளது.

இதன்போது 37ஆயிரம் ரூபா பணம், 15 பவுண் நகைகள் மற்றும் பெறுமதியான பொருள்கள் என்பன கொள்ளையர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டின் கூரையைப் பிரித்துக் கொண்டு அறையினுள் இறங்கி இந்தக் கொள்ளையை நடத்தியவர்கள், வீட்டுப் பெண்மணி அணிந்திருந்த தோட்டையும் பலவந்தமாகக் கழற்றிச் சென்றுள்ளனர் என்றும்-

வீட்டில் இருந்த பிளாஸ்ரிக் கதிரைகள், வானொலிகள் போன்றவற்றைக் கூட அவர்கள் விட்டுச் செல்லவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஒ-167-10)

# நீதிமன்றப் பாதுகாப்பிலிருந்த கஞ்சாவை விற்ற ஊழியர்கள் விளக்க மறியலில்

கொழும்பு, நவ.3

அனுராதபுரம் நீதிமன்றின் பாதுகாப்பில் இருந்த கஞ்சாப் பொதியொன்றைக் கடத்திச் சென்று வெளியாருக்கு விற்றனர் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட இருவரையும் நாளை வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கெக்கிராவ நீதிவான் ஸ்ரீநித் விஜயசேகர உத்தரவிட்டுள்ளார்.

அனுராதபுரம் நீதிமன்றில் வழக்கு தடயப்பொருள்களுக்குப் பொறுப்பாக இருந்த கே.டீ.கருணாரத்ன மற்றும் அலுவலக உதவியாளர் நிஷாந்த நாகொட ஆகிய இருவருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இரண்டாவது சந்தேகநபரான நிஷாந்த நாகொட பணியில் சேர்ந்து ஐந்தே மாதங்களாகின்றன என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுர நீதிமன்ற இலச்சினை பொறித்த பெட்டியொன்றுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த முதலாவது சந்தேகநபர் கடந்த 21ஆம் திகதி ஹபரணை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பெட்டியினுள் இருந்த கஞ்சா பற்றிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டபோதே மற்றைய சந்தேகநபரும் கைது செய்யப்பட்டு கெக்கிராவ நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவும் தனியான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# அரச தாதி உத்தியோகத்தர்கள் 10ஆம் திகதி முழுநாள் வேலைநிறுத்தம்

## அமைச்சருடனான பேச்சுத் தோல்வி

அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கத்தினருக்கும், சுகாதார அமைச்சருக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சு தோல்வியுற்றதை அடுத்து எதிர்வரும் 10ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளில் 24 மணித்தியாலங்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாக அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பில் நேற்று அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கத்தினருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது என அச்சங்கத்தின் தலைவர் சமன் ரட்ணபிரிய 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது சங்கத்தினர் அண்மையில் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பை அடுத்து சுகாதார அமைச்சு எம்மை (நேற்று அதாவது நேற்றுமுன் தினம்)பேச்சுக்கு அழைத்தது. இதன்போது நாம் எமது கோரிக்கைகள் தொடர்பாக எடுத்துக் கூறினோம். எனினும் சுகாதார அமைச்சர் இது தொடர்பாக செவிசாய்க்க மறுத்துவிட்டார். நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் எமக்கு தீர்வு ஒன்றை வழங்கவில்லை. இதனையடுத்து நாம் இத்தீர்மானத்தை எடுக்க நேர்ந்தது.

சுகாதார அமைச்சருக்கு மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் எம்மைப் பேச்சுக்கு அழைத்து, அப்பேச்சின் போது தீர்வுகள் எட்டப்படாவிடின் அதில் எதுவித பிரயோசனமுமில்லை.

-இப்படி அவர் தெரிவித்தார்.

# நீதிமன்ற விசாரணையை விமர்சிக்கும் அதிகாரம் எவருக்கும் கிடையாது

## வெள்ளைக் கொடி வழக்கில் நீதியரசர்கள் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 03

தற்போது நடைபெறும் நீதிமன்ற விசாரணைகளை விமர்சிக்கும் அதிகாரம் எவருக்கும் கிடையாது என நேற்று வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பான விசாரணையின்போது நீதியரசர்கள் சாட்சியை எச்சரித்தனர்.

'சண்டே லீடர்' ஆசிரியை பிரெட்ரிகா ஜான்ஸ் வழக்கு விசாரணை தொடர்பாகப் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகள் குறித்தே நீதியரசர்கள் இவ் வாறு எச்சரித்தனர்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு உயர்நீதிமன்றில் தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி.வராவல, சர்பிக் ரஷீக் ஆகிய மூவர் அடங்கிய நீதியரசர்கள் கொண்ட குழு முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சரத் பொன்சேகா சார்பில் ஆஜரான சட்டத்தரணி நலின் லத்துவஹெட்டி சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

இதன்போது கேட்கப்பட்ட கேள்விகளும், பதில்களும் வருமாறு:-

கேள்வி:- கடந்த சாட்சியமளிப்பின்போது அமல் ஜயசிங்கவை அமல் பெரேரா என்று மாற்றிக் கூறியிருந்தீர். உமது பிழையைச் சுட்டிக்காட்டிய போதே அமல் பெரேரா அல்ல. அமல் ஜயசிங்க என்று தெரிவித்தீர்.

பதில்:- ஆம்.

கே:- அமல் ஜயசிங்க குறித்து நீர் கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி கட்டுரை ஒன்றை எழுதியுள்ளீர்.

ப:- ஆம்.

கே:- உமக்குக் கிடைக்காத விருது தொடர்பில் அந்தக் கட்டுரையில் விமர்சித்துள்ளீர்.

ப:- ஆம்.

கே:- நீர் அந்த விருது குறித்து அதிக எதிர்பார்ப்புடன் இருந்தீரா?

ப:- ஆம். எதிர்பார்ப்புடன் இருந்தேன்.

கே:- 2002ஆம் ஆண்டில் நீர் விருது ஒன்றுக்கு விண்ணப்பித்தீர். ஆனால், அந்த விருதும் உமக்குக் கிடைக்கவில்லை.

ப:- இல்லை.

கே:- அதனையடுத்து, அமல் ஜயசேகரவுக்கு எதிராகக் கறுவாதோட்டப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தீரா?

ப:- அவருக்கு எதிராகவும், மேலும் இருவருக்கு எதிராகவும் நான் முறைப்பாடு செய்தேன்.

கே:- அந்த விருதுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை காணாமல் போனதன் காரணமாக சந்தேகத்தின்பேரில் அமல் ஜயசேகரவுக்கு எதிராக நீர் பொலிஸில் முறைப்பாடு செய்தீர். அப்படித்தானே.

ப:- ஆம்.

கே:- விசாரணைகள் இடம் பெறும் என்று நீர் நினைத்தீரா?

ப:- ஆம்.

கே:-நீர் இருந்த காரியாலயம் உங்களுடையதா?

ப:- ஆம்.

கே:- காணாமல் போன கட்டுரை உமது காரியாலயத்தில் வைத்தே கண்டெடுக்கப்பட்டது. அவ்வாறிருக்க, உமது கட்டுரையில் அமல் ஜயசிங்கவை விமர்சித்து எழுதினீர். இறுதியாக நீர் ஒக்ரோபர் 15ஆம் திகதி நீதிமன்றில் சாட்சியமளித்துள்ளீர்?

ப:- ஆம்.

கே:- அதற்குப் பின்னர் மூன்று வாரங்களில் 'சண்டே லீடர்' பத்திரிகையில் சில விடயங்கள் பிரசுரிக்கப்பட்டன. அதில் வெள்ளைக் கொடி வழக்குத் தொடர்பிலான செய்திகளும் பிரசுரிக்கப்பட்டன.

ப:- ஆம்.

கே:- மூன்று வாரங்களும் நீர் கட்டுரைகள் எழுதியுள்ளீர். அதில் சில பத்திரிகைகளை விமர்சித்து எழுதியுள்ளீர்.

ப:- மூன்று வாரங்கள் அல்ல. இரண்டு வாரங்கள். 'டெய்லி மிரர்', 'சண்டே ரைம்ஸ்' போன்ற பத்திரிகைகளை அதில் விமர்சித்துள்ளேன்.

கே:- நீர் 'ஐலன்ட்' பத்திரிகை தொடர்பிலும் விமர்சித்துள்ளீர். நான் ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டும்போது அது எனது தவறு, தொழில்நுட்பக் கோளாறு, ஞாபகமில்லை என்று கூறக்கூடாது.

இதன்போது குறுக்கிட்ட பிரதிவாதி சட்டத்தரணி, சாட்சியை எச்சரிப்பதைத் தவிர்த்துக்கொள்ளும்படி கூறினார். அதற்கு சட்டத்தரணி நலின் லத்துவஹெட்டி, நான் சாட்சியை எச்சரிக்கவில்லை என்றார்.

கே:- மம்போ, ஜம்போ என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளீர். தனது வழக்கு விசாரணை பற்றி உண்மையான செய்திகள் பிரசுரிக்கப்படுவதில்லை என அதில் குறிப்பிட்டுள்ளீர்.

ப:- ஆம். 'ஐலன்ட்' பத்திரிகை ஒரு சந்தர்ப்பத்தில் பிழையான தகவல்களை வழங்கியுள்ளது என அதில் குறிப்பிட்டுள்ளேன்.

கே:- அந்தக் கட்டுரையை வாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (கட்டுரை முதல் பந்தியை பிரெட்ரிகா ஜான்ஸ் வாசித்தார்.)

ஒக்ரோபர் 17ஆம் திகதி 'சண்டே லீடர்' பத்திரிகையில் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு 'ஒஸ்கார்' விருது வழங்கப்பட வேண்டும். ஏனென்றால் தனது வழக்குத் தொடர்பான சரியான தகவல்களை வழங்கியுள்ளது என்று நீர் எழுதியுள்ளீர்?

ப:- ஆம்.

கே:- அதன் பின்னர் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தொடர்பாக விமர்சித்துள்ளீர்.

(2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24ஆம் திகதி 'சண்டே லீடர்' பத்திரிகையில் 13ஆம் பக்கத்திலுள்ள கட்டுரையைக் காண்பித்து ...)

இந்தக் கட்டுரையை நீங்களா எழுதினீர்கள்?

ப:- ஆம்.

கே:- 'நீல உடை அணிந்த பேய்' என தலைப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரையில் உமக்கு விருப்பமான ஒரு விடயம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது உமக்குக் கிடைக்கவிருந்த விருது வேறொரு ஊடகவியலாளருக்குக் கிடைத்ததையிட்டு அவரையும் நீர் விமர்சித்து கட்டுரை எழுதியுள்ளீர்?

ப:- ஆம். எழுதினேன்.

கே:- 2009 ஜனவரி 4ஆம் திகதி முதல் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட ஊடகவியலாளர் அந்த ஆண்டு முடியும்வரை எவ்விதக் கட்டுரையும், செய்திகளும் எழுதவில்லை என்று நீர் உமது கட்டுரையில் தெளிவாகக் கூறியுள்ளீர்.

ப:- ஆம்.

கே:- (சட்டத்தரணி, 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் 12ஆம் பக்கத்தை எடுத்துக்காட்டி) இது மேற்குறிப்பிடப்பட்ட ஊடகவியலாளரால் எழுதப்பட்ட கட்டுரையாகும். இப்படியிருக்க நீர் அந்த ஊடகவியலாளர் தொடர்பில் தவறான கருத்தை மக்களுக்கு முன்வைத்துள்ளீர்.

அந்த ஊடகவியலாளர் 2009 ஆம்ஆண்டுஎந்தவொருசெய்தியோ, கட்டுரையோ எழுதி இருந்தாரா என்பதை இணையதளத்தில் நீர் தேடிப் பார்த்தீரா?

ப:- ஆம். தேடிப் பார்த்தேன். எனக்குக் கிடைக்கவில்லை.

கே:- நீர் 'சண்டே ரைம்ஸ்' மட்டுமல்லாது, 'லங்காதீப' போன்ற வேறு சில பத்திரிகைகள் தொடர்பிலும் விமர்சித்துள்ளீர்.

உமது வழக்குக்குச் சாதகமாக எழுதும் பத்திரிகையை விமர்சிக்காது, மற்றைய பத்திரிகைகள் தொடர்பில் விமர்சித்துள்ளீர் என்று இதிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. அதன்மூலம் அந்தப் பத்திரிகை ஆசிரியர்களைப் பயமுறுத்தி தன் சார்பில் எழுதிப் பிரசுரிப்பதற்கு நீர் முனைகிறீர்.

ப:- இல்லை. ஒருபோதும் இல்லை.

(இதனையடுத்து இந்த வழக்கு நாளை 04ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.)

# லாவ்ஸ் காஸ் விலை குறைப்பு

கொழும்பு, நவ. 03

லாவ்ஸ் காஸின் விலை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 73 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது என நுகர்வோர் விவகார அதிகார சபையின் ஊடகச் செயலாளர் நிபுன் ஏக்கநாயக்க நேற்று 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

இதன்படி லாவ்ஸ் காஸின் புதிய விலை ஆயிரத்து 520 ரூபாவாகும் என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை, ஷெல் காஸின் விலையில் எவ்வித மாற்றமும் கொண்டுவரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஷெல் காஸ் ஒன்றின் விலை ஆயிரத்து 651 ரூபாவாகும்.

# தீபாவளி விசேட பஜனை

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தீபாவளித் தினமன்று காலை 7.30 மணிக்கு விசேட பஜனை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசும்பாலை குறைந்த விலைக்கே கொள்முதல் செய்யும் 'நெஸ்லே'

## கொழுப்பின் அளவுக்கேற்ப பெறுமதியில் வேறுபாடு

அச்சுவேலி, நவ. 3

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கொள் முதல் விலையைவிடக் குறைந்த விலைக்கே "நெஸ்லே" நிறுவனம் குடாநாட்டில் பசும்பாலைக் கொள்வனவு செய்ய உள்ளது.

பாலில் உள்ள கொழுப்பின் அளவுக்கு ஏற்ப லீற்றருக்கு 31 ரூபா முதல் 35 ரூபா வரையே நெஸ்லே நிறுவனத்தால் பாலுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒரு லீற்றர் பாலை 40 ரூபாவுக்குக் கொள்வனவு செய்து வருகிறது.

சர்வதேச ரீதியில் பால்மா மற்றும் பால் உணவு ; சிறுவர் உணவுவகைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நெஸ்லே நிறுவனம் முதற்தடவையாக யாழ். மாவட்டத்தில் இருந்தும் பசும்பாலைக் கொள்வனவு செய்து தனது பால் உணவுத் தயாரிப்புக்குப் பயன்படுத்தவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கறவை மாடுகளை வளர்த்து பசும்பாலை உற்பத்தி செய்யும் பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகள் உரிய முறையில் தமது உற்பத்தியைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் யாழ். மாவட்டத்தில் பாலை கொள்வனவு செய்வதற்கு நெஸ்லே நிறுவனம் முன்வந்தது.

எனினும் பாலில் உள்ள கொழுப்புத் தன்மையின் அளவைப் பொறுத்து 31 ரூபாவில் இருந்து 35 ரூபாவரை கொள்வனவு விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒரு லீற்றர் பாலை 40 ரூபாவுக்குக் கொள்வனவு செய்கின்ற போதிலும் முழுமையாகப் பால் உற்பத்தியாளர்கள் தம்மிடமுள்ள பாலை விற்பனை செய்ய முடியாத நிலையில் 40 ரூபாவிலும் குறைவான விலைக்கு நெஸ்லே நிறுவனத்துக்கு விற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக பால்உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். பாலைப் பயன்படுத்த முடியாமல் நாளாந்தம் ஊற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் குறைந்த விலைக்குத்தானும் அதனை விற்று கறவைப் பசுக்களைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக பண்ணையாளர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

"நெஸ்லே" நிறுவனத்துக்கு பால் விற்பனை செய்வது தொடர்பாக கால்நடை அபிவிருத்திச் சுகாதாரத் திணைக்கள யாழ். மாவட்ட பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி வக்சலா அமிர்தலிங்கம் தகவல் தெரிவிக்கையில்:-

"யாழ். மாவட்டப் பண்ணையாளர்கள் மற்றும் கறவைப் பசுக்களை வளர்ப்பாளர்கள் உற்பத்திச் செலவை அதிகரித்திருக்கும் இன்றைய நிலையில் பாலைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டி ஏற்பட்டிருப்பது கவலைக்குரியது" எனத் தெரிவித்தார்.

நெஸ்லே நிறுவனம் பாலில் உள்ள கொழுப்பின் அளவுக்கேற்ப கொள்வனவு விலையைத் தீர்மானிக்க இருப்பதால் பாலை விற்பனை செய்வோர் விழிப்பாக இருந்து கொழுப்பின் வீதத்தை உரிய முறையில் அறிந்து பாலுக்கு உரிய சரியான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் எச்சரித்தார். (உ)

## உலக விஞ்ஞான தினத்தில் பற்றிக்ஸ் மாணவனுக்கு விருது



யாழ்ப்பாணம், நவ. 3

உலக விஞ்ஞான தினத்தை (நவம்பர் 12) முன்னிட்டு புதுடில்லி இந்திராகாந்தி தேசிய திறந்த பல்கலைக்கழகம், யுனெஸ்கோவுடன் இணைந்து சார்க் நாடுகளிடையே நடத்திய விஞ்ஞானப் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் சி.செல்வநித்திலன் தெரிவாகியுள்ளார்.

'சார்க்' நாடுகளிடையே 4000 இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றிய இப்போட்டியில் இலங்கையிலிருந்து மூவர் உட்பட 41 பேர் இரண்டாம் கட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். நவம்பர் 13 ஆம் திகதியன்று புதுடில்லியில் நடைபெறும் இரண்டாம் கட்டப் போட்டியின் பின் இந்த 41 பேருக்கு விருதுகள் வழங்கப்படும்.

மேலும் இலங்கைப் பௌதிகவியற் கழகம் நாடளாவிய ரீதியில் நடத்திய "இலங்கை பௌதீகவியல் ஒலிம்பியாட் போட்டி"யிலும் இவர் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று தேசிய விஞ்ஞான மன்றத்தின் உலக விஞ்ஞான தின விழாவில் தங்கப் பதக்கம் பெறவுள்ளார். இவ்விழா நவம்பர் 12 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும். தங்கப் பதக்கத்தைத் தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகளுக்கான அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண வழங்குவார். (த-26)

## ஆசிரியர்களை இடமாற்றும் அதிகாரம் கல்வி அமைச்சுக்கு மட்டுமே!

### செயலாளர் சுற்றுநிருபம் மூலம் அறிவிப்பு

பாடசாலை ஆசிரியர்களை இடமாற்றுவது குறித்து மாகாணக் கல்விப் பணிப்பாள ருக்கோ வலயக் கல்விப் பணிப்பாள ருக்கோ அதிகாரம் வழங்கப்படவில்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள சுற்றறிக்கையிலே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக மாகாணப் பாடசாலை ஆசிரியர்களை தேசிய பாடசாலைகளுக்கும் தேசிய பாடசாலை ஆசிரியர்களை மாகாணப் பாடசாலைகளுக்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் தங்களின் விருப்பப்படி இடமாற்றம் செய்துள்ளனர்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறான இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றை ரத்து செய்யுமாறு அவர் கேட்டுள்ளார்.

இனிமேல் பாடசாலை ஆசிரியர்கள் இடமாற்றம் குறித்து கல்வி அமைச்சுதான் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (ஒ-9)

## இராணுவ அதிகாரிகளுக்கு இனி பச்சைத் தொப்பி!

ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள் இனி கடும் பச்சை நிறம் கொண்ட தொப்பிகளை அணிவார்கள் என்று இராணுப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

நேற்று முதல் இந்தப் புதிய தொப்பி அணியும் நடைமுறை வந்துள்ளது.இரண்டாம் லெப்டினன்ட் தரத்திற்கு மேலான அதிகாரிகளே இந்த விசேட கடும் பச்சை நிறம் கொண்ட தொப்பிகளை அணிவார்கள்.

சுமார் ஆறு தசாப்த காலமாக பயன்பாட்டில் இருந்து வந்த காக்கி நிறத்தொப்பி, பிரித்தானிய இராணுவத்தைப் பின்பற்றியே இங்கும் புழக்கத்தில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## மின் தாக்கி சிப்பாய் பலி!

சாவகச்சேரி, நுணாவிலில் மின்சாரம் தாக்கியதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். நேற்று மாலை 4.30 மணியளவில் மின்சார வயரில் துவாயைப் போட்ட சமயமே இவர் மின்தாக்குதலுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

நுணாவில் படை முகாமைச் சேர்ந்த எச்.ஏ.நவரட்ண (வயது 42) என்ற சிப்பாயே பலியானவர் ஆவார். (ஒ- 78-319)

## காரைநகர் மாணவருக்கு கல்விக் கருத்தரங்கு

இவ்வாண்டு ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு நாளைமறுதினம் தொடக்கம் மூன்று தினங்கள் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வியில் நடைபெறும்.

யாழ். முன்னணி ஆசிரியர்களினால் நடத்தப்படவுள்ள இந்த இலவச கல்விக்கருத்தரங்கை ஈ.எஸ்.பி. நாகரத்தினம் நிறுவனம் அனுசரணை வழங்க உள்ளது. (ஒ-250)

## மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு எதிர் வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக் கழக கனகசபாபதி அரங்கில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி கலந்து கொள்வார்.இந்நிகழ்வில் வரவேற்புரையை ரி.தயானந்தியும் தலைமையுரை எஸ்.சொலமனும் நிகழ்த்துவர். (204-319)

## ஜேர்மன் நாடாளுமன்றக் குழு நாளை யாழ்ப்பாணம் வருகிறது

யாழ்ப்பாணம், நவ. 3

ஜேர்மனியின் நாடாளுமன்றக் குழுவினர் மற்றும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜென்ஸ் புளொட்னர் ஆகியோர் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

இந்தக் குழுவினர் யாழ்.மாவட்டச் செயலகத்தில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம் பெறும் கலந்துரையாடலில் பங்கேற்பார்கள். மாவட்டச் செயலகத்தின் சார்பில் மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் இதில் பங்கேற்பார். இக் கலந்துரையாடல் முற்பகல் 11 மணி முதல் 12 மணிவரை இடம் பெற உள்ளது. இதில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் பங்கு பற்ற மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் இடம் பெற்று வரும் மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக வும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் இதில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த மாதம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் பங்குபற்றிய சிவில் சமூகப் பிரதிநிதிகள் பல பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டியமை குறிப்பிடத்தக்கது. (த-15)

## சேதமடைந்த வீதியில் பயணிப்பதில் சிரமம்

நெடுந்தீவு, நவ. 3

நெடுந்தீவு மேற்கு, குருக்கள் மடம் கரவணன்தாலை வீதி தேசமடைந்துள்ளது.

இந்த வீதியைத் திருத்தியமைக்க இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மீனவர்கள் உட்பட பனங்காணிமுனை சுடலைக்குச் செல்பவர்கள் இந்த வீதியைப் பயன்படுத்த வேண்டியுள்ளதாகவும் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக எவ்வித புனரமைப்புப் பணி களும் இடம்பெறவில்லை.

தற்போது பெய்து வரும் மழையால் இந்த வீதி முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியைத் திருத்தியமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204-111)

## தனியார் பஸ் நிலையத்துக்கு மின்னிணைப்புப் பணிகள்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ்.முற்றவெளியில் உள்ள தனியார் பஸ்தரிப்பு நிலையச் சுற்றாடலுக்கு மின்சார வசதியை ஏற்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதற்கென இப்பகுதியில் மின்சாரக் கம்பங்கள் நடும் பணியில் தற்போது மின்சார சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் தனியார் பஸ்கள் அனைத்தும் இந்த தரிப்பிடத்தில் இருந்தே ஆரம்பித்து வருகின்றன.

இரவு வேளையில் இப்பகுதி மின்சார வசதி இல்லாமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-26)

## வடமராட்சி கிழக்கில் மீன்பிடி அபிவிருத்திக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி வழங்கும்

யாழ்ப்பாணம், நவ. 3

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு உட்பட்ட பிரதேசங்களில் மீன்பிடி அபிவிருத்திக்கு பல அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுண்டிக்குளம் பிரதேசத்தில் இரு குடும்பங்களுக்கு மீன்பிடி வலைகளை 'பாசிக்' நிறுவனம் வழங்க உள்ளது. கட்டைக்காடு பிரதேசத்தில் 28 குடும்பங்களுக்கு 'பாசிக்' நிறுவனமும், 80 குடும்பங்களுக்கு 'போரூட்' நிறுவனமும் மீன்பிடி வலைகளை வழங்க உள்ளன.

இதேபோல் வெற்றிலைக்கேணி பிரதேசத்தில் 'பாசிக்' நிறுவனம் 24 குடும்பங்களுக்கு மீன்பிடி வலைகளை வழங்கவுள்ளது. சிறுவர் பாதுகாப்பு நிதியம் இங்கு 100 குடும்பங்களுக்கும் கட்டுமரம் மற்றும் மீன்பிடி உபகரணங்களை வழங்கவுள்ளது.

மேலும் ஆழியவளை பிரதேசத்தில் இதுவரை 55 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 258 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும். உடுத்துறை பிரதேசத்தில் 256 குடும்பங்களுக்கு இதுவரை உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 263 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன. வதிரி பிரதேசத்தில் 57 குடும்பங்களுக்கு இதுவரை மீன்பிடி உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன. இன்னும் 235 குடும்பங்களுக்கு உதவிகள் தேவைப் படுகின்றன.

மருதங்கேணி பிரதேசத்தில் 56 குடும்பங்களுக்கும் தாளையடி பிரதேசத்தில் 44 குடும்பங்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு பிரதேசங்களிலும் 175 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும். செம்பியன் பற்று பிரதேசத்தில் 44 குடும்பங்களுக்கும், மாமுனை பிரதேசத்தில் 120 குடும்பங்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு 121 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பிரதேசங்களில் 'பாசிக்', 'போரூட்', சிறுவர் பாதுகாப்பு நிதியம், ஐ.நா. அபிவிருத்தித் திட்டம், சோ ஆ ஆகிய நிறுவனங்களே உதவிகள் வழங்கியுள்ளன. (த-15)

## அஞ்சல் தினப்போட்டியில் யாழ்.அலுவலகம் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ. 3

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் அகில இலங்கை ரீதியில் யாழ். பிராந்திய அஞ்சல் நிர்வாக அலுவலகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

தபால் சேவையின் வளர்ச்சி மற்றும் அதன் நிர்வாகக் கட்டமைப்பு, சுகாதாரம் போன்றவற்றை வைத்து இடம்பெற்ற போட்டியில் யாழ்.பிராந்திய அஞ்சல் நிர்வாக அலுவலகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இதனைவிட யாழ். பிரதம அஞ்சல் அலுவலகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

போட்டியில் தெரிவான யாழ். பிராந்திய தபால் சேவை நிர்வாக அலுவலகம் மற்றும் யாழ்.பிரதம தபாலகம் ஆகியவற்றுக்கான விருதுகளை தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க வட மாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர் வி:குமரகுருவிடம் வழங்கினார். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது மணிகண்ட சபையைச் சேர்ந்த நிமலன் அவர்களின் அன்புத் தந்தை

**சாந்தலிங்கம் யோகராசா**

அவர்கள் காலமானதையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீ ஐயப்பன் மணிகண்ட சபை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்

முதுகலைமாணி-சைவசித்தாந்தம்(MA in Saiva siddhanta)
முதுகலைமாணி-தமிழ்(MA inTamil)
முதலாம் பகுதிப் பரீட்சை (First semester)

மேற்படி கற்கை நெறிகளுக்கான பரீட்சை இந்த மாதம் 22.11.2010 ஆரம்பமாகும்.இதற்குத் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.பரீட்சை விண்ணப்பப்படிவங்களைப் பீடாதிபதி அலுவலகம், உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 10.11.2010க்கு முன்னர் பீடாதிபதி அலுவலகம், உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டையை 15.11.2010 இல் இருந்து பீடாதிபதி அலுவலகத்தில்பெற்றுக்கொள்ளலாம் .

பதிவாளர்
02.11.2010 (சி/572449)

## வேப்பமரம் தறித்து அகற்றுவதற்கான கேள்விலை

நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்திலுள்ள வேப்பமரத்தை வேருடன் அகழ்ந்து கொள்வனவு செய்து அகற்றுவதற்கான கேள்வி இத்தால் கோரப்படுகின்றது. இதனைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் அதற்கான கேள்விப்பத்திரத்தை உரிய கட்டணத்தைச் செலுத்தி நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 03.11.2010 தொடக்கம் 10.11.2010 பி.ப 3 மணி வரை.
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 11.11.2010 மு.ப. 10 மணி வரை.
கேள்வி திறக்கப்படும் திகதி : 11.11.2010 பி.ப 2.30 மணி.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் விலாசத்துக்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இட வேண்டும். மறு பிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற் வரி | NBT |
|---|---|---|---|---|
| 01 | வேப்ப மரம் அடி வேருடன் அகழ்ந்து கொள்வனவு செய்தல் | 500.00 | 60.00 | 15.00 |

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.
02.11.2010 (சி/572434)

திரு.மே.சாந்தசீலன்,
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

## புதிய பிரிவுகள் ஆரம்பம் !!!
(யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் நிறுவனங்களில்)

**B.Sc in Information Communication Technology**
**(Foundation Degree Programm - 1st Year Jaffna 2nd & 3rd Year U.K, Netherland, Hungary Universities/Colleges)**

**First Year Modules / Syllabus :-**

Introduction To Information Communication Technology
Computer Applications
Business Communication (spoken English)
Computer Programming
Business Mathematics
Concepts Of e - commerce
Multimedia & Designing
Web Programming
Operating Systems & Networking
Computer Hardware Repairing
Mobile Phone Repairing
ICT Security and Hacking

மிகக்குறைந்த கட்டணத்தில் பல்வேறு பாடப்பரப்புக்களை கற்பதற்கு உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு எமது நிறுவனத்தில் மட்டுமே...!!!

Fees :- Rs.30000/= only *(Installment Payment)* *Durations :- 8 Months*

தவணை முறையில் கட்டணம் செலுத்தமுடியும் முடிவுத் திகதி:- 10/11/2010
வீசா ஏற்பாடுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்

மேலதிக விபரங்களுக்கு :-(யாழ்ப்பாணம்)
UNI - ICT Campus
No - 83,Palaly Road,Kantharmadam,
Jaffna.T.P - 021 321 6433

மேலதிக விபரங்களுக்கு :-(மானிப்பாய்)
UNI - ICT Education Trainers
Jaffna Road, Manipay.
T.P No - 021 7429325 / 0777 110862
(மானிப்பாய் பிரதேசசபை முன்பாக)

Website :- www.uniictcampus.com

## தீபாவளியை முன்னிட்டு
## மாபெரும் மலிவு விற்பனை



சீக்குன்ஸ் சாறிகள், சில்க் சாறிகள், பஞ்சாபித் துணிகள், விதம் விதமான புடைவைகள் வாருங்கள் வந்து வேண்டுங்கள்!நாடுங்கள்!!

தீபாவளியினை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடியின் விசேட விலைக்கழிவுடன் சகல வகையான ஆடைகளையும் பெற்றிடலாம்.

இரண்டு பஞ்சாபிகள் வாங்குவோருக்கு ஒரு பஞ்சாபி **இலவசம்**

**அதிரடிச் சலுகைகள்**
ஆண்கள் 10,000 ரூபாவிற்கு மேல் ஆடை வாங்குபவர்களுக்கு ரீசேட் இலவசம்

20,000/- மேல் புடைவைகள் வாங்குவோருக்கு ஒரு (பான்சி) சாறி **இலவசம்**

மற்றும் பல வகையான புடைவைகள் அதிக விலைக் கழிவுடன்...



**மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்**
நவநாகரிக நவீனமய ஆடைகள், புத்தம் புதிய சாறி வகைகள் நங்கையருக்கேற்ற ஜவுளிகள், அனைத்துக்கும் அதி சிறந்த உன்னதமான இடம்
**Millennium Fashion & Bombay Bazaar**
No.10,11, Power House Road, Grand Bazaar, Jaffna. (மலாயன் கபே முன்பாக) T.P: 021 222 9399

## தேவை

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர்கள் தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும்.
0773427843

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஜெயந்தினி ஜெயக்குமார்
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் இராசையா கோகிலராஜா**

அவர்களின் மறைவினால் துயரத்தில் இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆசிரியர் கழகம்*
*யா/அருணோதயக் கல்லூரி,*
*அளவெட்டி.*
(105526)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் நடேசன்



(கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை)

கிளானை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் நடேசன் நேற்று (02.11.2010) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கெங்காதேவியின் அன்புக் கணவரும் உதயசேகர், உதயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூலோகசேகரம் மற்றும் பவளலட்சுமி, தன லட்சுமி, மங்கையர்க்கரசி, புவனேஸ்வரி, யோகேஸ்வரி ஆகி யோரின் அன்புச் சகோதரனும் கிரிசாந்தியின் அன்பு மாமனாரும் சகானாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கைதடியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

க.சண்முகலிங்கம்,
விக்னேஸ்வரா வித்தியாலயம் முன்பாக,
பிள்ளையார் கோயில் வீதி,
கைதடி கிழக்கு, கைதடி. (98704)

தகவல் :
ந.உதயசேகர் (சூட்டி),
ந.உதயகுமார் (குட்டான்).
0777571961,
0773637836

## மரண அறிவித்தல்

### முத்தழகு முனியாண்டி

(முன்னாள் உரிமையாளர், முனியாண்டி உணவகம், கரடிப்போக்கு, கிளிநொச்சி)



மீசாலை மேற்கு, பங்களா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தழகு முனியாண்டி நேற்று (02.11.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமுதவள்ளியின் அன்புக் கணவரும் உதயணன் (கட்டார்), Dr.கோபாலகிருஷ்ணன் (வைத்திய கலாநிதி, அக்கராயன் பிரதேச வைத்தியசாலை), மலர் (ஆசிரியை, கிளி/ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை), சசீகரன் (அவுஸ்திரேலியா), துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவா, நந்தினி (ஆசிரியை, அக்கராயன் ம.வி.), சதீஸ்குமார் (நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), மெற்றில்டா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் குணாளினி, தனுஷன், கயழினி, மதுமிதா, குணவித்தியன், ஜனோஜன், ஜெனீபர், நிசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்களா வீதி,
மீசாலை மேற்கு,
சாவகச்சேரி.
T.P. : 0779907614

தகவல் :
குடும்பத்தினர்.
(105536)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இதுவும் ஓர் அரசியல் விசித்திரம்!

அரச நிர்வாக சேவைக்கான எழுத்துப் பரீட்சையில் தமிழ்மொழிமூலம் தோற்றியோரில் ஒருவரேனும் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படவில்லை. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவான மொத்தம் 257 பேரும் சிங்கள மொழி மூலம் தோற்றியவர்களே.

2009 ஆம் ஆண்டுக்குரிய திறந்த போட்டிப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையிலேயே இந்த 257 பேர்களின் விவரமும் அறிவிக்கப்பட்டிருக் கிறது. பரீட்சைத் திணைக்களமே இந்த எழுத்துப் பரீட்சையை நடத்தியது.

பரீட்சை முடிவுப்படி, சிங்கள மொழி மூலம் தோற்றிய 257 பேர் மட்டுமே இலங்கை நிர்வாக சேவைக்கான நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது தமிழ்மொழி மூலம் தோற்றிய தமிழ், முஸ்லிம் பரீட்சார்த்திகள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தையும் விசனத்தை யும் உண்டாக்கியுள்ளன.

இந்த வருடத்தில் மட்டும் இந்தப் பாரபட்சமான பரீட்சை முடிவும், நியமனம் பெறுவதற்கான தகுதியும் தமிழ் முஸ்லிம் பரீட்சார்த்திகளிடமிருந்து தட்டிப் பறிக்கப்படவில்லை. 2008 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சையிலும் இதே பல்லவிதான் பாடப்பட்டிருக்கிறது.

அடுத்தடுத்த வருடங்களில் அரச நிர்வாக சேவையில் தமிழ்மொழி மூலம் பணியாற்று வதற்கு எவரும் சேர்க்கப்படவில்லை என்பதை இது உள்வீட்டுச் சமாசாரம், திட்டமிட்ட வஞ்சகத்தனம் அல்லது சூழ்ச்சி என்று வரைவிலக் கணம் வகுப்பதில் தவறு எதுவும் இல்லை.

இதன் விளைவு, தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் அரச அதிகார அலுவல்களை மேற்கொள்ள சிங்களம் தெரிந்தவர்கள் என்ற பெயரில் அல்லது தேர்ச்சி பெற்றவர்கள் என்ற பெயரில் அதிக சிங்கள அதிகாரிகளை நிர்வாகத்தில் இருத்துவதற்கான சதி என்றும் கொள்ளலாம்.

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய சகல தமிழ், முஸ்லிம் பரீட்சார்த்திகளும் சிங்கள மொழியில் தேர்ச்சி குன்றியவர்கள் என்று மதிப்பீடு செய்யவும், அந்த மதிப்பீடு சரியானதே என்றும் நிலைநாட்டவும் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள் முயல்வர் என்பதில் சந்தே கம் இல்லை.

இதனை உன்னிப்பாக, உள்ளார்ந்த ரீதியாக நோக்குமிடத்து தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் தமிழர்களோ, முஸ்லிம்களோ நிர்வாக அதிகாரிகளாகக் கடமை புரிவதை இயன்ற மட்டும் குறைத்துக் கொள்வதற்கான திட்டமே இது என்பதனை எவரும் இலகுவில் உணர்ந்துகொள்ளலாம்.

இது, 1956 ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்பட்ட தனிச்சிங்களச் சட்டத்தையே ஞாபகப்படுத்துகின்றது. மீண்டும் அந்தச் சகாப்தத்துக்கு இட்டுச் செல்லும் ஒரு மறைமுக ஏற்பாடு, முயற்சி என்பதில் வாதப் பிரதிவாதங்களுக்கு இடமிருக்க முடியாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியில் அரச நிர்வாக அலுவல்கள் நடை பெறும் என்ற அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளை வேறு வடிவத்தில் சிதைக்கும் முயற்சி இது.

13 ஆவது திருத்தத்தின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த காணி மற்றும் பொது நிர்வாக அதிகாரங்கள் சென்ற மாதம் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புக்கான 18 ஆவது திருத் தத்தின் மூலம் பிடுங்கி எறியப்பட்டு விட்டன.

அதே திசை சென்று உள்ளூராட்சிச் சபைகள் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட திருத்தச் சட்ட மூலம் மிகக் குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் என்று சட்ட வல்லுநர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வடக்கு, கிழக்கில் அரச நிர்வாகப் பதவிகளில், தமிழர்கள், முஸ்லிம்களின் எண்ணிக்கையைக் குறைத்து சிங்கள அதிகாரிகளை மேலதிகமாகக் குவிப்பதற்கான திட்டத்தின் ஒரு பகுதியே, முன்னோடியான சூழ்ச்சியே அரசாங்க நிர்வாக சேவைக்கான பரீட்சை முடிவுகளின் விசித்திரம்.

இதுகுறித்து பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றுக்கு அரசு ஏற்பாடு செய்யுமா? அவ்வாறு நடத்தப்படாலும் கூட, அது உதைபந்தாட்டப் போட்டியில் தம்பக்கம் தாமே 'கோல்' (Same side Goal) அடிப்பதாகவே முடியும்.

(நேற்றைய(02.11.2010) ஆசிரியர் தலையங்கத் தில் 8000 + 8000 = 16,000 இளைஞர்கள்...என்ற வரி கணினித் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தவறுதலாக இடம்பெற்று விட்டது. 800+8000=8800 என்பதே சரியானதாகும்.)

# கோதுமை மாப் பண்டங்களின் விற்பனை வைத்தியசாலைகளில் தடைசெய்யப்படும்

## சுகாதார அமைச்சர் நடவடிக்கை

கொழும்பு, நவ. 3

வைத்தியசாலைகளின் உணவகங்களில் எதிர்காலத்தில் கோதுமை மாவினால் செய்யப்பட்ட தின்பண்டங்களான பாண், பணிஸ் மற்றும் கேக் போன்றவை விற்பனை செய்யப்படுவதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரிசிமாவினால் ஆன உணவுப் பொருள்களை அதிகமாக மக்கள் சாப்பிடும்படியாக ஊக்குவிக்கவும் கோதுமை மாவினால் ஆன உணவுப் பொருள்கள் சாப்பிடுவதைக் குறைக்கும்படி செய்யவும் இந்த நடவடிக்கையை எடுக்க சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முடிவு செய்திருப்பதாக பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் சுகாதார அமைச்சில் நடைபெற்ற அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான ஆய்வின் போது அமைச்சர் மருத்துவமனைகளின் பணிப்பாளர்களுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் உடல் பருமனாதல் போன்ற வியாதிகளுக்கு கோதுமைமாவினாலான உணவுகளே காரணமாக இருப்பதில் அவைகளைத் தடை செய்ய எடுக்கப்படும் நடவடிக்கை வரவேற்கத்தக்கது என்று கூட்டத்தில் கலந்துகொண்ட மருத்துவர்கள் பலர் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த நடவடிக்கை வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் வெளிநாட்டு உணவுப் பொருள் இறக்குமதிக்கு ஒதுக்கப்படும் நிதி வெகுவாக குறைய வழி பிறக்கும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ப)

# மட்டக்களப்பு வலய அதிபர்கள் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நான்கு நாள் சுற்றுலா



நேற்று உதயன் அலுவலகத்துக்கு வருகை தந்த மட்டக்களப்பு அதிபர்கள் குழுவினர் உதயன் பிரதம ஆசிரியருடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (த)

யாழ்ப்பாணம், நவ.3

'யுனிசெவ்' அனுசரணையுடன் மட்டக்களப்பு மத்தி கல்விவலய அதிபர்கள் நான்கு நாள் கல்வி முகாமைத்துவச் சுற்றுலாவை மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த 31 ஆம் திகதி யாழ்ப்பாண்ணத்துக்கு வந்த இந்தக் கல்விக் குழுவினர் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.பல்கலைக் கழகம், கொக்குவில் இந்துக் கல்லூரி, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மற்றும் கைதடி ஊனமுற்றோர் இல்லத்துக்கும் விஜயம் செய்துள்ளனர்.

அத்துடன் இந்தக்குழுவினர் நேற்று பிற்பகல் 2 மணியளவில் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்துக்கும் வருகை தந்து உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனுடன் கலந்துரையாடினார்கள்.

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் அல் ஹாஜ் ஜெயினுதீன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.நஜீம், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான எல்.ஆப்தீன், எம்.சுபைர் ஆகியோர் உட்பட 50 அதிபர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகித்துள்ளனர். (த-9)

# ஒரு கிலோ தேயிலைக்கான ஏற்றுமதி வரி 3 ரூபா 50 சதம்

கொழும்பு, நவ. 3

இம்மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஏற்றுமதி செய்யப்படும் ஒவ்வொரு கிலோ தேயிலைக்கும் 3 ரூபா 50 சத வரியை அறவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் 2010 ஒக்ரோபர் 27 ஆம் திகதி 167/14 இலக்கம் கொண்ட விசேட வர்த்தமானியின் மூலம் இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இதுவரை தேயிலை ஏற்றுமதி தொடர்பாக 2 வீதமான மேலதிக வரி அறவீடொன்று மாத்திரமே அறவிடப்பட்டு வந்துள்ளதாகவும், அரசின் இப் புதிய தீர்மானம் காரணமாக உலகச் சந்தையில் இலங்கைத் தேயிலை தொடர்பான விலை மட்டம் மேலும் ஐந்து முதல் ஆறு ரூபாவாக உயர்வடையக் கூடுமெனவும், அது இலங்கைத் தேயிலை தொடர்பாக பாதகமான நிலைப்பாடொன்றை ஏற்படுத்திவிடக் கூடுமெனவும் தேயிலை ஏற்றுமதித் துறை சார்ந்த நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (த-22)

## யாழ். இந்து மகளிர் விஞ்ஞான தின விழா

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு விஞ்ஞான தின விழாவும் 'முகை' சஞ்சிகை வெளியீடும் மாணவி செல்வி தே.கிருஷ்ணப்பிரியா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு யாழ்.பல்கலைக் கழக விலங்கியல் துறைத் தலைவர் திருமதி நித்தியகௌரி ராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

'முகை' சஞ்சிகைக்கான ஆய்வுரையை ஆசிரியவள முகாமையாளர் ஞா.இரட்ணசிங்கம் வழங்கவுள்ளார். (த-72)

# மின்வசதியற்ற வீடுகளின் விவரங்களை 9 ஆம் திகதிக்கு முன்னர் அறியத்தருக

## எரிசக்தி அதிகார சபை அறிவிப்பு

கொழும்பு, நவ. 3

மின் வசதியற்ற வீடுகளின் உரிமையாளர்கள் அனைவரும் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் அது பற்றித் தமது பிரிவுக் கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்குமாறு எரிசக்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் இதுவரை இலங்கையில் ஐந்து இலட்சத்து 30 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சார வசதி கிடைக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இவற்றுள் கஷ்டப் பிரதேசங்கள் மற்றும் வடக்கின் தீவுகளில் வாழும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வரையான குடும்பங்களுக்கு தேசிய மின் வழங்கல் தொகுதி மூலம் மின்சாரத்தை வழங்குவதில் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர்களுக்குச் சூரிய சக்தி மற்றும் சிறு நீர்மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் மின்சாரம் வழங்கும் திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் அனைவருக்கும் மின்சாரத்தை வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. மேலும் இதுவரை 87 வீதமானோருக்கு மின் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன - என்றும் அவர் கூறினார். (த-22)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 18 | | 04.11.2010 வியாழக்கிழமை |
| திதி: | : | திரயோதசி பி.ப. 03.09 வரை |
| நட்சத்திரம் | : | அத்தம் பி.ப. 02.44 வரை |
| சுபநேரம் | : | 07.34 - 09.04 வரை |
| ராகுகாலம் | : | 01.34 - 03.04 வரை |

# தனக்குத்தானே தீ மூட்ட முயன்றவர் யாழ்.பொலிஸாரால் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் ஒருவர் நேற்றுக்காலை கடமை நேரத்தில் தனக்குத்தானே பெற்றோல் ஊற்றித் தீமூட்ட முற்பட்டார் எனக் கிடைத்த தகவலையடுத்து யாழ். பொலிஸார் அவரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் தொழில் செய்யும் பகுதியில் தனக்குத் தானே பெற்றோலை ஊற்றி பற்றவைக்க முற்பட்ட வேளை சக ஊழியர்களால் காப்பாற்றப்பட்டார்.

அங்கிருந்தவர்கள் கொடுத்த தகவலையடுத்து அங்கு வந்த யாழ். பொலிஸார் அவரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அலுவலக விவகாரங்களில் இடம்பெற்ற குளறுபடிகள் காரணமாக கடந்த சில தினங்களாக மேற்படி நபர் பல சிக்கல் எதிர்நோக்கி மனமுடைந்து காணப்பட்டார் எனப் பணியாளர்கள் தெரிவித்தனர். (த-26-135-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

சின்ன ஊறனி,மாவடிப்பிள்ளையார் கோயில் வீதி, மட்டக்களப்பு என்னும் முகவரியைச் சேர்ந்த அன்ரன் பீரிஸ் அன்ரன் உதயகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (711014942V),சாரதி அனுமதிப்பத்திரம்,காப்புறுதி, வரிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் உரும்பிராய்க்கும் மருதனார்மடத்திற்கு இடையில் காலை (02.11.2010) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

சென்.மைக்கல் சேச் லேன்,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
தொடர்புகளுக்கு:-
0776049148, 0770789808

# கைத்தொழிலாளர்களுக்கான இயந்திர உபகரண கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்ப்பாணம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் சிறிய, நடுத்தரக் கைத்தொழிலாளர்களுக்கான இயந்திர உபகரணங்களின் கண்காட்சியும் கருத்தரங்கும் எதிர்வரும் 16ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த இயந்திர உபகரணக் கண்காட்சியில் தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்த விரும்புபவர்கள் தமது இயந்திர உபகரணங்களின் விவரத்தை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு அறியத்தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஏ-10)

# 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

றிச்மென்-மரியசுகன்ஜா தம்பதிகளின் செல்வப் புதல்வி றிகன்யா (றிசுக்குட்டி) தனது முதலாவது பிறந்த தினத்தை "மரிய இல்லம்" புனிததோமையார் ஒழுங்கை, கடற்கரை வீதி, பருத்தித்துறையில் உள்ள தமது இல்லத்தில் இன்று (03.11.2010) புதன்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவர் பல்கலையும்பெற்று சீருடன் சிறப்பும் பெற்று வாழ அப்பா றிச்மென், அம்மா மரிய சுகன்ஜா, அம்மப்பா தேவராசா, அம்மம்மா மரிய சுசீலா, அப்பப்பா ஆனந்தராசா, அப்பம்மா மேரி செல்வராணி ,பெரியமாமா சுதன்(லண்டன்), சின்னமாமா சுஜீவன் (புறூனே), பெரிய அத்தை சாந்தகுமாரி (லண்டன்), அத்தை நிதர்சனா, தொட்டப்பா ஒலிவர் கிறிஸ்ரி, தொட்டம்மா டிலாந்தி ஆகியோருடன் உற் றார், உறவினர், நண்பர்களும் வாழ்த்தி நிற்கின்றார்கள்.

தகவல்:
S.தேவராசா (அம்மப்பா).

மரிய இல்லம்,
புனித தோமையார் ஒழுங்கை,
கடற்கரை வீதி,
பருத்தித்துறை




# காணாமற்போன குருநகர் மீனவரின் சடலம் மீட்பு

வண்ணை, நவ.3

பாலைதீவுக் கடலில் கடந்த சனிக்கிழமை காணாமற் போயிருந்த குருநகர், றெக்ளமேசன் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த மீனவரான பிரான்சிஸ் றொமானியஸ் (வயது 35) என்பவரது சடலம் நேற்று மீட்கப்பட்டது.

கடந்த இரு தினங்களாக உறவினர்கள் படகுகளில் சென்று தேடுதல் நடத்திய போதும், சடலத்தைக் கண்டுபிடிக்க முடியாமல்போனது. நேற்றைய தினம் தொழிலுக்குச் சென்ற மீனவர்களே சடலத்தை மீட்டு வந்தனர்.

கல்முனை ஒருகரை முனைமரம் பகுதியில் வைத்தே மோசமான நிலையில் சடலம் மீட்டு எடுத்துவரப்பட்டது.

மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையான றொமனியஸின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-160-57)

# சிறுவர் தின விழா

யாழ்ப்பாணம்,நவ.3

சர்வதேச சிறுவர் தின விழா கடந்த செவ்வாய்க்கிழமை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மா.முரளி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச்செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொண்டர்.

சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் சுகாதர வைத்திய அதிகாரி டி. ஜெயக்குமார் சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி சி. கந்தசாமி, மானிப்பாய் காவல் நிலையப் பொறுப்பதிகாரி பி.சந்திரபாலா ஆகியோர் கலந்து கொண்டனர். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் சிறந்த சிறுவர் சமூகம், புத்தாக்கக் கண்காட்சிப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு,தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய புனித கென்றியரசர் கலூரி, யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கும் சமுர்த்தி சிறுவர் கழகங்களுக் கிடையிலான கலாசார மற்றும் இலக்கிய போட்டிகளில்வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகளும், கௌரவிப்பும் இடம்பெற்றன. (204-313)

## ஞானச்சுடர்

யாழ்ப்பாணம், நவ.03

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச் சுடரின் ஐப்பசி மாத இதழ் வெளி வந்துள்ளது.

வழமை போல இம்முறையும் சமயம் சார் கட்டுரைகள், பிரசித்தி பெற்ற ஆலய வரலாற்றுக் குறிப்புகள் எனப் பல்வேறு அம்சங்களைத் தாங்கி ஞானச்சுடர்

# வரணி நூலக பரிசளிப்பு விழா

கொடிகாமம், நவ.3

வரணி பொதுநூலகம் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தும் நிறைவு நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வரணி உப அலுவலகப் பொறுப்பதிகாரி திருமதி மாலதி மோகனதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை முன்னாள் செயலாளர் ந.பாலச்சந்திரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கியூடெக்-கரித்தாஸ் பணிப்பாளர் அருட்திரு ஏ.எஸ்.பேனாட் றொக்னோ, சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் வே.சிவராசலிங்கம், தென்மராட்சி கிழக்கு பல நோ. கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் சி.தேவகுமார் மற்றும் காவகச்சேரி பிரதேச சபை பிரதம முகாமை உதவியாளர் திருமதி கௌ.விக்னகுமாரி, கௌரவ விருந்தினர்களாக கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை அதிபர் எஸ்.தயாபரன், ஓய்வுபெற்ற நூலகர் எஸ். பாலப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொள்வர். (204-122)

# சைவ சித்தாந்த அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.3

மெய்கண்ட தேவர் குரு பூசைத்தினத்தையொட்டி கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களுக் கிடையே நடத்தப்படும் சைவ சித்தாந்த அறிவுப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரியிலும், நிர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சைவப் புலவர் சங்கத்தின் செயலாளர் செ.கந்த சத்தியதாசன் கேட்டுள்ளார் (ஒ-9).


## விற்பனைக்கு

கோட்மெசின் (கறுப்பு) போல்டிங் மெசின், கட்டர் விற்பனைக்கு உண்டு மூன்றும் சேர்த்து எடுக்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும் விலை பேசித்தீர்மானிக்கலாம் பொருள்கள் இருக் கும் இடம் கொழும்பு13.

தொடர்புகளுக்கு: ரஜனி 0722159360

## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கிலத்தில் கதைக்க,இலக்கணம், கடிதம், கட்டுரை O/L., 2011 பிரிவு மாணவர்களுக்கு திங்கள், செவ்வாய் மாலை 6.30 இற்கு By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி,பிளாக் வீதி சங்கானை.
Tel-0776751649


## சேவைநலன் பாராட்டு



P.T.P.தஜிதரன்
(முன்னாள் கிராம சேவையாளர், J/125)

கொக்குவில் மேற்கு J/125 கிராம சேவகர் பிரிவில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி மாற்றலாகிச் சென்ற கிராமசேவையாளர் P.T.Pதஜிதரன் அவர்கள் பல உயர்வுகள் பெற்று தம் சேவையினை மென்மேலும் தொடர அவரை அன்புடன் பாராட்டி வாழ்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
J/125 கிராம மக்கள், கொக்குவில் மேற்கு


# பிரவுண்ஸ் வழங்கும் தீபாவளி சலுகை விற்பனை



இத்தீபாவளித் திருநாளில் நீங்களும் சொந்தமாக தொழில் ஒன்றை ஆரம்பியுங்கள்

SHARP நிழற்பிரதி இயந்திரத்தினை

ரூபா 99,000/- +VAT 12% இற்கு வாங்கி






இச்சலுகை நவம்பர் 5 வரை மட்டுமே
இறுதி வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

- 01 வருடம் அல்லது 50 000 பிரதிகளுக்கான பிரவுண்ஸ் உத்தரவாதம்
- விற்பனையின் பின்னான 01 வருட இலவச திருத்தல் மற்றும் பராமரிப்பு சேவை

எப்போதும் தரமான உள்ளீடுகள் மற்றும் உதிரிப்பாகங்களையே (TONER & SPARES) நாடுங்கள்

BROWN & CO.PLC.IBS இன் அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள்

டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்
இல.62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(ஸ்ரான்லி வீதி, சம்பத் வங்கி முன்பாக)
தொ.பேசி: 021 222

# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 695 திகதி 01-11-2010

வெற்றி எண்கள்

06 18 39 45 J

ஜக்பொட் பரிசு ரூ. 11,058,040/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 11,058,040/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 16 | 2,000/= | 32,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 419 | 1,000/= | 419,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 680 | 1,000/= | 680,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 17212 | 60/= | 1,032,720/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8043 | 40/= | 321,720/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 203239 | 20/= | 4,064,780/= |
| | | மொத்தம் ரூ. | 7,350,220/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 600504048-6-26 |
| அம்பாந்தோட்டை | 600502343-4-04 |
| பதுளை | 600506892-5-05 |
| வவுனியா | 600507997-5-45 |
| மாத்தறை | 600518410-0-00 |
| கொழும்பு | 600510237-7-07 |
| கொழும்பு | 600518636-5-15 |
| மொனராகலை | 600501677-2-32 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,750,220/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 11,607,070/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 04 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் மீண்டும் டெங்குத் தாக்கம்

## விழிப்புடன் இருக்க மக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ.3

கடந்த சில மாதங்களாக குடாநாட்டை உலுக்கிய டெங்கு நோயின் தாக்கம் மீண்டும் அதிகரித்து வருகின்றது.

வைத்தியசாலைகளில் தினமும் 5இற்கு மேற்பட்டோர் டெங்கு நோய் அறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதனால் பொதுமக்கள் விழிப்புடனும், பொறுப்புடனும் செயற்படுமாறு யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

குடாநாட்டில் டெங்கு நோய்த் தாக்கம் மீண்டும் அதிகரித்து வருகிறது.

இரு மாதங்களுக்கு முன்னர் டெங்கு குடாநாட்டில் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்தது. எனினும் கடந்த இரு ஆண்டுகளாக அந்நோயின் தாக்கத்துக்குள்ளாகி பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதனால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இது குறித்து பொதுமக்கள் பொறுப்புடனும், விழிப்புடனும் செயற்படுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தமது வீட்டுக்கு அருகில் உள்ள பற்றைகளைத் துப்புரவு செய்து கொள்ளுமாறும் அதனைப் பின்பற்றாதவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ - 9)

# வலந்தலை தெற்கு பாடசாலையை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்குக

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

காரைநகர், நவ.3

காரைநகர் மருதடியில் அமைந்துள்ள வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்தப் பிரதேச மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அமைந்துள்ள இந்தப் பாடசாலையானது கடந்த பத்து வருடங்களாகச் செயற்படாமையால் இந்தப் பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் அயலில் உள்ள பாடசாலைகளுக்கே செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின் றது.

தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்டு இயங்கிய இந்தப் பாடசாலையானது கடந்த காலங்களில் தரமான கல்வியை வழங்கி வந்ததுடன் காரைநகரில் கூடிய மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் பாடசாலையாகவும் விளங்கி வந்துள்ளது.

இந்தப் பாடசாலையை மீள ஆரம்பித்து சிறார்களின் கற்றல் செயற்பாட்டுக்கு உதவ முன்வர வேண்டும் என இப்பிரதேச சிறார்களின் பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. (204-250)

# மண்டைதீவு பிரதேசத்துக்கு குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.3

மண்டைதீவுக்கு அல்லைப்பிட்டியில் இருந்து குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

தேசிய நீர்வழங்கு சபைக்குச் சொந்தமான கிணற்றில் இருந்து நீர் விநியோகம் இடம்பெறும்.

அல்லைப்பிட்டி மண்டைதீவுக் குறுக்கு கடல் பகுதியூடாக நீர் விநியோகக் குழாய்களை அமைக்கும் பணிகள் இடம் பெறுகின்றது.

இந்த வேலைகள் விரைவில் பூர்த்தியடையலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (204-7)



மாற்றுவலுவுள்ளோருக்கான காப்பகம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு அண்மையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் விவகாரத்துறை அமைச்சர் திஸ்ஸகரலியத்த, யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், அமைச்சரின் செயலாளர், காப்பக இணைப்பாளர் டாக்டர் பி.ஆனந்தகுமார் ஆகியோர் வரவேற்கப்படுவதையும், காப்பகத்துக்கு முதலாவது மாணவனுடைய பதிவை அமைச்சர் மேற்கொள்வதனையும் படங்களில் காணலாம். (11)

# முற்றவெளியில் களைகட்டியது தீபாவளிப் பண்டிகை வியாபாரம்

யாழ்ப்பாணம், நவ.3

தீபாவளிப் பண்டிகை வியாபார நடவடிக்கைகளால் யாழ். முற்றவெளிப் பகுதி சுறுசுறுப்புடன் களைகட்டத் தொடங்கியுள்ளது.

யாழ்.முற்றவெளிப் பகுதியில் யாழ்.மாநகர சபை அமைத்திருந்த தகரக் கொட்டகைகளில் பல வர்த்தகர்கள் தமது வியாபார செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.

முற்றவெளி வீதியோரங்களிலும் தற்காலிகக் கடைகளை அமைத்து நடைபாதை வியாபாரிகள் விற்பனைகளை ஆரம்பித்துள்ளனர்.

மக்கள் இந்தப் பகுதிகளுக்குச் சென்று உடுபிடவைகள் மற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது.

உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகளும் இந்தப் பகுதிகளில் வியாபாரத்தை மேற் கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-204-26-160)

# 'மாவடியான் திரு' நூல் வெளியீட்டு விழா

தென்மராட்சி, நவ.3

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் 'மாவடியான்திரு' என்னும் கும்பாபிஷேக மலர் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும்.

யாழ்.மாவட்ட மத்தியஸ்தர் சபை மேற்பார்வையாளர் பிரம்ம ஸ்ரீ ப.சனாதனசர்மா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு ஆசியுரையினை சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள், அகில இலங்கை சைவ அர்ச்சகருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்துவர்.

நூல் வெளியீட்டுரையினைத் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி.ரஞ்சனா நவரத்தினம் நிகழ்த்த, முதற் பிரதியினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி வெளியிட சி.சுந்தரலிங்கம் பெற்றுக்கொள்வார்.

நூல் ஆய்வுரையினை கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்துவார்.

சிறப்புரைகளை, யாழ். பல்கலைக்கழக வரலாறு, தொல்லியற்றுறை பேராசிரியர் செ.கிருஷ்ணராசா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் கு.சிவானந்தம் ஆகியோர் நிகழ்த்துவர். (204-207)

# நெடுந்தீவில் 'அதிஷ்ட லட்சுமி'

நெடுந்தீவு, நவ.3

நெடுந்தீவு - குறிகாட்டுவான் கடல்பயணச் சேவையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 'அதிஷ்ட லட்சுமி' மோட்டார் படகு இணைந்து கொண்டது. இந்தப் படகுச் சேவையை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டீன் நெடுந்தீவில் இருந்து ஆரம்பித்து வைத்தார்.

நேற்றுமுன்தினம் பி.ப.2 மணிக்கு நெடுந்தீவு துறைமுகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத் தலைவர், அரச உத்தியோகத்தர்கள் உட்பட பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இந்துப் படகில் 120 பேர் பயணிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-111)

# ஊடக மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

வலி.வடக்கு, நவ.3

ஊடக மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடகவளங்கள் நிலையத்தினால் ஐந்து நாள்களுக்குச் நடத்தப் பெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் ஆர்வமுள்ள ஊடகத்துறை சார்ந்தவர்களையும் ஊடக மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி வாசலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடகவள பயிற்சி மையத்தில் பதிவுகளை மேற்கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக் காலத்தில் உள்ளக களப் பயிற்சியும், குழுவேலையும் பத்திரிகையினரின் அடிப்படைகளை நினைவூட்டல், தொழில்வழி காட்டல், சுய விவரக் கோவை தயாரித்தல், தொடர்புக்கான வழிகளைக் கண்டறிதல், பத்திரிகைகளின் ஆசிரியர்களைச் சந்தித்தல், வேலைக்கான நேர்முகப் பரீட்சை, சமூக வலையமைப்புகளைப் பயன்படுத்தல், இளம் பத்திரிகையார்களுக்கான வலையமைப்பை உருவாக்குதல் போன்ற செற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

இந்தச் செயலமர்வின் இறுதி நாளில் வடமராட்சி கிழக்கு மீள் குடியேற்றப் பிரதேசத்துக்குச் சென்று களத்தை ஆய்வு செய்தலும் இடம்பெறும்.

பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப் படுகின்றது. (204-86)




# உள்ளத்துக்கு மகிழ்ச்சியளித்து நல்வழிப்படுத்துபவை நூல்களே

## உதவிக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

சுன்னாகம், நவ.3

எமது உடலும், உள்ளமும் நன்றாக இருந்தால்தான் நம்மால் மகிழ்ச்சியாக வாழமுடியும். உள்ளத்துக்கு மகிழ்ச்சியளித்து நல்வழிப்படுத்துபவை நல்ல நூல்களே.

இவ்வாறு தெரிவித்தார் கல்வியமைச்சின் தமிழ் மொழிப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் சி. இதய ராஜா.

தேசிய கலை இலக்கியப் பேரவையால் சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தில் நடத்தப் பெற்ற புத்தகப் பண்பாட்டுப் பயணம் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

க.வேல்தஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வாசிப்பின் மூலம் உள்ளம் பண்படுகிறது. பண்பட்ட உள்ளமுடைய ஒருவனே சமூகத்திலுள்ளவர்களால் மதிக்கப்படுகின்றான்.

கற்றல் என்பது ஒரு அனுபவமே. ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு வகையான அனுபவங்கள் உள்ளன. வாசிக்கும் ஒருவரால் பல்வேறுபட்டவர்களுடைய அனுபவங்களை இலகுவாகப் பெற முடியும். பலரது வாழ்க்கை வரலாறுகளை அறிந்து, அந்த அனுபவங்களைப் பெறுவதற்கு வாசிப்பு துணை செய்யும்.

சிறுவயதிலிருந்தே வாசிப்புப் பழக்கத்தைக் கைக்கொண்டால் வளர்ந்து பெரியவர்களாகும் போது சமூகத்தின் மதிப்புமிக்கவர்களாக மிளிரமுடியும் என்றார்.

இந்த நிகழ்வில் தேசிய கலை இலக்கியப் பேரவைச் செயலாளர் சட்டத்தரணி சோ. தேவராஜா, கவிஞர் கருணாகரன், எழுத்தாளர்கள் சி.ரமேஷ் இயல்வாணன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்நிகழ்வில் வாசிப்பின் முக்கியத்துவத்தை விளக்கும் குறு நாடகமும், நூற்கண்காட்சியும் இடம்பெற்றன. (204 - 38)

# பற்றைக்காணிகளைத் துப்புரவு செய்யாத உரிமையாளர்கள் மீது விரைவில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.3

குடாநாட்டில் உள்ள வளவுகளில் பற்றைகளைத் துப்புரவு செய்யாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பற்றைகளைத் துப்புரவு செய்யாத காணி உரிமையாளர்கள் பற்றிய விவரங்களுடன் பொதுமக்கள் தத்தமது கிராம உத்தியோகத்தரிடம் முறைப்பாட்டினைச் செய்து கொள்ளலாம் என்று சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு நோயின் தாக்கம் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

இதனால் சுற்றுப்புறச்சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே இதுவரை காலமும் தமது காணிகளுக்குள் [illegible] பற்றைகளைத் துப்புரவு செய்யாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

காணிகளைத் துப்புரவு செய்யாத காணி உரிமையாளர்கள் பற்றிய விவரங்களை தத்தமது கிராம உத்தியோகத்தர் ஊடாக முறைப்பாட்டினைச் செய்து அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள [illegible] களம் அறிவித்துள்ளது.

(ஐ - 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆந்தையின் பார்வை

ஆந்தைக்கு மனிதர்களை விட 5மடங்கு பார்வை கூர்மையாக இருக்கிறது. ஆந்தையின் கண்களில் சிவப்பான ஒரு பொருள் உள்ளது. இது ஆந்தையின் பார்க்கும் திறனுக்குக் காரணமாக இருக்கிறது. ஆந்தையின் கண்களில் இருக்கும் கரு மணிகள் பொருள்களை மிகப் பெரிதாக்கிக் காட்டும் சக்தி கொண்டதாக இருக்கிறது. இதனால்தான் கண்களில் இருந்து ஒரு நுண்ணிய ஒளிக் கதிர் கூட தப்பிக்க முடியாது. இத்தகைய வசதிகள் இருப்பதால் தான் நள்ளிரவில் ஆந்தையால் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

சுவி



# நறுமண மான்

மான் இனங்களில் கறுப்பு மான், கலைமான் போன்றவற்றின் கால்களில் விசேஷ நறுமணம் சுரக்கும் சுரப்பிகள் உள்ளன. இவை நடந்து செல்லும்போது கால்களில் உள்ள சுரப்பிகளில் இருந்து நறுமணத் திரவம் சுரந்து கால் தடத்தில் தேங்கும். இந்த நறுமணத்தை வைத்து அதன் தோழமை விலங்குகள் இந்த இன விலங்குகள் போகும் பாதையைச் சுலபமாகக் கண்டு பிடித்து வருகின்றன.



# பறவைகளின் விந்தை

சில பறவைகள் தாம் இருக்கும் இடத்தை விட்டு பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் ஓரிடத்திற்குச் செல்லும். சிறிது காலத்தின் பின் மறுபடியும் பழைய இடத்துக்குப் போகும். இப்படி வருடம் தோறும் ஒரு கண்டத்தில் இருந்து இன்னொரு கண்டத்திற்குச் செல்வதை சில வகைப் பறவைகள் வழமையாக்கியுள்ளன. ஐரோப்பியக் கண்டத்தில் இருந்து ஆசியாக் கண்டத்திற்குப் பறந்து வருகின்றன.

இதற்குக் காரணம் கடுங்குளிரைச் சில பறவைகள் தாங்க முடியாததால்தான் இவ்வாறு கண்டம் விட்டு கண்டம் பறந்து திரியும்.

கடுங்குளிரால் பறவைகளின் உடலில் விறைப்புத்தன்மை ஏற்படுகிறது. குளிரில் இருந்து தப்பிக்கவே இவ்வாறு செய்யும். கடுங்குளிரைத் தாங்கும் பக்குவம் வந்தவுடன் அவை மறுபடி தமது நாட்டிற்குப் பறந்து சென்றுவிடும்.

சு.தரு



# நீந்தக் கூடிய யானை

நிலத்தில் வாழும் உயரினங்களில் மிகவும் விரைவாக நீந்தக் கூடியது யானை. இது நீந்தும் போது தும்பிக்கையை மடக்கும். தண்ணீரின் மேல் தூக்கி வைத்துக் கொள்ளும். மேலும் இது தண்ணீருக்கு அடியில் பல மைல் தூரத்தை நீந்திக் கடக்கக் கூடியது. யானைகளின் மூதாதையர்கள் நீர் வாழ் விலங்குகளாகத்தான் இருந்திருக்க வேண்டும். யானையும் நீர் வாழ்விலங்கு வகையைச் சேர்ந்தது தான். வரலாற்றுக் காலத்திற்கு முன்பு யானைகள் தமது துதிக்கைகளால் மூச்சு விட்டுக் கொண்டே வாழ்கின்றன.

சு.நிஸா



# அம்மா

பத்து மாதம் பத்திரமாய் கருவில் சுமந்தாய் அம்மா!
அன்று நீ அடைந்த துன்பம் நான் அறியேன் அம்மா!
ஆனால் நீ என்னை விட்டுப் பிரிந்த வேளையில் - நீ
பட்ட வேதனையை நான் கண்டேன் அம்மா!
உனது துன்பத்தை புறம் வைத்து என்னை பக்குவமாய்
வளர்த்தாய் அம்மா! நோய் என்னைத் தீண்டினால்
துடி துடித்துப் போவாயே... இரவெல்லாம் துயில் நீத்து
என்னை கண்மணி போல் பார்ப்பாயே...
ஆனால் இப்போ ஏனம்மா என்னை விட்டுப் பிரிந்து சென்றாய்!
மறு பிறப்பு என்ற ஒன்று இருந்தால்...
அத்தனை ஜென்மங்களும் நீ என்
தாயாக வேண்டும் அம்மா.

கா.உதயகுமார், திருகோணமலை.



# மண்புழு

உலக வரலாற்றிலேயே மண்புழு போன்று வேறெந்த உயிரினமும் மனிதனுக்கான முக்கியமான ஆக்க வேலையில் ஈடுபடுவது கிடையாது என்று கூறலாம். மண்புழுக்கள் நிலத்தின் அடியில் குழிகளைத் தோண்டி மேலிருக்கும் மண்ணைக் கீழே கொண்டு செல்கின்றன. இதனால் பூமிக்குள் காற்றுச் சென்று மண்ணை வளப்படுத்துகின்றது. ஓர் ஏக்கர் நிலத்தில் சுமார் 12 லட்சம் மண்புழுக்கள் இருக்கின்றன. இவை நான்கு மணி நேரத்தில் தமது நிறைக்குச் சமனான கம்போஸ்ட் என்றும் மண்ணை வளப்படுத்தும் உரம் உற்பத்திக்கும் காரணமாகின்றன.

நிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிக் கரையோரங்களில் மீன்பிடிக்க அனுமதியில்லாததால் வறுமையில் வாடும் மக்கள்

## கடற்றொழிலாளர் சமாச பொது முகாமையாளர் தகவல்

கிளிநொச்சி,நவ.3

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்லாறு, கண்ணகி நகர் ஆகிய கரையோரக் கிராமங்களில் இன்னமும் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் இந்தப்பகுதி மக்கள் கடுமை யாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

யுத்தத்திற்கு முன்னர் இந்தப் பிரதேசங்களில் ஆழ்கடல் மீன்பிடித்தொழில் மிகப் பெரிய அளவில் இடம்பெற்று வந்தது. நாளொன்றுக்கு 15 ஆயிரம் கிலோ கடலுணவு இங்கு பிடிக்கப்பட்டு வந்தன. அத்துடன் பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாத காலப் பகுதியில் நாளொன்றுக்கு 30 ஆயிரம் கிலோ இறால்கள் பிடிக்கப்பட்டு வந்தன. ஆனால் இப்போது ஒன்றுமே இல்லை.

இது தொடர்பாக கரைச்சி வடக்கு, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொது முகாமையாளர் இ.கணேசபிள்ளை தெரிவித்ததாவது:-

அசாதாரண சூழ்நிலைக்கு முன்பு புளியம்பொக்கணைச் சந்தியில் இயங்கி வந்த கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மீள்குடியமர்வின் பின்னர் பரந்தன் தபால் நிலையத்திற்கு அருகில் இயங்கி வருகின்றது. இதன் கீழ் காஞ்சிபுரம் - குமரபுரம், உமையாள்புரம் - பரந்தன், நாகேந்திரபுரம், தர்மபுரம், கல்லாறு, கண்ணகிநகர், தட்டுவன் கொட்டி ஆகிய ஏழு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. கடந்த காலத்தில் இவற்றில் 3 ஆயிரத்து 362 உறுப்பினர்கள் இருந்தனர். தற்போது இவர்களுள் ஆயிரத்து முன்னூற்று முப்பத்தேழு பேர் மீள்குடியேறியுள்ளனர்.

இவர்கள் மீள்குடியேறி நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் கடலுக்குச் சென்று தொழில் புரிவதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது கல்லாறு, கண்ணகி நகர், தட்டுவன்கொட்டி ஆகிய கிராமங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இங்கு வாழ்ந்த மக்கள் தமது உறவுகளையும், சொத்துக்களையும் இழந்தனர். தற்போது கல்லாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மீன்பிடித் தடை தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், வடமாகாண ஆளுநர், கூட்டுறவுத்துறை அமைச்சர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தீர்வு எதுவும் இது வரை கிடைக்கவில்லை.

இந்தக் கரையோரக் கிராமங்களில் வசித்து வரும் மக்கள் வருமானமின்றி உள்ளனர். போசணைக் குறைபாட்டாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். முக்கியமாகக் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், குழந்தைகள், மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு, பூநகரி பிரதேசங்களிலுள்ள சமாசங்களின் பகுதிகளில் கடற்றொழில் சுமுகமான முறையில் நடைபெற்று வருகின்றது. பருத்தித்துறை, யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய சமாசங்களின் கீழுள்ள தொழிலாளர்களும் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் எமக்கு மட்டும் ஏன் இந்த நிலை என்பது புரியாத புதிராக உள்ளது.

இந்த ஏழைத் தொழிலாளர்கள் கடும் வயிற்றுப் பசியால் துடிக்கும்போது அதிகாரிகள் மாவட்ட எல்லைகள் பற்றியும், பிரதேச எல்லைகள் பற்றியும் பேசி நேரத்தை வீணடிக்காது ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு இந்தத் தொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியைப் பெற்றுத்தர வேண்டும் என்றார் பொது முகாமையாளர்.

(க- 440)



முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்தின் விஜயதசமிப் பூசையின் போது கும்பத்தைக் கடலில் சரித்த பின்னர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

## ஆக்கத்திறன் கண்காட்சி

கிளிநொச்சி,நவ.3

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான ஆக்கத்திறன் கண்காட்சி இன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறும். இதில் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களின் ஆக்கங்கள் வகுப்பு ரீதியாகக் கண்காட்சிக்கு வைக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்களுக்கு பரிசில்களும் வழங்கப் படும்.(க)

## என்றிப் கொடுப்பனவுகள்

வட்டக்கச்சி,நவ.3

கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்மடு கிராம சேவையாளர் பிரிவில் 'என்றிப்' நிதிக் கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படவிருக்கின்றன.

அதேவேளை இதற்கான பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்களின் பதிவுகள் மீண்டும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (க-450)

# 52 குடும்பங்கள் மட்டுமே இன்னமும் கிளிநொச்சியில் மீள்குடியமர உள்ளன

கிளிநொச்சி,நவ.3

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னும் 52 குடும்பங்களே மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும்.

வவுனியா மெனிக்பாம் முகாமில் உள்ள அந்த 52 குடும்பங்களும் வெகுவிரைவில் அழைத்துவரப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் பொதுமக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா மெனிக்பாம் முகாமில் உள்ள 52 குடும்பங்கள் மட்டுமே இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டும்.

அந்த மக்களை அங்கிருந்து கிளிநொச்சிக்கு அழைத்து வந்து அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெடிபொருள்களை அகற்றும் பணிகள் அப்பகுதிகளில் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இன்னும் ஓரிரு மாதங்களில் அந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)




# கழிவு நீர் வாய்க்கால்கள் அமைக்கப்படாததால் கிளிநொச்சியில் மழை நீர் தேங்கும் அபாயம்

கிளிநொச்சி,நவ.3

கிளிநொச்சி நகரப் பகுதியில் கழிவு நீர் வடிகால்கள் அமைக்கப்படாமையால் மழைநீர் வடிந்து ஓடிவிட முடியாத நிலை தோன்றியுள்ளது.

யுத்தத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டம் புதுப்பொலிவுடன் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது. முன்னர் நகரின் வர்த்தக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் என்பனவற்றிற்கு முன்னால் நீர்தேங்கி நிற்காது வழிந்தோடக் கூடிய வடிகால்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் வாகனங்களின் வசதிகருதி தற்போது இந்த வடிகால்கள் மூடப்பட்டுள்ளன. அத்துடன் மழை காலமும் தொடங்கியுள்ளது. இதனால் நீர் வழிந்தோடாது தேங்கி நிற்கும் நிலை காணப்படுகின்றது. இது நுளம்புகளின் பெருக்கத்திற்கும் வழிவகுக்கும் என்பதோடு பலவித நோய்களும் உருவாக வாய்ப்பாக அமையும்.

ஆகவே பெருமழை ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்த வடிகால்களை அமைப்பது அவசிய தேவையாகும். இல்லையென்றால் மழை வெள்ளம் காரணமாகப் போக்குவரத்துப் பாதைகள் உடைந்துபோய் போக்குவரத்துக்கள் தடைப்படும் அபாயமும் தோன்றும்.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென இந்த மாவட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர். (க-440)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சட்ட வைத்திய அதிகாரி இன்னும் இல்லை

கிளிநொச்சி,நவ.3

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி இதுவரை நியமிக்கப்படாமையால் மரண விசாரணைகளை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட சட்டவைத்திய அதிகாரி தற்போது ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அங்குள்ள உத்தியோகத்தர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வன்னி யுத்தத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மீள இயங்கத் தொடங்கி ஒரு வருடம் கடந்த நிலையிலும் இது வரை சட்ட வைத்திய அதிகாரி நியமிக்கப்படவில்லை. இதனால் அங்கு மரண விசாரணைகள் மேற்கொள்வதற்கு பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

சட்டவைத்திய அதிகாரி இன்மையால் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து சுகாதார அமைச்சுக்கு சுட்டிக்காட்டப்பட்டபோது தென்னிலங்கையைச் சேர்ந்த பெண் வைத்தியர் ஒருவரை நியமனம் செய்வதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த அந்த வைத்தியர் திடீரென ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். இதனால் அங்குள்ள அதிகாரிகள் மத்தியில் அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொது மக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. (க-9)

# கிளிநொச்சியில் பன்றிக் கூட்டத்தால் விவசாயிகளுக்குப் பெரும் சேதம்

கிளிநொச்சி,நவ.3

கிளிநொச்சியின் சில பகுதிகளில் பன்றிகள் பெருகிக் காணப்படுவதால் விவசாயிகள் பெரும் சேதங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள முருகன் ஆலயத்திற்கு முன்பாகக் கணேசபுரம் செல்லும் வீதியில் இருந்து வடக்குப் பக்கமாக கரடிப்போக்கு என்னுமிடத்துக்குச் செல்லும் புகையிரதப் பாதையும் அதன் இரு 'பகுதிகளும் கடந்த பல வருடங்களாக பற்றைக்காடுகளாகக் காட்சியளிக்கின்றன. இதன் காரணமாகக் காட்டுப் பன்றிகளின் இனப்பெருக்கம் பல மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் இப்பகுதிகளிலும், அயல் கிராமங்களை அண்டிய பகுதிகளிலும் வசிக்கும் விவசாயிகளும், குடியிருப்பாளர்களும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கூட்டம் கூட்டமாகச் செல்லும் பன்றிகள் தென்னை, வாழை போன்றவற்றை முற்றாக அழித்து விடுகின்றன. அத்துடன் சிறுதானியப் பயிர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ள இடங்களைச் சிதைத்து வருகின்றன.

இரவு வேளைகளில் இப்பகுதியூடாகச் செல்வோர் பன்றிகளால் தாக்கப்பட்டும் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர். இதனால் இப்பகுதி மக்கள் அச்சத்துடன் நடமாடுவதைக் காண முடிகின்றது.

ஆகவே இந்தப் பற்றைக் காடுகளை அழித்து பன்றிகளின் தொல்லைகளுக்கு முடிவு கட்ட வேண்டுமென இப்பகுதி விவசாயிகளும், பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர் .

இதேவேளை இக்குடியிருப்புப் பகுதியில் அமைந்திருந்த பொ.செல்வராசா என்பவரின் கோழிக் கூட்டுக்குள் பதுங்கியிருந்த சருகுப் புலியொன்று பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-440)

# உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூகத்தின் அன்பும், அரவணைப்பும் அவசியம்

## உளநல மருத்துவர் டாக்டர் சுதாகரன் கூறுகிறார்

வவுனியா,நவ.3

உளநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சமூகத்தின் அன்பும் அரவணைப்பும் இன்றியமையாத ஒன்றாகும். இவ்வாறு தெரிவித்தார் வவுனியா மாவட்ட உளநல மருத்துவர் டாக்டர் எஸ்.சுதாகரன்.

வவுனியா மாவட்டத்தில் உளநல சிகிச்சை பெறுபவர்களைப் பராமரிப்போருக்கான குழு அமைக்கும் செயற்றிட்டமொன்று கடந்த வாரம் வவுனியா பொது வைத்தியசாலையில் நடைபெற்ற போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். எமது உளநலச் சிகிச்சைப் பிரிவுக்கு வருபவர்களில் அநேகமானோர் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்பவர்கள். இவர்கள் போதிய வருமானமின்மையால் போசணைக் குறைபாடு உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே அவர்களைப் பராமரிப்பவர்கள் அவர்கள் சிறிய வேலைகள், சுயதொழில் முயற்சிகள் என்பவற்றைச் செய்வதற்கு வழிகாட்ட வேண்டும். இது நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும், அவர்கள் வருமானத்தை ஈட்டுவதற்கும் உதவி புரியும். அந்த வகையில் வீட்டுத்தோட்டம் பயிரிடல், பூவேலைகள், பின்னவேலை, கதிரை பின்னுதல், கடிதவுறை தயாரித்தல் போன்ற இலகுவான வேலைகளை இவர்களுக்கு வழங்க வேண்டும்.

அத்துடன் இவர்கள் அடிக்கடி யோசனை, கவலை, தூக்கமின்மை ஆகியவற்றால் பீடிக்கப்படுவதிலிருந்தும் இதன் மூலம் விடுபட முடியும். இவர்கள் உரிய மருந்துகளைக் கிரமமாக எடுத்தல் வேண்டும். இவர்கள் உள நோயினால் பாதிக்கப்பட்ட போது பல்வேறு அசௌகரியங்கள், மாற்றங்களுக்கு உள்ளாகின்றபோதிலும் உரிய சிகிச்சைகளின் பின்னர் சாதாரண மனிதர்களாக மாறிவிடலாம். எனவே மற்றவர்களாகிய நாம் அவர்களுக்கு அன்பையும் அரவணைப்பையும் வழங்குதல் வேண்டும் என்றும் அவர் மேலும் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் உளநல சேவையில் களப் பணியில் ஈடுபடும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சிகிச்சை நிலைய பொது தாதிய உத்தியோகத்தர்கள், வைத்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு எதிர்காலத்தில் இவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்குரிய செயற்றிட்டங்கள் தொடர்பான தமது கருத்துக்களை வழங்கினார். (க-501)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**வீடு விற்பனைக்கு**

சண்டிக்குளி, ஈச்சமோட்டைச் சந்திக்கு அண்மையாக சுவாமியார் வீதியில் ½ பரப்புக் காணியுடன் உள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776146434

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர் கல்சீபட் தினமும் சுத்தம் செய்து காலை 6.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

26,000 கிலோ மீற்றர் வரை ஓடியுள்ள குயின்க் [QINGQI QM-100 CHINA] மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 021 224 1085. மாலை 7 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும். (105507)

**கோழிக் குஞ்சு விநியோகம்**

பிறிமா No.1 புறெயிலர் குஞ்சு 03.11.2010 அன்று காலை விநியோகிக்கப்படும் முன் பதிவு செய்யவும்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.
0212226944.

# வடமேல் மாகாணத்தில் சிறந்ததாக புத்தளம் பஸ் நிலையம் தெரிவு

புத்தளம், நவ. 3

2010 இல் வடமேல் மாகாணத்தின் சிறந்த பஸ் நிலையமாக புத்தளம் பஸ் நிலையம் தெரிவுசெய்யப்பட்டு விருது வழங்கப் பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை குருநாகல் நகர மண்டபத்தில் இடம்பெற்ற வடமேல் மாகாண உள்ளூராட்சி சபைக்கு விருது வழங்கும் நிகழ்வில் இதற்கான விருது வழங்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடமேல் மாகாண ஆளுநர், பஸ் நிலையத்தை நிர்மாணித்த புத்தளம் நகர சபைத் தலைவர் எம்.எம்.ஏ. நஸ்மிக்கு விருதுடன் சான்றுப் பத்திரமும், ரொக்கப்பணம் 75,000 ரூபாவும் வழங்கி கௌரவித்தார்.

மாகாண முதலமைச்சர் அத்துல விஜயசிங்க, முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எச்.எம். நவவி மற்றும் தற்போதைய அமைச்சர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். நகரசபையானது பஸ் நிலையம் அமைப்பதற்கு ஏற்பட்ட செலவின மான 100 மில்லியன் ரூபாவை வர்த்தகர்களிடமிருந்து பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. மேலும், சிறந்த மாநகர சபையாக குருநாகல் மாநகரசபையும், சிறந்த நகரசபையாக குளியாப்பிட்டி நகர சபையும், சிறந்த பிரதேச சபையாக வென்னப்புவ பிரதேசசபையும் தெரிவாகின. (சி)

**வீடு விற்பனைக்கு**

சண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 16/3, விதானையார் வீதி, சண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 6146434

## பாரிசவாத நோயாளர்களுக்கென இரண்டே வைத்தியசாலைகள்!

கொழும்பு, நவ. 3

பாரிசவாதத்தால் நாளொன்றுக்கு சராசரியாக 40 பேர் மரணமடைகின்றனர். எனினும், அவர்கள் சிகிச்சை பெறுவதற்கு நாட்டில் இரண்டு வைத்திய சாலைகளே உள்ளன என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கடந்த புதன் கிழமை கொழும்பு தேசிய வைத்தியசாலையில், உலக பாரிசவாத தினத்தை முன்னிட்டு ஏற்பாடாகியிருந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரிசவாத நோய்க்கான குணம் குறிகள் தோன்றிய மூன்று மணிநேரத்திற்குள் நோயாளி சிகிச்சைக்கு உட்படுத்தப்படாவிடின் அவர் மரணத்தைத் தழுவ வேண்டி நேரிடும். அல்லது நிரந்தர உடல் செயலிழப்புக்கு ஆளாக நேரிடும்.

உலகில் ஒவ்வொரு ஆறு விநாடிகளுக்கும் ஒருவர் பாரிசவாதத்துக்கு பலியாகின்றார். அதியுயர் குருதி அமுக்கம், புகை பிடித்தல், மதுபானம் அருந்தல், உணவில் அதிக எண்ணெய் போன்றவை பாரிசவாதத்துக்கு மூல காரணங்களாகும். இந்நோய்க்கு ஆளாகுபவர்களில் 80 சதவீதமானோர் 47-55 வயதுக்கு இடைப்பட்டவர்கள் - என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சி)

## 63 நாயன்மார்களின் திருவுருவப் படம் விநியோகம்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் 63 நாயன்மார்களின் திருவுருவப்படம் நான்கு வர்ணத்தில் அச்சிடப்பட்டு பாடசாலைகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. இதுவரையில் இத்திருவுருவப்படத்தை பெற்றுக்கொள்ளாத பாடசாலைகள் சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறியப் பட்டுள்ளது. (ஒ)

## சாவகச்சேரி நகரசபை

## 01.01.2011 முதல் 31.12.2011 வரை

# குத்தகைகளுக்கான கேள்வி அறிவித்தல்

01. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 16.11.2010 நண்பகல்12 மணி வரை

02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 19.11.2010 முற்பகல் 10 மணிவரை

03. கேள்வி திறக்கப்படும் திகதி : 19.11.2010 முற்பகல் 11 மணி.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01. | சாவகச்சேரி பொதுச்சந்தை, மீன் சந்தை | 5,000,000.00 | 50,000.00 | 1,000.00 |
| 02. | துவிச்சக்கர வண்டித்தரிப்பிடம், வாகனத்தரிப்பிடம் | 150,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 03. | ஆட்டிறைச்சிக் கடை NMS-I | 250,000.00 | 2,500.00 | 1,000.00 |
| 04. | ஆட்டிறைச்சிக் கடை NMS-II | 250,000.00 | 2,500.00 | 1,000.00 |
| 05. | மாட்டிறைச்சிக் கடை NMS-III | 300,000.00 | 3,000.00 | 1,000.00 |
| 06. | மாட்டிறைச்சிக் கடை NMS-IV | 395,000.00 | 3,950.00 | 1,000.00 |
| 07. | கோழி இறைச்சிக் கடை | 170,000.00 | 1,700.00 | 1,000.00 |
| 08. | பொதுமலசல கூடம் | 75,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 09. | கருவாட்டுக் கடை இல.1 | 75,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 10. | கருவாட்டுக் கடை இல.2 | 75,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 11. | கருவாட்டுக் கடை இல.3 | 75,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 12. | கருவாட்டுக் கடை இல.4 | 75,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 13. | கருவாட்டுக் கடை இல.5 | 75,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 14. | கருவாட்டுக் கடை இல.6 | 75,000.00 | 1,000.00 | 1,000.00 |

**குறிப்பு:**

- ★ கேள்விப்பத்திரக் கட்டணம், கேள்வித்தொகை, மாதாந்த வாடகை என்பவற்றுக்குக் காலத்திற்குக் காலம் அரசினால் விதிக்கப்படும் வரிகளை {பெறுமதி சேர்வரி (12%) நாட்டைக் கட்டியெழுப்பும் வரி (3%)} மேலதிகமாகச் செலுத்த வேண்டும்.
- ★ கேள்விப்பத்திரங்கள் கோரவருபவர்கள் விண்ணப்பங்களுடன் தேசிய அடை யாள அட்டையினையும், அதன் நிழற்படப் பிரதியினையும் கொண்டுவர வேண்டும்.
- ★ கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு மூலப்பிரதியினை **செயலாளர், நகரசபை, சாவகச்சேரி** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம்/ இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படவேண்டும். இரண்டாம் பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.
- ★ உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.
- ★ கேள்வியில் சித்திபெறுவோர் கேள்வித் தொகையின் 1/3 பங்கினை 26.11.2010ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கை 2011 தை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.
- ★ சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர் கொண்டு வரும் பொருள்களின் விற்பனை விலையில் 4%, வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு 20/= வியாபாரிகளின் பாவனையில் உள்ள பகுதியில் ஊடு ஒன்றிற்கு 20/= இனை அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
- ★ துவிச்சக்கர வண்டித்தரிப்பிடத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புக் கட்டணம் 4/=, மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக்கட்டணம் 7/= இனை அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
- ★ பொது மலசலகூடத்தைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் பாவனைக்கட்டணம் 5/= இனை அறவிடலாம்.
- ★ போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
- ★ மேலதிக விவரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
01.11.2010 (சி/572424)

செல்வி வீ.சி[illegible],
செயலாளர், நகரசபை, சாவகச்சேரி.

# சட்டக்கல்லூரி அனுமதிக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

கொழும்பு சாந்தி நிலையத்தினரால் யாழ்.மாணவர்களுக்காக சட்டக்கல்லூரி அனுமதிக்கான வழிகாட்டல் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் 35 வயதுக்கு உட்பட்ட A/L பரீட்சை சித்தியெய்திய மாணவர்களும் இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் பங்குபற்றலாம்.

காலம் :- 06.11.2010(சனி) 11.00 am
இடம் :- பட்டதாரிப் பிரிவு மண்டபம்
பிரவேசம் :- இலவசம்

furthur Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
C/572401

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 29 . 02 . 1960



உதிர்வு 04 . 10 . 2010

## திருமதி யோகராணி சந்திரேஸ்வரன்

திதி: ஏகாதசி (03.11.2010)

இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்து
எனைத் தாங்கிக் காத்திட்ட மனையாளே!
வலைஞர் மடமதனில் நம் செல்வங்கள்
கிந்துநாளனையும் கிந்துஜாவையும்
ஷெல்லுக்குப் பலிகொடுத்த போதிலும்
கடைக்குட்டி துஷிதனையும்
முகமறியா அன்னியர்கள் கடத்திக்
காணாமல் போகச்செய்த போதிலும்
அத்தனை இழப்பையும் தாங்கி
என்னை ஆறுதல் படுத்தி வைத்தாய்
உன் பிரிவால் தனிமரமாகித்
தவித்து நிதம் வாடினாலும்
உன் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை
அனுதினமும் துதிக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.216/2x2
திருவையாறு, கிளிநொச்சி.
கணவர்.
(சி/572425)

## விழிநீர் சொரியும் ஓராண்டில்

தோற்றம் 07 . 05 . 1940



மறைவு 13 . 11 . 2009

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் நல்லூர் வடக்கு, 3ஆம் கட்டையை வாழ்விடமாகவும் ரொறன்ரோ கனடாவில் வசித்தவருமாகிய

## அமரர் ஆ.க.சிவபாதசுந்தரம்

(இளைப்பாறிய தபாலதிபர்)

திதி:-03.11.2010

சிந்தையில் அகலாத திருவுருவமே-எங்கள்
சிந்தனைக்கு உருத்தந்த எம் தந்தையே!
நீங்கள் போன ஓராண்டு தெரியவில்லையே-விழியில்
நீர்மட்டும் உங்கள் பிரிவைச் சொல்கின்றதே

எமக்காகப் பிறந்து எமக்காக வாழ்ந்து
எமக்காக உருகி எம்மை விட்டுச் சென்ற
அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல நல்லூரானைப் பிரார்த்திக்கின்றோம்.

ரொறன்ரோ,
கனடா. (105291)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைக் கட்சிகளை ஒழிக்கும் திட்டமே உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம்

## பெரும்பான்மைக் கட்சிகளின் தந்திரம் இது என்கிறார் மனோ கணேசன்

கொழும்பு, நவ. 3

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலம் சிறுபான்மை இனப் பிரதிநிதித்துவங்களுக்கு எதிராக ஒலிக்கும் எச்சரிக்கை மணியாகும்.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் சட்டமூலம் எதிர்காலத்தில் ஒட்டுமொத்தமாக சிறுபான்மைப் பிரதிநிதித்துவங்களை வெட்டிக் குறைக்கப்படவிருக்கும் அபாயத்தை எதிர்வு கூறுகின்றது.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஆளுநர் அலவி மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்லாம் ஆகியோரது பங்குபற்றலுடன் சட்டத்தரணி இஸ்மாயில் தலைமையில் கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் நடைபெற்ற சுயாதீன தேசிய முன்னணியின் 8 ஆம் வருடாந்த நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய மனோ கணேசன் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இச்சட்ட மூலம் தற்சமயம் பரீச்சார்த்தமாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் தெரிவிக்கப்பட்டுள்ள புதிய திருத்தங்கள், எதிர்காலத்தில் மாகாணசபை, நாடாளுமன்றத் தேர்தல் சட்டங்களிலும் கொண்டுவரப்படக்கூடிய சாத்தியம் அதிக பட்சமாக இருக்கின்றது.

இன்றைய நாடாளுமன்றத்தில் இல்லாத நான் இதை சொல்லத்தான் முடியும். நாடாளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான் செயற்படவேண்டும்.

இன்று நாடாளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளிடம் இச் சட்டமூலம் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்படுமாறும், கட்சி பேதங்களை மறந்து இந்தச் சதி முயற்சிகளைத் தடுத்து நிறுத்துமாறும் கோருகின்றேன்.

உத்தேச சட்ட மூலத்தில் 5 வீத வெட்டுப்புள்ளி அறிமுகமாகின்றது. அதாவது, போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும் குறைந்தபட்சமாக 5 வீத வாக்குகளைப் பெற்றிருந்தாலேயே கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும். கடந்த காலத்திலும் இத்தகைய வெட்டுப்புள்ளி அறிமுகப்படுத்தப்படும் அபாயம் இருந்தது. அவ்வேளையில் அதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் மறைந்த அஷ்ரப், ஆளுமையுடன் தடுத்து நிறுத்தியிருந்தார்.

அஷ்ரப்பின் முயற்சியின் காரணமாகவே உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை தேர்தல்களில் வெட்டுப்புள்ளி அகற்றப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்திலும் 10 வீதமாக இருந்த வெட்டுப்புள்ளி 5 விகிதமாகக் குறைக்கப்பட்டது. தற்போது நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்படும் உள்ளூராட்சித் தேர்தல் சட்ட மூலத்தில் இந்த வெட்டுப்புள்ளி மீண்டும் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

இன்றைய தேர்தல் முறை விகிதாசார முறைமையாகும். கடந்த காலங்களில் தொகுதி முறைமை இருந்தது. இன்றைய புதிய முறைமையை கலப்பு முறை என்று கூறுகிறார்கள். இதில் வட்டாரங்கள் மூலமாக 70 வீத பிரதிநிதிகளும், விகிதாசாரம் மூலமாக 30 வீத பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படுவார்கள். இந்த 30 வீத விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் முறைமையை சிறுபான்மை அரசியற்கட்சிகள் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

தேர்தலின்போது வட்டாரங்களின் மூலமாக வெற்றி பெறும் வேட்பாளர்களின் வாக்குத் தொகைகளை கழித்துவிட்டு, தெரிவு செய்யப்படாத வேட்பாளர்களின் வாக்குத்தொகைகள் சேகரிக்கப்படும். அந்தத் தொகைகள் வேட்பாளர்களின் கட்சிகளுக்கு வழங்கப்படும். இதன் மூலமே இந்த 30 வீத விகிதாசார தெரிவு நடைமுறையாகின்றது. இச்சந்தர்ப்பத்தில்தான் 5 வீத வெட்டுப்புள்ளி சிறுபான்மைக் கட்சிகளைப் பாதிக்கின்றது.

ஏனெனில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 5 வீத வாக்குகளைப் பெறாத வேட்பாளர்களின் வாக்குகள் இந்தக் கணக்கெடுப்பில் சேர்த்துக்கொள்ளப்படாது. இதனால் சிறுபான்மைக் கட்சிகளின் வாக்குத்தொகை கணிசமாக குறையும். ஆகவே நேரடியாக வட்டாரங்களின் மூலமாக வெற்றிபெற முடியாத சிறுபான்மை வேட்பாளர்கள் விகிதாசார முறையின் கீழும் தெரிவு செய்யப்பட முடியாத நிலைமை ஏற்படும். இது சிறுபான்மைக் கட்சிகளையும், சிறிய கட்சிகளையும், சுயேச்சைக்குழுக்களையும் வெகுவாக பாதிக்கும்.

அடுத்தது, விகிதாசார முறைமையை ஒழித்துவிட்டு, தனித்தனி வட்டார முறைமைகளை கொண்டுவருகின்றோம் என்று சொல்கிறார்கள். ஆனால் எந்தவொரு கட்சியும் அல்லது சுயேச்சைக் குழுவும் தமக்கு விருப்பமான தனியொரு அல்லது ஒரு சில வட்டாரத் தொகுதிகளில் மாத்திரம் போட்டியிட முடியாது. தற்போது இருப்பதை போல அனைத்து வட்டாரத் தொகுதிகளிலும் போட்டியிடுவதற்காக வேட்பாளர் பட்டியல் ஒன்றை ஒவ்வொரு கட்சியும் தாக்கல் செய்ய வேண்டும்.

அதேவேளையில் அரசியற் கட்சி வேட்பாளர்கள் ரூபா ஐயாயிரமும், சுயேச்சைக்குழு வேட்பாளர்கள் ரூபா இருபதாயிரமும் முற்பணமாக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் செலுத்த வேண்டும். கொழும்பு மாநகரத்திலே 50 வட்டாரங்கள் இருக்குமானால் ஒரு அரசியற் கட்சி இரண்டரை இலட்சம் ரூபாவையும், சுயேச்சைக் குழு பத்து இலட்சம் ரூபாவையும் கட்டாயம் முற்பணமாக செலுத்த வேண்டும். இது உள்ளூராட்சிச் தேர்தல், இதுவே மாகாணசபை அல்லது நாடாளுமன்றத் தேர்தல் சட்ட மூலமாக இருக்குமானால் இந்தத் தொகைகள் பல மடங்கு அதிகரிக்கும்.

சிறிய கட்சிகளுக்கான அரசியல் பிரவேசத்தை இல்லாதொழித்துவிட்டு, பெரும்பான்மைக் கட்சிகளை மாத்திரம் வாழ வைக்கும் சதித்திட்டமே இந்தப் புதிய தேர்தல் முறை சட்டமாகும். சிறுபான்மைக் கட்சிகள், பெரும்பான்மைக் கட்சிகளுடன் விரும்பி கூட்டு சேர்வது என்பது வேறு, பலவந்தமாக கூட்டுச் சேர்க்கப்படுவது என்பது வேறு. இச்சட்ட மூலம் பெரும்பான்மை கட்சிகளுடன் கட்டாயமாகக் கூட்டுச் சேரவேண்டிய ஒரு நிர்பந்தத்தை சிறிய கட்சிகளுக்கு ஏற்படுத்துகின்றது.

இதுதொடர்பில் ஆளுகின்ற கூட்டணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் மிகவும் தந்திரமாக நடந்துகொள்கின்றன. ஆளுங்கட்சி சிறிய கட்சிகளுடன் பேசுகின்றோம் என்று கூறிய படி சட்டமூலத்தை அமுலாக்க முயல்கின்றார்கள். ஐக்கிய தேசியக் கட்சி வெட்டுப்புள்ளி விடையத்தை தவிர்த்துவிட்டு ஏனைய விடையங்களை மாத்திரம், பேசுகின்றார்கள்.

எனவே கட்சி பேதங்களை மறந்துவிட்டு அனைத்து சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகளும் நாடாளுமன்றத்தில் இச்சட்டமூலத்தில் உள்ள சிறுபான்மை எதிர்ப்பு விதிகளை அகற்றுவதற்காக ஒன்று சேர வேண்டும். - இப்படி அவர் தெரிவித்தார். (சி)



யாழ்ப்பாணம் அன்பொளி கல்வி நிலையத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப்பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் அன்பொளி கல்வி நிறுவன இயக்குநர் வே.அன்பழகன் உரையாற்றுவதையும், நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலய அதிபர் எஸ்.ஞானகாந்தன் மாணவர்களுக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

## எமது பிள்ளைகளைக் கண்டுபிடித்துத் தாருங்கள் பிரதி அமைச்சரிடம் வன்னி மக்கள் கோரிக்கை

கொழும்பு, நவ.3

வடக்கில் காணாமல் போன தமது பிள்ளைகளைக் கண்டுபிடித்துத் தருமாறு வன்னி மக்கள் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனை சூழ்ந்துகொண்டு கதறி அழுதனர்.

நெஞ்சை நெகிழச் செய்யும் இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வவுனியா செட்டிகுளம் பகுதியில் அமைந்துள்ள முகாம் மக்களைச் சந்தித்தபோது இடம்பெற்றது.

நூற்றுக்கணக்கான தாய்மார் பிரதி அமைச்சரைச் சூழ்ந்துகொண்டு அவரது கைகளைப் பிடித்துக்கொண்டு தமது பிள்ளைகளைக் கண்டுபிடித்துத் தருமாறு கதறி அழுதனர்.

தமது பிள்ளைகள் புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டபோதிலும் அவர்கள் குறித்து இதுவரை எதுவிதத் தகவலும் இல்லை என்றும் இம் மக்கள் தெரிவித்தனர்.

தங்களது பிள்ளைகள் குறித்த விவரங்களைத் தந்தால் அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். - இப்படி அமைச்சர் அத் தாய்மாரிடம் உறுதியளித்தார். (சி)

## வடக்கின் காணி உறுதிகளை புலிகள் அழித்து விட்டனராம்

### பாதுகாப்பு அமைச்சின் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, நவ. 3

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் உள்ள காணிப் பதிவாளர் அலுவலகங்களில் இருந்த பெருந் தொகையான காணி உறுதிப்பத்திரங்களை புலிகள் கைப்பற்றி அழித்துள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புலிகளின் இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் பற்றி அன்றிருந்த அரச அதிபர்களோ காணிப் பதிவக உத்தியோகத்தர்களோ அரசுக்கு தெரிவிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு அழிக்கப்பட்ட உறுதிப்பத்திரங்களுக்கான காணிகள் புலி ஆதரவாளர்களின் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் புலிகளுக்கு ஆதரவளித்த பல வியாபாரிகளுக்கும் காணிகள் உடைமையாக்கப்பட்டுள்ளன.

அண்மையில் கனடா, பிரிட்டன், ஜேர்மனி ஆகிய நாடுகளில் வதியும் இலங்கையர் நாட்டுக்குத் திரும்பி வந்து தங்களது பழைய காணிகளைப் பார்வையிடச் சென்றபோதே இவ்விடயம் தெரியவந்துள்ளது - என பாதுகாப்பு அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (சி)

## மகஸின் சிறையில் அரசியல் கைதிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தார் ஜயலத் எம்.பி.

கொழும்பு, நவ. 3

மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பிரதிநிதிகளை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்றுமுன்தினம் மாலை நேரில் சென்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது அரசியல் கைதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐவர் கலந்துகொண்டனர்.

இதுதொடர்பாக ஐ.தே.கவின் எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்றுமுன்தினம் சுடர் ஒளிக்குத் தெரிவித்தவை வருமாறு:-

நான் நேற்றுமுன்தினம் முற்பகல் பதினொரு மணிக்கு மகஸின் சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தேன். அங்கு அரசியல் கைதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஐவர் கொண்ட குழுவினருடன் பேச்சு நடத்தினேன்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், நிதியமைச்சில் எனக்கும், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சர் டி.யூ. குணசேகரவிற்கும் இடையில் விவாதம் ஒன்று நடைபெற்றது. இந்த விவாதத்தின்போது, தமிழ் அரசியல் கைதிகளின் நிலை தொடர்பில் அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அத்துடன், அந்தக் கைதிகளின் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை விரைவில் தீர்க்கும்படி கூறினேன். அவ்வாறு வழக்குத் தொடரப்பட்டிருக்காவிட்டால், சாட்சியங்களும் இல்லாவிட்டால் அந்தக் கைதிகளை விடுவிக்குமாறும் அமைச்சரிடம் நான் வேண்டுகோள் விடுத்தேன்.

அதற்கு அமைச்சர், அது விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, நேற்றுமுன்தினம் மகஸின் சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தேன். இதன்போது முன்னதாக எனக்குக் கிடைக்கப்பெற்ற 76 அரசியல் கைதிகளது விவரங்கள் அடங்கிய அறிக்கைகளை அந்த நீதிபதியிடம் சமர்ப்பித்தேன். அந்த அறிக்கையில், அரசியல் கைதிகளது வழக்கு விவரங்கள், கைதுசெய்யப்பட்ட தினம், காரணம், தற்போதைய நிலைமை போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் அரசியல் கைதிகளது விவரங்களையும் பெற்றுத் தருமாறு நான் அந்தப் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர்கள் அந்த விவரங்களை எதிர்வரும் சில தினங்களில் தருவதாக உறுதியளித்தனர்.

அத்துடன், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றவகையில் தங்களை நேரில் வந்து சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளதை இட்டு [illegible] - இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

## யானைத் தந்தங்களை விற்கமுயன்றோர் கைது

குருநாகல், அம்பன்பொல பிரதேசத்திலிருந்து இரண்டு யானைத் தந்தங்களை எடுத்து வந்து பத்து லட்சத்திற்கு விற்க முயன்ற நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கொபேஹேன பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைத்த தகவல் ஒன்றையடுத்து நேற்றுமுன்தினம் காலை வித்திகுளிச்சந்தியில் மறைந்திருந்த பொலிஸாரால் யானைத் தந்தங்கள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

அவற்றை எடுத்து வந்த ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளுடன் நான்கு கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு யானைத் தந்தங்கள் கைப்பற்றப்பட்டமை இது மூன்றாவது தடவை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
நண்பர்களிடம் சொந்த விடயங்களைப் பற்றி மனம் விட்டுப் பேசுவீர்கள். மற்றவர்கள் தொடர்பான காரியங்களுக்காக உங்களின் வேலைகளை போட்டு விட்டு அலையலாம். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகச் சிலவற்றை செய்வீர்கள்.

**இடபம்:**
சில விடயங்களில் அதிரடியாக முடிவு எடுத்து செயற்படுவீர்கள். கணவன், மனைவி இடையே சிறு சச்சரவுகள் தோன்றலாம். உறவினர்கள் சிலர் உங்களைப் பற்றி பெருமையாகப் பேசலாம். வெளி வட்டார தொடர்புகள் விரிவடையும். நாளைய சில வேலைகளையும் இன்றே சேர்த்துச் செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்:**
எதிலும் நேர்மை, நாணயமாக நடந்து கொள்வீர்கள். தேக ஆரோக்கியம், தெம்பு உற்சாகம் தரும். பிறரிடம் கைமாத்தாகக் கொடுத்த பணம் ஒன்று திரும்ப வரும். உங்களின் திறமைக்கு சவால் விடும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த உறவினரின் வீட்டிற்கு செல்லலாம்.

**கடகம்:**
வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் அவர்களின் மனக்குறைகளுக்கு ஆள் படலாம். நீங்கள் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல் உறவினர்கள் கையை விரிக்கலாம். சில பொருள்களை எங்காவது வைத்து விட்டு தேடுவீர்கள்.

**சிங்கம்:**
பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லிப் பெருமை அடைவீர்கள். பல நாள்களாக இழுபறியாக இருந்த வேலை ஒன்று இன்று முடிவுக்கு வரும். வெளியூர்களில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்கலாம். பெண்களால் சந்தோஷ அனுபவம் உண்டு.

**கன்னி:**
யாரிடமும் கோபம், வேகத்தைக் காட்ட வேண்டாம். உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சிறிய வேலை ஒன்றுக்குப் பல முறை அலைய நேரிடலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலைக்கு அதிகமாகச் செலவாகும்.

**துலாம்:**
புத்துணர்ச்சி, தெம்புடன் செயற்படுவீர்கள். சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். எதிர்பார்த்த ஒரு உதவி கிடைக்காமல் போனாலும், எதிர்பாராத ஒரு உதவி கிடைக்கும். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்:**
வீண் பயம் விலகி தெம்பு, தைரியம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் அல்லது சக ஊழியர்கள் சிலரின் செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். செலவுகளை குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள். பல நாள்களாக மனதில் நினைத்திருந்த ஆசை ஒன்று நிறைவேறும். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு:**
பெரிய அளவில் கற்பனை செய்த ஒரு காரியம் பசுபசுத்துப் போகலாம். பிள்ளைகள் தொடர்பான காரியங்களுக்காக அலையலாம். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். வெளியூர் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும்

**மகரம்:**
சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் நடந்து கொள்ளலாம். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாள வேண்டும். சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம். சிலருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். நம்பிக்கையுடன் இருந்த ஒருவிஷயம் கைநழுவிப் போகலாம்.

**கும்பம்:**
வரவாக வந்த பணத்தில் ஒரு பகுதியை மற்றவர்களுக்கு கடனாக கொடுக்கலாம். உடன் பணிபுரியும் சிலரால் சந்தோஷமான அனுபவங்களை எதிர் கொள்ளலாம். சுபச் செலவுகள் அதிகரிக்கும். நீங்கள் குறைவாக மதிப்பிட்ட ஒருவர் மூலம் பெரியஅளவில் உதவி கிடைக்கலாம். விருந்து, விசேஷங்கள் உண்டு.

**மீனம்:** சிக்கலில் இருக்கும் உறவினர் ஒருவருக்கு உதவி செய்வீர்கள். காலை முதல் மாலை வரை பரபரப்பாகச் செயற்படுவீர்கள். விமர்சித்த சிலரே ஒரு விடயத்தில் உங்களை பாராட்டலாம். மதிப்பு, கௌரவம் பார்த்துச் சில காரியங்களைச் செய்வீர்கள். எதிர்பாராத பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. நட்பு வட்டம் விரிவடையும்.

# மாற்றுவலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம்

வலி.வடக்கு,நவ.3

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவினால் உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத் திய மாற்றுவலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு நடத்திய கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு,

**கட்டுரை - கீழ்ப்பிரிவு**

க.சுஜீவன் (இணுவில் மத்திய கல்லூரி),ஆ.சுஜந்தினி (உடு வில் முருகமூர்த்தி வித்தியால யம்), த.டனிகன் (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்).

**மத்தியபிரிவு**

செ.நிசாந்தினி (சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியா லயம்), வ.சொரூபிகா (இணுவில் இந்துக் கல்லூரி), ஆ.சஜீபன் (உடுவில் முருகமூர்த்தி வித்தி யாலயம்)

**மேற்பிரிவு**

பி.கேமசியா (இணுவில் இந் துக் கல்லூரி),அ.சுஜீபா (இணு வில் மத்திய கல்லூரி)

**கவிதை - கீழ்ப்பிரிவு**

அ.சுஜீவா (இணுவில் மத்திய கல்லூரி),செ.ரஜீகரன் (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), ந.கோபினியா(சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்).

**மத்தியபிரிவு**

ம.மதுசாளினி (இணுவில் இந் துக் கல்லூரி), வி.விஜிதா (இணு வில் மத்திய கல்லூரி), நி.நிலக் ஷனா (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்).

**மேற்பிரிவு**

கு.கஜனி (இணுவில் இந்துக் கல்லூரி),கொ.தனுஷாயினி (இணு வில் மத்திய கல்லூரி).

(204-86)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொண்டாடப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

பாடசாலை அதிபர் வீ.கணேசராசா பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவனின் சார்பாக அவரது தாயாருக்கு காசோலை வழங்குவதனைப் படத்தில் காணலாம்.

*(படம்:-டிலீப்)*

## நாவலர் குருபூசையையொட்டி பேச்சு, கட்டுரைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.3

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குரு பூசைதினத்தையொட்டி யாழ்ப் பாணம் சைவபரிபாலன சபையி னால் நடத்தப்படும் பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று சபையின் பரீட்சைச் செயலாளர் இரா. செல்வ வடிவேல் அறிவித்துள்ளார். (ஒ)

## வாவியில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,நவ.3

மட்டக்களப்பு மீள்குடியேற்றப் பிரதேசமான கரடியனாறு இலுப் படிச்சேனை வாவிக்குள்ளிருந்து இளம் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் காலை கண்டெ டுக்கப்பட்டுள்ளதாகக் கரடிய னாறு பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் 38 வயதான இருபிள்ளைகளின் தந்தையான சிவஞானம் என அழைக்கப்படும் சாமிமுத்து என்ப வரினுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பாக கரடியனாறு பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (த)

# விடியல் நேரம்



துறவி ஒருவர் தன்னிடம் நின்ற சீடர்களைப் பார்த்து, ''விடியல் நேரம் என்பதை துல்லியமாக உங்களால் சொல்ல முடியுமா?''.

சீடர்கள் யோசித்தார்கள்.ஒரு சீடன் சொன்னான்.

''தொலைவிலுள்ள மிருகம் ஒன்றினைப் பார்த்து அது ஆடா அல்லது மாடா என்று இனம் காண எடுக்கும் நேரம் என்றான்''

அது ''சரியான பதில் இல்லை'' என்றார் துறவி.

இன்னொரு சீடன் சொன்னான், '' ஒரு மரம்...... அதைப் பார்த்து ஆலமரமா? அரசமரமா? என்று அடையாளம் காண எடுக்கும் நேரம் '' என்றான்.

அதுவும் ''சரியான பதில் இல்லை '' என்றார் துறவி.

இதன்பிறகு யாரும் பதில் சொல்லவில்லை. அனைவரும் அமைதி ஆகிவிட்டார்கள்.

''சுவாமி நீங்களே சரியான பதிலைச் சொல்லுங்கள்'' என்றார்கள் சீடர்கள் ''நம்முடைய உதவியை நாடி வருகிற ஒரு ஆண் நம்முடைய சகோதரன் அல்லது அது மாதிரியே வரக் கூடிய ஒரு பெண் நம்முடைய சகோதரி என்று நினைக்கக் கூடிய நேரம் தான் விடியல் நேரம் என்று விளக்கம் கொடுத்தார் துறவி.

அடுத்தவர்களை சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும் நினைக்கும் காலம் இந்தக் காலத்தில் இல்லாமலே போய்விட்டது.

ஒருத்தர் இன்னொருத்தரைப் பார்த்து ''நான் உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்து அனுப்பினேனே. கிடைத்ததா என்று கேட்டார்'' கிடைத்தது. அதற்கு நான் பதில் வாழ்த்து அனுப்பினேனே கிடைத்ததா என்று கேட்டார் மற்றவர்.

''ஏன் பொய் சொல்கிறீர்கள். நான் உங்களுக்கு வாழ்த்து அனுப்பவே இல்லை. அதற்குள் கிடைத்தது என்று சொல்கிறீர்களே'' என்றார் முதலாமவர்.

''ஏன் நீங்கள் அனுப்பினீர்கள் என்று சொல்லும் போது தான் கிடைத்தது என்று சொல்லக் கூடாது.'' என்று கேட்டார் மற்றவர்.

இப்படிப்பட்டவர்கள் இருக்கும் போது எப்போது விடிவுகாலம்?

**கோ.சுவாமிநாதன்.**

# சிந்தனை செய் மனமே

ஒரு நீதிபதியிடம் ஒரு சிக்கலான வழக்கு வந்தது. ஒரே குதிரைக்கு இருவர் சொந்தம் கொண்டாடினார்கள். நடந்தது இது தான்.

இரவு நேரத்தில்அரசர் மாறுவேடத்தில் வியாபாரி போல் குதிரை மீது வந்திருக்கின்றார். ஒரு காலற்ற ஏழைப் பிச்சைக்காரன் வழியில் உதவி கேட்டிருக்கின்றான். அரசன் காசு கொடுத்த பிறகும் தன்னைத் தன் குடியிருக்கும் இடத்தில் விட்டுச் செல்ல வேண்டும் என்று கேட்டிருக்கின்றான்.


இரக்கப்பட்டு அழைத்துச் சென்று இறங்கும் இடம் வந்ததும் இறங்கச் சொல்லியும் அவன் இறங்கவில்லை.

அக்கம், பக்கம் இருந்தவர்கள் எல்லாம் அவனுக்கே சாதகமாகச் சண்டைக்கு வந்தனர்.

இரவோடு இரவாக நீதிபதியிடம் சென்று நியாயம் கேட்டார்கள். இரவு நேரம் அதனால் குதிரையை விட்டு விட்டுப் போங்கள். காலையில் தீர்ப்புச் சொல்கிறேன் என்றார் நீதிபதி.

காலையில் வரும் போது '' இருபது குதிரைகளுக்கு நடுவில் அந்தக் குதிரையைக் கட்டி வைத்திருந்தார். யார் உரியவரோ அவரே கண்டுபிடித்துக் கூட்டிச் செல்லுங்கள்'' என்றார் நீதிபதி.

ஆனால் வேடிக்கை.இருவருமே குதிரையைக் கண்டு பிடித்து அருகில் போய்விட்டார்கள்.



என்றாலும் நீதிபதி வியாபாரி வடிவத்தில் இருந்த அரசரைப் பார்த்து ''உங்கள் குதி ரையை அழைத்துச் செல்லுங்கள்'' என்று தீர்ப்பளித்தார்.

''இருவருமே குதிரையைக் கண்டுபிடித்து விட்டோம். பிறகு எப்படி சரியான தீர்ப்பளித்தீர்கள்'' என்று கேட்டார் அரசன்.

நீங்கள் இருவருமே குதிரையைக் கண்டு பிடித்ததைப் பற்றி நான் நினைக்கவில்லை. குதிரை யாரைக் கண்டு பிடித்தது என்பதைத்தான் கவனித்தி ருந்தேன் என்றார் நீதிபதி.

''நீங்கள் குதிரை அருகே போனவுடன் குதிரை வாலை ஆட்டி உங்கள் முகத்தை முகம் தேய்த்துக் கொண்டது''. அதனால் தான் இப்படித் தீர்ப்பு வழங்கினேன் என்றார் .

**ச.கி.சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சரியமான நாடும் கடனும்

**'இருரெச' சிங்கள வார இதழின் 24ஆம் திகதிய ஆசிரிய தலையங்கம் தமிழ் வடிவில் இங்கு தரப்படுகின்றன**


அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை நிரப்பிக்கொள்வதற் காக ஒரு லட்சம் கோடி ரூபாவை அரசு கடன் பெறவுள்ளது. இத்தகவலை பிரதமர் டி.எம்.ஜயரத்ன அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அத்தோடு அடுத்த வரவு - செலவுத்திட்டம் தொடர்பான உத்தேச வரவு - செலவுக் கணக்கு விவரங்கள் அடங்கிய சட்டமூலமொன்றையும் அவர் நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்தார்.

அதற்கமைய அடுத்த ஆண்டின் ஒட்டு மொத்தச் செலவீனமாக ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 96 கோடியே 717 லட்சம் ரூபா கணக்கிடப்பட்டிருந்தது. இதில் ஏறத்தாழ 9ஆயிரம் கோடி ரூபாவைத் தவிர்ந்த துண்டு விழும் எஞ்சிய தொகையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெறவுள்ள கடன்கள் மூலமாகவே அரசு நிரப்பிக் கொள்ளவுள்ளது.

அந்த வகையில், உலகே வியந்து ஆச்சரியப்படும் அளவுக்குத் தேசத்தைக் கட்டியெழுப்ப திடசங்கற்பம் கொண்ட நாடொன்று ஒரு லட்சம் கோடிகள்வரையான நிதியைக் கடனாகப் பெறப்போவதாகத் தெரிவித்துள்ளது.

இது ஒருவிதத்தில் நகைப்புக்கிடமானது என்பதோடு இன்னொரு விதத்தில் நோக்கும்போது பாரதூரமான விடயமாகவும் உள்ளது.

ஒரு லட்சம் கோடிகளைக் கடனாகப் பெறும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் கதி எங்கு போய் முடியக்கூடும் என்ற மிகப்பெரும் வினா எம் முன் எழுகிறது. அனேகமாக இனிமேல் நடக்கப்போவது இதுதான் என்பதை ஓரளவுக்குக் கோடிட்டுக் காட்டும் அறிகுறியொன்றை கடந்த ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதி எமக்குப் புலப்படுத்தியிருந்தது. நெத்தலிக் கருவாடு முதற்கொண்டு உருளைக்கிழங்கு வரையிலான ஏராளமான அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பாக மேலதிக வரிகளை அரசு அன்று விதித்திருந்தது. 10 ரூபா, 20 ரூபா மற்றும் 30 ரூபா என்றவாறு மேலதிக வரிகளாக அந்த அத்தியாவசியப் பொருள்களுக்கு அரசு வரிகளை விதித்திருந்தது. இவ்வளவுக்கும் குறித்த வரி அதிகரிப்பினால் ஏற்படக்கூடிய பெறுபேறுகள் அல்லது எதிர்விளைவுகள் பற்றி பெரும்பாலான ஊடகங்கள் வாயே திறக்கவில்லை.



இது அரசுக்குக் கிட்டியுள்ள பெரும் இலாபகரமான நிலைப்பாடாக மாறியுள்ளது.

இலங்கையின் அமைச்சர்களதுபிரதான பேசுபொருள் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பானதாகவே உள்ளது. ஆனாலும் அண்மையில் ஜனாதிபதியின் தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றது. 65 ஆயிரம் ரூபா நிதியை வழங்க இயலாததன் காரணமாகப் பாடசாலைக் கட்டடமொன்றின் நிர்மாணப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை அந்தக் கூட்டத்தில் வெளிச்சத்துக்கு வந்தது. உடனேயே கடன்பட்டாவது அத்தொகையை வழங்கி நிர்மாணப்பணியை முடிவுக்குக் கொண்டுவருமாறு அதே சந்தர்ப்பத்தில் உயரதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

**முட்டையொன்றின் விலை 16 ரூபாவாகவும், தேங்காய் ஒன்றின் விலை 50 ரூபா வரையிலும், பாணின் விலை 50 ரூபாவாகவும் உயர்ந்துவிட்டன. இதைப் போன்று மேலும் பல அத்தியாவசிய நுகர்பொருள்களின் விலை மட்டங்களும் உச்சத்திலேயே இருக்கின்றன.**

இது எமது நாட்டின் பொருளாதாரச் சிறப்பையும் அபிவிருத்தி மாயா ஜாலத்தினதும் மகிமையையும் புலப்படுத்திவிட்ட ஒரு சந்தர்ப்பம் மட்டுமேயாகும்.

இந்த 65 ஆயிரம் ரூபாச் சிக்கல் அதன் பின்னரேனும் தீர்த்துவைக்கப்பட்டதா என்பது இன்னமும் தெரியவரவில்லை. அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இலங்கை பெற்றுள்ள பெருமளவு கடன் தொகைகளை மீளச்செலுத்தவேண்டியுள்ளது. அந்த நிலைப்பாட்டின் போது பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்பை இலகுபடுத்துவதற்காக மக்கள் மீது மேன்மேலும் வரிச் சுமைகளைச் சுமத்திவிடுவதைத் தவிர அரசுக்கு வேறு மார்க்கமொன்று இல்லையென்று பொருளாதார விற்பன்னர்கள் அபாய அறிவிப்பு விடுக்கின்றனர்.

தற்போது உள்நாட்டில் வரிகள் மூலமாகக் கிட்டும் ஒட்டுமொத்த வருவாயை விடவும் செலுத்தப்பட வேண்டியுள்ள தவணைக் கடன்கள் மற்றும் வட்டித் தொகைகள் அதிகரிக்கக் கூடிய அபாயமொன்று நிலவுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றைவிட கடந்த காலத்தில் இலங்கை பெற்றுக் கொண்டுள்ள ஒரு சில கடன்களுக்காக அறவிடப்படும் வட்டியானது சர்வதேச அளவுகோல்களுக்கு அமைய விசாலமான பெறுமதியைக் கொண்டிருப்பது நிலைமையை இன்னும் மோசமாக்கியுள்ளது.

குறிப்பாக அரசு சீனாவிடமிருந்து பெறும் கடன் தொகைகளுக்குச் செலுத்தும் வட்டியானது சலுகை நிபந்தனைகளின் கீழ் பெறப்படும் ஏனைய கடன் தொகைகளுக்குச் செலுத்தப்படும் வட்டியைவிடவும் பல மடங்குகள் அதிகமானதாகும். பெரும்பாலும் இந்த விடயங்கள் வரிகளைச் செலுத்தும் நாட்டு மக்களிடமிருந்து மூடிமறைக்கப்படுகிறதென்பது மிகத் தெளிவானதாகும். எவ்வளவுதான் மூடி மறைத்தாலும் பொருளாதாரத்தில் நிலவும் யதார்த்த நிலை மேன்மேலும் பெருமளவில் வரிகளை மக்கள்மீது சுமத்தும் போது வெளிப்படுவதைத் தடுத்து நிறுத்த எவராலும் இயலாது. தற்போதும் கூட கோழி முட்டையொன்றின் விலை 16 ரூபாவாகவும், தேங்காய் ஒன்றின் விலை 50 ரூபா வரையிலும், பாணின் விலை 50 ரூபாவாகவும் உயர்ந்துவிட்டன. இதைப் போன்று மேலும் பல அத்தியாவசிய நுகர்பொருள்களின் விலை மட்டங்களும் உச்சத்திலேயே இருக்கின்றன. யதார்த்தத்தின் உறைப்பை நாட்டுமக்கள் இப்போதுதான் உணரத் தொடங்கியுள்ளனர். இருப்பினும் தொடர்ந்து இந்தச் சுமைகளைத் தாங்கிப் பொறுத்துக்கொள்ளும் அளவுக்கு இந்த நாட்டின் மக்கள் இன்னமும் அப்பாவிகள் தான். ஏதோ கிடைப்பதை உண்டுவிட்டு சிவனேயென்று தமது கடமைகளைச் செய்வதற்கு அவர்கள் தயாராகவே உள்ளனர். இதன் காரணமாகவே அரசுக்கு நாட்டு மக்களின் பக்கத்திலிருந்து எவ்வித பிரச்சினைகளும் எழுவதில்லை.

தமிழில் : சரா

தற்போது அரச ஊழியர்களின் கோரிக்கையான 2500 ரூபா சம்பள அதிகரிப்பை அரசு உறுதிப்படுத்தியுள்ளது. சிலவேளைகளில் 2006ஆம் ஆண்டிலிருந்துகூட சம்பள அதிகரிப்பின் நிலுவைத் தொகையும் வழங்கப்பட இடமுள்ளது. அமைச்சுக்களின் அதிகாரிகளுக்கு வாகனங்களைத் தருவிப்பதற்கு பல நூறு கோடி ரூபாவரை ஒதுக்கப்படுகின்றது. ஆண்டொன்றில் 3ஆயிரம் கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தும் 'மிஹின் எயர்' நிறுவனத்துக்கு மேன்மேலும் கோடிக் கணக்கில் நிதி ஒதுக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களதும் அமைச்சர்களதும் வெளிநாட்டுச் சவாரிகளுக்கு எந்தவொரு கட்டுப்பாடும் இல்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சி நூற்றுக்கு 5.6 வீதமானது எனவும்,நாட்டின் தனிநபர் வருமானம் 2ஆயிரம் டொலர்கள் வரையிலும் அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கின்றது இதனால் நாட்டு மக்களுக்குக் கூட இயல்பு நிலையின் தாக்கமொன்று உணரப்படுவதற்கு வகையில்லை. இதன் காரணமாக நாட்டு மக்கள் இன்று சந்தேகத்துக்கு இடமின்றி - நிச்சயமாகவே ஆச்சரியமான நாடொன்றில் வாழும் திருப்தியை அனுபவித்து வருவதாகவே நாம் ஊகித்துக் கொள்ள வேண்டியுள்ளது.

# பிறர் துன்பத்தில் இன்பம் காணும் கல்மனம் படைத்த நபர்கள்

ஒருவரை ஒருவர் இம்சித்தல், கொடுமைப்படுத்துதல் அல்லது அடக்கி வைத்தல் போன்றவை பல்வேறு கோணங்களில் ஆங்காங்கே நடைபெறுவது வழமையாகி விட்டது. பல்கலைக்கழகங்களில் பகிடிவதை வரை இத்தகைய செயற்பாடுகள் விஸ்வரூபமெடுத்து உயிர்களைப் பறிக்கும் அளவுக்கு சென்று விடுவதைத்தான் காண்கின்றோம்.

அந்நிய நாடுகளுக்கு உழைப்புக்காகச் சென்று இம்சிக்கப்பட்டுப் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுக் கைதிகளாகி நாடு கடத்தப்பட்ட அல்லது சிறையில் அடைக்கப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்ட சம்பவங்களையும் நாம் அறிவோம்.

முள்ளு மரத்தை முளையிலே கிள்ள வேண்டும் எனும் பழமொழிதான் எனது சிந்தனைக்கு வருகின்றது. ஆயினும் இது எவ்வாறு சாத்தியப்படும் என்பதைப்பார்ப் போம்.

இரண்டிற்கு மேற்பட்ட பலர் ஒன்று சேரும்போது வீதிகள், பேருந்துகள், தொடர் உந்துகள் அல்லது பாடசாலைகள், அலுவலகங்கள் போன்ற இன்னோரன்ன இடங்களில் பல்வேறு விதமாக ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுதல், பரிகாசம் செய்து இம்சித்தல் போன்ற சம்பவங்களை நாம் காண்கின்றோம். ஆரம்பத்தில் முணுமுணுப்பில் அல்லது நகைச்சுவையாக ஆரம்பித்து நீதிமன்றுவரை செல்லும் சம்பவங்கள் பலவுண்டு.

**தற்பெருமை கொண்டவர்கள்**

எனக்கு நானேதான். நான் சர்வ வல்லமையும் பெற்றவன். என்னால் எதையும் சாதிக்க முடியும் எனும் தற்பெருமை கொண்ட சுபாவத்தினர் மற்றையோரைப் பயமுறுத்திச் சம்மதிக்கச் செய்து அல்லது கட்டாயப்படுத்தித் தமது விருப்பத்திற்கு அல்லது இச்சைகளுக்கு இணங்க வைக்க முயல்கின்றனர்.

நிஜ வாழ்க்கையில் இருந்து விடுபட்டுப் பிறரைத் தொந்தரவு செய்வதில் அல்லது துன்புறுத்துவதில் பிரியமுள்ளவனாக மாறிவரும் மனோ நிலையுடையோன் வாழ்க்கையில் திருப்தி ஏற்படாது எதையோ தேடுவது போன்று - சிறுபராயத்தில் துன்புறுத்தல்களுக்குள்ளாகி அல்லது ஏதேதோ காரணங்களினால் குடும்பப் பிணைப்பில் இருந்து விடுபட்டு - தாய், தந்தை, சகோதரங்கள் போன்ற நெருங்கிய உறவினர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்புக்கள் காரணமாக மனம் மாறி அல்லது இதுபோன்ற வேறு காரணங்களினால் இத்தகைய செயற்பாடுகளில் இவர்கள் ஈடுபடுகின்றனர் என்பது சில உளவியல் நிபுணர்கள் கருத்தாகும். நண்பர்கள், உறவினர்களுடன் பழகும் போது அவர்கள் வெறுப்படையக் கூடிய வார்த்தைப் பிரயோகங்களில் ஆரம்பித்து படிப்படியாக பிறரைத் தொந்தரவு செய்வதில் பிரியமுள்ளவனாக மாறி பிறரைக் கொடுமைப்படுத்த நினைப்பதே இம்சித்தல் அல்லது பிறரைத் துன்புறுத்த நினைத்தலின் பரிணாம வளர்ச்சியாகும்.

**தொந்தரவுகள் அல்லது சேஷ்டைகள்**

✱ சிறுகுறும்பு, சேஷ்டை அல்லது தொந்தரவு செய்தலில் ஒருவருடன் அல்லது பலருடன் வீண்வார்த்தைகள் பேசி அவர்களைக் குழப்பித் திரும்பத் திரும்ப அவர்களுக்கு எரிச்சலூட்டும்போது அவர்கள் மனக் குழப்பமடைவர். இது ஒருவித துன்புறுத்தல்.

✱ கொடுமைப்படுத்தல், பிறரைத் துன்புறுத்துவதில் பிரியமானவனாதல், திட்டுதல் அல்லது நிந்தித்தல் இதன் அடுத்த படியாகும்.

✱ ஒருவரைப் பெயர் சொல்லி அழைத்து வேண்டுமென்றே அவரை நிந்தித்து அவருடன் குதர்க்க வாதத்தைத் தொடுத்து அவரைத் தட்டிக் குத்தி, அடித்துத் தள்ளி அவருடன் உடல் ரீதியான சேஷ்டைகள் விடுதல்.

✱ வேண்டுமென்றே ஒருவரது பொருளைக் களவாடுதல், சேதப்படுத்தல், ஒளித்தல் அல்லது பணம் தருமாறு வற்புறுத்தலும் - தனக்கு விரும்பியதைச் செய்து தருமாறு தொந்தரவு கொடுத்தலும்.

## ஓர் உளவியல் பார்வை

ஒருவரை வேண்டுமென்றே தனிமைப்படுத்துதல், அதாவது தான் இலக்குவைக்கும் நபருடன் அங்கு குழுமியிருக்கும் அனைவரையும் கதைக்காது தடுப்பதற்கு அவரைப்பற்றிய பொய், புழுகுக் கட்டுக் கதைகளை அவிழ்த்து விடுதல், அலட்சியப்படுத்தி அவருடன் கதைக்காது இருத்தல். இது உங்களது அலுவலகங்களில் உங்களுக்கே நடக்கலாம். சக ஊழியர்கள் அல்லது உங்கள் தரத்திற்குக் கீழ்ப்பட்ட உத்தியோகத்தர்கள் - சில சமயங்களில் உங்களது மேலதிகாரி கூட இவ்வாறு உங்களுடன் முரண்படலாம்.

✱ பாடசாலைகளிலும், இத்தகைய சம்பவங்கள் நடைபெறலாம். ஆசிரியனால், மாணவரினால் அல்லது மாணவர்கள் இணைந்த - குழுவினரால் இத்தகைய புறக்கணிப்புக்கள் மேற்கொள்ளப்படலாம்.

**கொடுமைப்படுத்தல்**

தங்களிலிருந்து எவ்விதத்திலாயினும் மாறுபட்டவர்களாயின் அதாவது மாற்று இனத்தவர், மாற்றுக் கலாசாரமுடையோர், வலுவிழந்தோர் அல்லது பகட்டானோர், வேற்று நாட்டினர் போன்றோருடன் மாறுபட்ட கண்ணோட்டத்தில் அவர்களை வித்தியாசமாய்க் கணிப்பிட்டு வகுப்புவாதம் போன்று முரண்பட்ட செயற்பாடுகளை அவர்கள் மேல் பிரயோகிக்க முயலும்போது கொடுமைப்படுத்தல் நிகழ்கின்றது. இவ்வாறான கொடுமைப்படுத்தலின் போது தம்மைப் பெரும்பான்மையினர் எனக் கருதிச் சிறுபான்மையினரை அடக்க எத்தனிக்கின்றனர். நலிவுற்ற அல்லது வலுவிழந்த சிறுபான்மையினரையே தான் இவர்கள் இலக்கிடுகின்றனர்.

ஆங்கில மூலம்:
சார் மெயின் பேர்னாண்டோ
தமிழ் வடிவம் : காரை ஆனந்தன்

துன்புறுத்தல் அல்லது கொடுமைப்படுத்தல் இசைவாக்கம் பெற்ற இவர்கள் முன்யோசனைகள் எதுவுமின்றிச் சுயமாகவே செயற்படுவர். இவ்வாறான துன்ப துயரங்களுக்குள்ளாவோர் படிப்படியாகத் தமது சுயகௌரவத்தை இழக்கின்றனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி

15ஆம் ஆண்டு நிறைவு — அன்னம்மா மனுவற்பிள்ளை

25ஆம் ஆண்டு நிறைவு — மரியாம்பிள்ளை மனுவற்பிள்ளை





08.04.1995 - உதிர்வு - 03.11.1985

ஆண்டவன் எமக்களித்த அருஞ்செல்வம் எம் பெற்றோர்- அவர்
ஆண்டவன் அடிசேர்ந்து ஆண்டுபல ஆயின்
கண்மலர் தூவி நாம் கல்லறையில் இட்டாலும்- அகக்
கண்ணில் நிறைந்திருந்து எம்மை கருத்தாய் வழி நடத்துகிறார்
இருபத்தைந்து ஆண்டுகள் ஐயா அமலனடி சேர்ந்து
அன்று தந்த அறிவுரைகள் இன்றும் எம்மை வழிநடத்த சீரான
பாதையிலே செம்மையாய் நாம் நடந்து- உங்கள்
பெயரதனைக் காத்து உமக்குப் பெருமை சேர்த்திடுவோம்

பதினைந்து ஆண்டுகள் பரமனிடம் அம்மா சென்று பணிவன்பு
அறிவாற்றல் இந்த ஆசிரியை தந்த சொத்து, நட்பு, நகையோடு
பழகினாலும் நல்ல கண்டிப்பு கண்காணிப்பு கருத்திலே.
நிறைந்திருந்து கண்ணியமாய் நடத்துகின்றார்.
சீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறப்போமா
சேவிப்போம் அனுதினமும் ஓவியமாய் அகத்திருத்தி
பாவிகளைத் தேடிவந்த பரமனிடம் எங்களுக்காய் சேவிப்பீர்
நாமுமக்காய் சேவிப்போம் என்றென்றும்.

நினைவில் வாழும்:
சகோதரர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

128, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு.

## பரிசளிப்பு

தென்மராட்சி, நவ.3

மிருசுவில் அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவிச்சந்திரன், மக்கள் வங்கி கொடிகாமம் கிளை முகாமையாளர் க.சிறிதரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ-207)

## கௌரி விரதம்

தென்மராட்சி, நவ.2

மீசாலை வடக்கு, வேம்பிராய் சிவபூதவராயர் ஆலயத்தில் கேதார கௌரி விரத இறுதிநாள் விசேட பூஜைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் பூஜைகள் நடைபெறும்.

(204-207)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் செல்வி விஜயரஜனி
அவர்களின் பாசமிகு தந்தை
**அமரர் வி.சிவசுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கரந்தன் இராமுப்பிள்ளை
வித்தியாலயம், நீர்வேலி.
(105508)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 06 * 07 * 1924

விண்ணில் 15 * 10 * 2009



## அமரர் விசுவலிங்கம் நவரத்தினம்

பறந்தோடி விட்டதப்பா ஆண்டு ஒன்று - ஆனாலும்
ஆறவில்லை எம் மனங்கள்
கண்கலங்கி அது வழியாய் நீர்பெருகி உள்ளம்
உருகுதப்பா உன் உரையைக் கேட்காமல்
அங்கம் நடுங்குதப்பா-கண்களிலே தூக்கமில்லை
எண்ணம் பெருகுதப்பா-ஏக்கம் குறையவில்லை
நாம் கேட்போம் இறைவனிடம் இது தான் வாழ்வென்று
நீர் கேளும் இறைவனிடம் இன்பமுடன் வாழ்ந்திட

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இணுவில் தெற்கு,
யாழ்ப்பாணம்.
(105364)




தலைநகரில் கடந்த மூன்று ஆண்டுகளாக வெற்றிகரமாகப் பல்லாயிரக்கணக்கான மாணவர்களை உயர்கல்விக்காக வெளிநாட்டிற்கு அனுப்பும் நம்பிக்கையான நிறுவனத்தில் நீங்கள் இணைந்து 100% உத்தரவாதத்துடன் VISAவைப் பெற்றுக்கொள்ள நாம் உதவக் காத்திருக்கின்றோம்.

Study in the
**UNITED KINGDOM**
இறுதிச் சந்தர்ப்பம்
IELTS தேவையில்லை

**JAN/FEB INTAKES IN PROGRESS**

2010 AUGUST 12ல் அறிமுகப்படுத்தப்பட்ட
புதிய நடைமுறையின் கீழ் பின்வரும் கற்கை நெறிகளுக்கு IELTS தேவையில்லை.

**Foundation Degree Programme - No IELTS** — Basic Requirements: O/L, A/L (atleast 1 Pass), Working Experience Dip in English in Sri Lanka

**Business / General English Course - No IELTS** — Basic Requirements: O/L, A/L (atleast 1 Pass), Working Experience Dip in English in Sri Lanka

**Postgraduate / MBA / MSC - No IELTS** — Basic Requirements: O/L, A/L Degree, Working Experience

உங்களுக்கான அனுமதிகள், ஆவணங்களை தயார்படுத்தல் என்பன எங்களால்
நேர்த்தியான முறையில் செய்து தரப்படும்

சகல நாடுகளுக்குமான அனைத்து வித Documentation மற்றும் விசாக்களும்
100% உத்தரவாதத்துடன் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் பெற்றுத்தரப்படும்.

Eisc **EXPRESS**
INTERNATIONAL STUDIES & CO[illegible]

30-1/14, W.A. De Silva Mawatha Colombo 6. (Above Hotel Saravana Bavan)
Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com
Robin - [illegible] 222 422 Selva - 0714 - 299 935, Web : www.expresslanka.com

FLEX Graphic


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கை: ஒரு தொகுதி ஆசிரியர்களிடம் பெரும் வரவேற்பு

திருகோணமலை,நவ.3

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் 2011ஆம் ஆண்டுக்கான ஒரே பாடசாலையில் 5வருடங்கள் கடமையாற்றிய அதிபர்கள், 8வருடங்களைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் ஆகியோருக்கான இடமாற்றக் கொள்கை ஒரு தொகுதி ஆசிரியர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

திருகோணமலை வலயக்கல்வித் திணைக்களம் 2011ஆம் ஆண்டுக்கான அதிபர், ஆசிரியர்களுக்கான இடமாற்ற விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அதற்கமைய வலயக்கல்வித் திணைக்களம் ஏற்கனவே விவரங்களைத் திரட்டி வைத்துள்ளது. கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்படி இடமாற்றத்திற்கான முன்னெடுப்புகளை வலயக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

5 வருடங்களைப் பூர்த்தி செய்த அதிபர்களும் 8வருடங்களைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களும் மேற்படி இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் திணைக்களம் ஏற்கனவே திரட்டி வைத்துள்ள தகவலின்படி சுற்றறிக்கையின் பிரகாரம் தாமாகவே இடமாற்றத்தைச் செய்யும் என வலயக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேற்படி இடமாற்ற முன்னெடுப்புகள் ஆசிரியர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. நீண்டகாலமாக ஒரே பாடசாலையில் காலம் கடத்தும் ஆசிரியர்கள் அப்படியே இருக்க சில ஆசிரியர்கள் மட்டும் தமது பணத்தையும் உடலையும் வருத்தி பயணம் செய்து தமது கடமையைச் செய்கின்றனர்.

இன்றைய இந்த இடமாற்றக் கொள்கை எங்களை நிம்மதிப் பெருமூச்சுவிட வைத்துள்ளது. இனியாவது எங்களுக்கு விடிவு கிடைக்கும் என்று தூர இடங்களில் கடமையாற்றும் சில ஆசிரியர்கள் குறிப்பிட்டனர்.

ஆனாலும் திணைக்கள செல்வாக்கும் அரசியலும் இதற்குள் நுழைந்து இத்திட்டத்தை செயலிழக்கச் செய்யாமல் இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றனர் அவர்கள். (ளி)

# திண்மக்கழிவு அகற்றல் வேலைத்திட்ட விழிப்பூட்டல் நிகழ்வு கல்முனையில்

மட்டக்களப்பு, நவ.3

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் முறையான திண்மக் கழிவு அகற்றல் வேலைத் திட்டம் தொடர்பாக விழிப்பூட்டல் நிகழ்ச்சி யொன்று இடம்பெற்றது.

கல்முனை சுற்றாடல் மற்றும் பசுமை பாதுகாப்பு அமைப்புத் தொண்டர்களின் அனுசரணையுடனும், ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித் திட்ட சேவைக்கான அலுவலக வளங்கள் அபிவிருத்தி ஆலோசனை நிறுவனத்தின் வழிகாட்டலுடனும் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை மாநகர பிரதேச வீதி வீதியாக மேற்கொள்ளப்பட்ட இந்த விழிப்பூட்டல் நிகழ்வில் முறையாகத் திண்மக் கழிவகற்றல், திண்மக்கழிவு முகாமைத்துவ சுற்றாடல் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டம் ஆகியவை தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் வழி காட்டல் அட்டைகளும் தொண்டர்களால் வீடு வீடாக விநியோகிக்கப்பட்டன. (ளி)

# ஜனாதிபதியின் பதவி ஏற்புக்காக மூவின மக்களின் வைபவங்கள்

மட்டக்களப்பு, நவ.3

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவி ஏற்பு வைபவத்தின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் மூவின மக்களும் இணைந்து மாவட்டமெங்கும் பல்வேறு வைபவங்களை நடத்த உள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக ஆராயும் விசேட மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இதற்குத் தலைமை வகித்தார்.

மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், வன பரி பாலனத் திணைக்கள உயர் அதிகாரிகள் ஆகியோர் உட்படப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்தை முன்னிட்டு இம்மாவட்டத்தில் 50,000 மரக்கன்றுகள் 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நடப்படும் என மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் இதில் தெரிவித்தார். (ளி)




# அக்கரைப்பற்று வைபவத்தில் அமைச்சர் அழகப்பெரும பங்கேற்பு



மட்டக்களப்பு,நவ.3

அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியில் பல்வேறு கற்கை நெறிகளில் கல்வி கற்று இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ஏ.ஜீ.எம்.கபூர் தலைமையில் கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்றது.

பிரதம அதிதியாக இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும், கௌரவ அதிதியாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவும் கலந்துகொண்டனர்.

விசேட அதிதிகளாக கிழக்கு மாகாண அமைச்சர்களான ரி.நவரெட்ணராஜா, விமலவீர திசாநாயக்க, மாகாண சபை உறுப்பினர்களான எம்.எல்.ஏ.அமீர், தேவப்பெரும, அக்கரைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல்.தவம், தொழில்நுட்ப மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சித்ரல் அம்பேவத்த ஆகியோர் பங்குபற்றினர். கல்விமான்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அமைச்சர்களான டலஸ் அழகப்பெருமவும் அதாவுல்லாவும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினர். (ளி)

# உன்னிச்சை மக்களுக்கு 23 மில்லியன் கடனுதவி

## மத்திய வங்கி ஆளுநர் வழங்கினார்

மட்டக்களப்பு,நவ.3

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கடந்த சனிக்கிழமை காலை விஜயம் செய்த இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி அஜித் நிவாட் கப்ரால், யுத்த அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களைக் கொண்ட உன்னிச்சைப் பிரதேசத்துக்கும் விஜயம் செய்தார்.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவை இணைந்து வழங்கிய 23 மில்லியன் ரூபாய் கடன் திட்ட நிதியை 614 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆளுநர் பகிர்ந்தளித்தார்.

பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மத்திய வங்கி ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் ஆகியோர் உட்படப் பலர் நிதி கையளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டனர். (ளி)

# காந்தியின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து நாம் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டும்

## நுவரெலியா மாவட்ட எம்.பி. இராதா தெரிவிப்பு

நுவரெலியா,நவ.3

மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து நாம் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக கலை கலாசார சங்கமான இரத்தினதீபம் அமைப்பு கடந்த 30 ஆம்திகதி மகாத்மா காந்தியின் ஜனனதினத்தை கொண்டாடியது. அதில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து நாம் நிறையக் கற்றுக் கொள்ளவேண்டியுள்ளது. அவர் 1930ஆம் ஆண்டு மேற்கொண்ட உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டம் அவரது வாழ்வில் முக்கிய திருப்புமுனையாக இருந்தது.

17 வருடங்களின் பின் 1947 இல் இந்தியா சுதந்திரமடைவதற்கு அவருடைய இந்த அஹிம்சை வழிப் போராட்டம் பேருதவியாக இருந்தது. அது இன்றுகூட எமது மக்கள் அகிம்சா வழியில் தமது உரிமைகளைப் பெற வழிகாட்டியாக இருக்கின்றது.

வடபகுதியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக எவ்வளவோ உயிர்கள் பலியாகின. எத்தனையோ ஜீவன்களது இரத்தம் சிந்தப்பட்டது. ஆனால் மகாத்மா காந்தியோ ஒரு துளி இரத்தம் கூடச் சிந்தாது இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

அவரது இலட்சியம் 'இந்தியன்' என்பதாகும். என்ன இனமானாலும் என்ன மதமானாலும் என்ன மொழி பேசினாலும் அவன் இந்தியன் என்ற கோட்பாட்டை அவர் வலியுறுத்தி வந்தார் - இவ்வாறு இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

**கலைஞர்கள் கௌரவிப்பு**

இதன்போது இரத்தின தீபம் அமைப்பு 15 ஊடகவியலாளர்களுக்கு ஊடகமாமதி, ஊடகத்தாரகை, நிழற்படவேந்தன், காட்சி ஊடகச் செம்மல் போன்ற கௌரவ விருதுகளை வழங்கி கௌரவித்தது.

நாடாளுமன்ற அங்கத்தவர் வீ.இராதாகிருஷ்ணன் பிரதம அதிதியாகக் கலந்து விருதுகளை வழங்கி வைத்தார்.

வருடாவருடம் இரத்தின தீபம் அமைப்பு கலைஞர்களையும், ஊடகவியலாளர்களையும் 'இரத்ன தீபம்' விருது வழங்கி கௌரவிப்பது வழக்கம்.




இவ்வருடம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட ஊடகவியலாளர் விவரம் வருமாறு-

என்.எம்.ராஜா, ஸ்டார் ராஸீக், எம்.எல்.எம்.லாபிர், அலியார் இக்பால், மொகமட் இர்பான், எஸ். முகுந்தன், எஸ்.ராமானுஜம். ஜே.எம்.ஹாபீஸ், மர்லின் மரிக்கார், எஸ்.கே.சமரநாயக்க, ஜே.ஏ.எல். ஜயசிங்க, [illegible] காமினி சந்திரசேகர. (ளி)

# தடை செய்யப்பட்ட போதைமருந்து ஹற்றனில் கைப்பற்றப்பட்டது

கண்டி,நவ.3

இந்த நாட்டில் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ள என்.சீ.எனும் போதைமருந்து ரின்கள் 15 ஆயிரம் ஹற்றன் அளுத்கால பிரதேசத்தில் மதகொன்றுக்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தபோது ஹற்றன் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏராளமான பாடசாலை மாணவர்கள் இந்தப் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளதாக விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது. ரின் ஒன்றின் விலை 200ரூபாஎனவும் தெரிய வந்துள்ளது.

நுவரெலியா மாவட்டம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட பாரிய தேடுதல் நடவடிக்கையின்போது கடையொன்றிலிருந்து 14 ஆயிரம் என்.சீ போதைப் பொருள் ரின்கள் ஏற்கனவே கைப்பற்றப்பட்டன.

தீவிரமாக மேற்கொள்ளப்படும் தேடுதல் நடவடிக்கைகளுக்குப் பயந்து சம்பந்தப்பட்டவர்கள் இந்த ரின்களை மதகடியில் ஒளித்து வைத்திருக்கலாமெனப் பொலிஸார் எண்ணுகின்றனர்.

ஹற்றன் பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி சீ.சந்திரசேன வின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (204)

# சிவனொளிபாதமலைக் காட்டில் 'கள்' இறக்கி விற்பனை செய்த நால்வர் கைது

கொழும்பு, நவ.3

மஸ்கெலியா - லக்கம்பே துணுதுடு ஓயாவின் மேற்குப் பிரதேசத்தில் உள்ள சிவனொளி பாதமலைக் காட்டில் அனுமதிப் பத்திரமின்றி கித்துள் 'கள்' இறக்கி விற்பனைசெய்து வந்த நால்வர் ஹட்டன் பொலிஸ் விசேட நடவடிக்கைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 30 லீற்றர் 'கள்' பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வியாபாரம் கெனியோன் நீர்மின் நிலையத்திற்கு அருகில் பாரிய அளவில் நடந்துவந்துள்ளது. இப்பகுதியைச் சூழவுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கும், மலைக்கு வரும் யாத்திரீகர்களுக்கும் கள் விற்பனை செயயப்பட்டு வந்துள்ளது. பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

# மலைகப் பகுதியில் இம்முறை தீபாவளி களைகட்டவில்லை

நுவரெலியா, நவ. 03

மலையகப் பகுதிகளில் இம்முறை தீபாவளிப் பண்டிகை களைகட்டவில்லை.

தீபாவளிக்கு வழங்கப்பட்ட முற்பணம் போதாதலாலும், விலைவாசி உயர்ந்துள்ளதாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என தோட்டத்தொழிலாளர்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

மேலும், சித்திரைப் புத்தாண்டு என்றால் அரசு உடனடியாக சில அத்தியாவசியப் பொருள்களின் விலையை குறைக்கின்றது. தமிழ் மக்களின் பண்டிகைகளின்போது விலைக்குறைப்பு இடம்பெறுவதில்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மலையக வர்த்தக நிலையங்களில் தீபாவளி வியாபாரம் களைகட்டவில்லை என்றும், மக்களின் வருகை குறைவால் நகரங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன என்றும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (ளி)

# ஜனாதிபதி மஹிந்த நாளை தலவாக்கலைக்கு பயணம்

கொழும்பு, நவ.3

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை வியாழக்கிழமை தலவாக்கலைக்கு விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தலவாக்கலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேல்கொத் மலை நீர்மின் உற்பத்தித் திட்டத்தைப் பார்வையிடுவதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது நுவரெலிய மாவட்ட அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு தலவாக்கலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்பட்டுத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச்சுடர்
O/L மாவட்ட வலம் - 2010
க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்கும் பாராட்டுக்குமுரிய ஆசிரியர்
திரு.எஸ்.யோகேஸ்வரன்,
சரஸ்வதி மத்திய கல்லூரி,
பதுளை.
தொ.பே.இல: 077-6207878

G.C.E.(O/L)
வலம்-4
வெளியீடு-3
பதுளை

## English Language - Time - one hour

**Answer all the questions**

**Test: 1**

Complete the following posters. Select the correct word from the group of words given within brackets. There are two extra words in each group.

a. Human beings require.............. to grow, reproduce and maintain good .................... (wealth, food, wood, health)

b. First the ................ food is prepared by cutting out spoilt and all unwanted ....................... (charts, fried, parts, fresh)

c. The ................ tea is finally packed in chests and ................ to Colombo. (finished, exported, brought, packed)

d. I must thank spell ...................... in my ..................... (Television, checker, computer, cleaner)

d. If you have a ............................ in your hands wear ................ when handling food. (gloves, covers, hurt, cut)

**Test: 2**

Complete the dialogue with the appropriate answers given in the box.

A : I expected you for my birthday why didn't you come.
B : I am sorry Sajitha, I had to ....................................
A : Why ...............................
B : Well; he had .................................... day before yesterday.
A : It's a pity is he alright now?
B : He underwent a surgery and he was advised to ..............................
A : Is it so? ....................................
B : You're welcome That's very nice of you.

* stay is hard about three weeks.
* visit my uncle at the hospital in Colombo.
* I'll visit him very soon.
* met with an accident.
* What's wrong with him?

**Test: 3**

Read the following advertisement and answer the following questions given below.

ALL ISLAND ART COMPETITION

All students
In government and private schools are invited to send their paintings

Categories
Junier 13 - 15 years
Senior 16 - 18 years

Topic -
"Peace in Sri Lanka"
Basic rules.
- Paintings must be certificated by the class teacher as the original work of the participant.
- Paintings must be in 12" - 10" paper.
- One participant can send one painting only.
- The dicision of the panel of judges will be final.
- All the paintings shoud reach the peace secretariat by post on or before 31st June 2009.

Director General Secretariat Colombo.

1) What is the advertisement on?
.......................................................
2) What is the size of the painting?
.......................................................
3) Who can participate in the art competition?
.......................................................
4) What is the last date for submitting the paintings?
.......................................................
5) Write the similar meaning to the following from the advertisement.
1. not copied: ..............................
2. cannot be changed: ..............................

**Test: 4**

Match the sentence parts and make meaningful sentences. Write the number of the part in the correct box first.

A
1) If he studies hard ..............................
2) that there in a rabbit in the moon ..............................
3) When he fell off his bicycle yesterday ..............................
4) Beause he had a headache ..............................
5) That I bought yesterday ..............................
6) I'm happy that ..............................
7) If I were a bird ..............................
8) By the time we reached the cinema ..............................
9) When I went to the library yesterday ..............................
10) As most of the members had not turned up ..............................
11) That there is some form of life on Mars? ..............................

B
1. some children believe
2. This is the dictionary
3. Saman didn't go to school yesterday
4. It is possible
5. He injured his knee
6. the film had already started
7. the meeting was cancelled
8. he will pass the examination
9. you all got through the examination
10. I would fly around the world
11. I met Saman

**Test: 5**

Read the following passage and answer the questions given below.

The world is divided into over 180 countries. Some countries such as China and India are very large. Others such as Costa Rica are quite small. Many countries have a big population. This means they have lot of people living there. The people of a country have their own language and customs or way of life, which vary all over the world.

Looking from the space, the earth looks like a globe or a ball covered with blue oceans. The pacific, the Atlantic, the Indian, the Artic and the Antartic are the oceans. The Pacific is the largest ocean. The continents Africa, Asia, Australia, America and Europe are divided up into countries. The number of countries change all the time as some countries join together or others split into separate countries.

A. Give the following information
1) The number of countries in the world?
.......................................................
2) The number of the people living in a country?
.......................................................
3) The shape of the earth.
.......................................................
4) The earth is covered with
.......................................................
5) The name of the oceans?
.......................................................

B. Underline the correct Answers
1) Atlantic is ................
a) a continent. b) a country. c) an ocean.
2) The largest ocean is ....................
a) Pacific ocean. b) the Indian ocean. c) the Arctic.
3) The number of countries in the world
a) always remains the same.
b) keep changing. c) is very small.

**Test: 6**

Write a paragraph on one of the following. Use about 50 words.
a) How to make a cup of tea.
b) Cultural festivals in Sri Lanka.

**Test: 7**

Write an "Invitation" for an exhibition organized by your school. You are one of the members for the organizing committee.

**Test: 8**

Read the following paragraph and put the underlined words in to the correct column. There are several <u>stages</u> in canning processes. First the <u>fresh</u> food is <u>prepared</u> by cutting out spoilt and <u>unwanted</u> parts are <u>washed</u> and cut into pieces as required. Then the food is <u>packed</u> into cans that can be sealed with <u>lids</u>.

| Nouns | Verbs | Adjectives |
|---|---|---|
| | | |

## English Language - II Time - 2 hours

**Test: 09**

Read the following letter, in each line one word is incorrect, and it is underlined. Write the correct word in the space provided. The first one is done for you.

Dear Ravi,
how are you? <u>hopes</u> you are well. (....hope...)
<u>Sorry</u>, I haven't <u>write</u> to you for so long. (...............)
I were very busy getting ready to go to (...............)
Colombo for a pre - school course. I am <u>stay</u> (...............)
with a family <u>in</u> the moment; but my parents (...............)
<u>wants</u> to find a hostel for me. My course (...............)
is <u>interest</u>. My classes. are from 8.00 a.m. (...............)
to 2.00 p.m. <u>everydays</u>. So i can walk there. (...............)
Will come to see you <u>while</u> I get the (...............)
vacation. Please write soon. Give my regards <u>for</u> your family. (...............)

with love
sarath

**Test: 10**

Change the following sentences into passive voice.
1) Somebody cleans the office everyday.
.......................................................
2) The strange man attacked the poor boy on the road.
.......................................................
3) Mr.Ramanan gave a nice presentation to the students.
.......................................................
4) Students organized the exhibition.
.......................................................
5) They print news paper here.
.......................................................

**Test: 11**

Read the paragraph on elepants and write simillar paragraphs about the other two animals. Use all the words given with the picture.

(17ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசு அதிக வட்டிக்கு கடன் பெறுவதால் மக்கள் மீதான கடன் பளு அதிகரிக்கிறது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.3

அரசு உலக நாடுகளிடம் அதிக வட்டிக்கு கடனைப் பெறுவதால் மக்கள் மீதான கடன் பளு அதிகரிக்கின்றது. வாழ்க்கைச்செலவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மஹிந்த சிந்தனையின் தார்ப்பரியத்தை மக்கள் தற்போது உணரத் தொடங்கி விட்டனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக நேற்று முன்தினம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல்கலைக்கழகத்தில் நில வும் குறைபாடுகளை சுட்டிக்காட்டி, நிவர்த்தி செய்யக் கோரும் மாணவர்கள் மீது, அரசு அடக்குமுறையைக் கையாளுகின்றது. 1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி யின் ஆட்சிக் காலத்தில் தனியார் பாடசாலை உருவாக்கம் தொடர்பாக நாம் பேசும்போது அதனைச் சிலர் எதிர்த்தனர். குறிப்பாக அன்று நாம் கிராமப்புறப் பாடசாலைகளை மகா வித்தியாலயங்களாகவும், மத்திய மகா வித்தியாலயங்களாக வும் தரம் உயர்த்தினோம்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்தில் இலவச பாடநூல், உணவு, சீருடை என்பன பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தோம். விசேடமாக மஹாபொல புலமைப்பரிசில் திட்டத்தையும் ஐக்கிய தேசியக் கட்சியே ஆரம்பித்தது. ஆனால் அரசு இன்று இலவசக் கல்வியைத் தடைசெய்ய எத்தனிக்கிறது.

நாட்டில் யுத்தம் முடிவடைந்துள்ளது. ஆனாலும் அதிகளவான வட்டி வீதத்துக்கு அரசு கடன்படுகிறது. அத்துடன் விவசாயிகள் தற்போது பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அரிசிக்கு கட்டுப் பாட்டு விலையைப் பெற்றுக் கொடுப் பதில் அரசு சிக்கல் நிலையை எதிர் கொண்டுள்ளது.

பாணின் விலை அதிகரித்தாலும் பிரச்சினை இல்லை என்று பிரதமர் கூறுகிறார். குழந்தைகளுக்கான பால்மா விலையை நிர்ணயித்து அதனை சீராகப் பாதுகாப்பதை விடவும், பால்மா நிறுவனங்களையே பாதுகாக்க வேண்டும் என்று வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் காஸ் விலையிலும் ஒரு சிறந்த நடை முறை இல்லை. இறுதியாகப் பொது மக்களே பாதிக்கப்படுகின்றனர்.

அரசின் உள்ளக நெருக்கடிகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தலை தூக்க ஆரம்பித்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் குடிசைக் குடியிருப்பாளர்கள் அகற்றப்பட முன்னர் அதற்கான மாற்று வழிகளை அமைத்துவிட்டே அந்த நடவடிக்கையை மேற்கொண்டது. அதைப் போன்றே நடைபாதை வியாபாரிகளுக்கும் ஒரு சிறந்த வியாபார இடத்தை அமைத்துக் கொடுத் தோம். ஐக்கிய தேசியக் கட்சி எதையுமே செய்ய வில்லை, செய்யப்போவதில்லை என்று அரசு கூறிக்கொண்டாலும் இன்றும் ஐக்கிய தேசியக் கட்சி மக்களின் நன்மைக்காகவே குரல் கொடுக்கிறது.

- இப்படி அவர் கூறினார். (சி)

# கொழும்பு விளக்க மறியற்சாலையில் தமிழ் அரசியல் கைதி உண்ணாவிரதம்

கொழும்பு, நவ.3

கொழும்பு விளக்க மறியற்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி ஒருவர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

விசுவமடு, முல்லைத்தீவைச் சேர்ந்த 42 வயதுடைய குணரெட்ணம் மனோகரன் என்பவரே தன்னை விடுதலை செய்யக்கோரி நேற்றுமுன்தினம் காலை 7 மணி தொடக்கம் ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள கைதியின் கோரிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தான் கடந்த 26.10.2008 ஆம் திகதி அன்று விசுவமடு, முல்லைத் தீவில் வைத்து பயங்கரவாத சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு கொழும்பு விளக்க மறியற்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தான் பல தடவைகள் தனது விடுதலை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விண்ணப்பம் செய்தும் இதுவரை தனது விடுதலை தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் தொடர்ந்து விளக்க மறியற்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்,

அதேநேரம் தனது மூன்று குழந்தைகளும் மனைவியும் விசுவமடு 12ஆம் கட்டை புனர்வாழ்வு முகாமில் உள்ளதாகவும் இவர்களைப் பராமரிப்பதற்கும் பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கும் தனது மனைவியால் முடியாமல் இருப்பதாகவும் இதனால் தன்னை விடுதலை செய்து தனது பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாக அமைவதற்கு உதவி செய்ய வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

தனது இந்தக் கோரிக்கை நிறைவேறும் வரை தான் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடரப் போவதாகவும் அந்தக் கோரிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இவரின் மனைவி மேரி லூசியா (வயது 37), குழந்தைகள் மெரிசலா (பெண், வயது 10), திரிசலா (பெண், வயது 8), நிர்மனல் (ஆண், வயது 2) என்பது குறிப்பிடத்தக்கதாகும். (த)

# கிழக்கில் புதையல் தோண்டிய குழுவினர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு,நவ.3

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண தொலைத் தொடர்புக் கோபுரம் அமைந்திருந்த கற்பாறையில் காணப்படும் அரிய தொல்பொருள் சான்றுகளை அழித்து அங்கிருக்கும் புதையலைத் தோண்ட முற்பட்ட ஐவரடங்கிய குழுவொன்று நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கற்பாறையானது மாவிலாறு யுத்தம் வரை பல்லாண்டுகளாக விடுதலைப் புலிகளின் முகாமாகவும், கிழக்கு மாகாணத்திற்கான அவர்களின் பிரதான தொலைத் தொடர்புக் கோபுரம் அமையப் பெற்றிருந்த இடமாகவும் விளங்கியிருந்தது.

குறித்த கற்பாறையில் பெருமதிப்பிலான புதையல் ஒன்று இருப்பதாக அப்பிரதேச மக்கள் தெரிந்து வைத்துள்ளதுடன் அதற்கான சான்றுகளும் கற்பாறையில் செதுக்கப்பட்டிருந்தன. ஆயினும் புலிகளின் காலத்தில் ஒரு போதும் அந்த தொல்பொருள் சான்றுகளோ, புதையலோ அழிக்கப்படவில்லை.

மாவிலாறு யுத்தத்தின் பின் விடுவிக்கப்பட்ட பிரஸ்தாப இடத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முந்திய அரசர் காலத்து பௌத்த விகாரையொன்று அமையப் பெற்றிருந்ததாகக் கூறி, அரச ஆதரவுடன் பௌத்த பிக்கு ஒருவரும் அங்கு குடியமர்த்தப்பட்டார். இராணுவ பாதுகாப்பும் வழங்கப்பட்டது.

இவ்வாறான நிலையிலேயே அங்கிருக்கும் புதையலைத் தோண்ட முற்பட்ட சிலர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பெரும்பாலும் திருகோணமலையை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதியமைச்சர் ஒருவரின் நெருங்கிய ஆதரவாளர்கள் என்றும் பாதுகாப்புத்தரப்பைச் சேர்ந்தவர்களும் உள்ளடங்குவதாகவும் எமது தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்கு மேலாக அண்மைக் காலமாக வட- கிழக்கின் பல பகுதிகளில் இவ்வளவும் காலமும் பாதுகாக்கப்பட்டிருந்த தொல்பொருள் முக்கியத்துவம்மிக்க இடங்கள் அழிக்கப்படுவது மற்றும் புதையல் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் காவல்துறை அதிகாரிகள் பலர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (த)

# இடி தாங்கிகள் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.3

இடி, மின்னல்களிலிருந்து கடற்றொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக யாழ்.குடாக் கடலின் முக்கிய முனைகளில் சக்தி வாய்ந்த இடிதாங்கிகளைப் பொருத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் யாழ்.அரச அதிபருக்கு எழுதிய கடிதத்திலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக இடி மின்னல்களால் பலர் உயிரிழந்த செய்திகள் எமது தொழிலாளரிடையே அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. அத்துடன் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் கோபுர உச்சியில் பொருத்தப்பட்டுள்ள இடிதாங்கி யாழ்.குடாநாட்டுக் கடலின் பரந்த பகுதிக்குப் பாதுகாப்பை வழங்குமென நாம் எண்ணவில்லை.

ஆகவே மண்டைதீவு, கல்முனை, தலைமுனை போன்ற முக்கியத்துவம் வாய்ந்த முனைப் பகுதிகளில் அதி கூடிய சக்தி வாய்ந்த இடிதாங்கிகளைப் பொருத்தி கடற்றொழிலாளர்களின் உயிர்களை இடி மின்னல் தாக்கங்களிலிருந்து பாதுகாப்பதற்கு ஆவன செய்து தருமாறு வேண்டுவதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-23)

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)


Elephants
very large
grey
live in Africa/ India / Sri Lanka
eat leaves




Penquins
usually black and white
can't fly
can swim very well
live by the sea
eat fish




Rabbits
quite small
brown
can run very fast
eat grass




.................................... .................................... ....................................
.................................... .................................... ....................................
.................................... .................................... ....................................

**Test: 12**
Write a letter to the principal of your school requesting permission to have the "English Week celebration", next month. Also tell him that you need permission for practices for two weeks. Imagine that you are the head prefect.

**Test: 13**
Write the following statements in indirect speech.
Mary said, "I shall bring the book tomorrow"

He said "i posted the letter yesterday"

Uma said "I have beautiful costume"

The teacher said "We are organizing a variety entertainment

He said (to her) "you have done well"

**Test: 14**
Write a notice to be put up on the notice board about the "exhibition" to be held in your school. Include date; time and place. Imagine that you are one of the members of the organizing committee.

**Test: 15**
Read the following passage and answer the questions given.

**OLIVER TWIST**

The room in which the boys were fed, was a large stone hall with a cooking pot on a stove at one end. Out of this cooking pot, the Master of the Workhouse, served the gruel at meal times. Of this festive food, each boy had one bowlful and no more except on national holidays, when there would be a two ounce slice of bread besides.

The bowls never needed washing. The boys scraped them with their spoon until they were clean and bright. Oliver Twist and his companions suffered slow starvation for three months. At last they got so wild with hunger that one boy, who was big for his age, said he was afraid that one night he might eat the weak young lad who slept next to him. Lots were cast to see who would walk up to the master that evening and ask for more. Oliver Twist was the unlucky one.

The evening arrived the boys took their places. The master in his cook's uniform stood by the cooking pot. The gruel was out and eaten. The boys whispered together and winked at Oliver, while his neighbours nudged him. He was very afraid.
At last he rose from the table, basin and spoon in his hand, and spoke in a small trembling voice.

"Please, Sir I want some more"

The master was a fat, healthy man, but he turned very pale. He stared in amazement at the small rebel for some seconds, then aimed a blow at Oliver's head with the serving spoon and cried aloud for the Beadle, the officer of the law.

"Sir Oliver Twist asked for more"

"He did?" replied that gentleman in a shocked tone. "Depend on it that boy will end on the gallows one day. That boy will be hanged"

1) The Boys scraped the spoons until they were clean and bright because they were.
   a. Greedy. b. hungry. c. angry.
2) The master turned pale because he was.
   a. pleased. b. afraid. c. angry with Oliver
3) Oliver spoke in a trembling voice because he was
   a. Weak. b. afraid. c. ill.
4) .................... was in cook's uniform.
   a. The Beadle. b. Oliver. c. The master.
5) Each boy had .................... bowelful of food every morning.
   a. Three. b. one. c. two.
6) They were given .................... ounces of bread on National holidays.
   a. One. b. three. c. two.

* Underline the correct meaning of the words in thick type.

7) Oliver Twist and his **Companions** suffered for three months.
   a. Friends. b. master.
   c. parents. d. officers.
8) The boys **whispered** together and winked at Oliver.
   a. Shouted b. spoke softly.
   c. laughed. d. cried.
9) He stared in **amazement** at the small rebel.
   a. Fear. b. anger.
   c. shock. d. wonder.
10) The boys will end on the **gallows** one day.
   a. Be in trouble. b. be in prison.
   c. be hanged. d. be freed.
11) Oliver spoke in a **trembling voice.**
   a. Sweet voice. b. shaky voice.
   c. loud voice. d. hoarse voice.

**Test: 16**
You are in your school hostel. Your parents have written a letter to you. They are worried about a complaint about your bad company, and bad conduct in school. Write a reply home explaining the truth. Tell them you always behave well in school and all your friends are good and are free from all evil habits. Assure them you mind your studies very seriously. Use about 200 words.
You may include the following points or others of your own.
- Firstly, tell them the complaint was false.
- Say you are free from all bad habits.
- Convince them you concentrate on your studies and you mind things seriously.
- Inform them that you are elected as a prefect and it proves your good conduct.
- Conclude the letter asking them not to believe any tell tale about you.

(End)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி தில்லைச்செல்வி இராஜேஸ்வரன்
அவர்களின் அன்புத் தாய்
அமரர் சிவஞானம் இராசம்மா
அவர்களின் திடீர் மறைவினால்
துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லுறவு மன்றம், யா/செங்குந்த இந்துக் கல்லூரி. (சி/572427)

# மரண அறிவித்தல்

## நயினாதீவு பொன்னம்பலம் மகேஸ்வரன்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மகேஸ்வரன் 30.10.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்-கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கண்ணுத்துரை- பூபதியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுகந்தியின் (ஆசிரியை, மெதடிஸ்ற் கல்லூரி-கொள்ளுப்பிட்டி) அன்புக் கணவரும் கேசவ், கிரிகேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருச்செல்வம் (அஜந்தா ஹோட்டல்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் Dr.பூபாலசிங்கம் (Poly Clinic, வெள்ளவத்தை), கலாரூபி (ரஞ்சி), லண்டனை வதிவிடமாகக் கொண்ட ரவீந்திரன், ராஜேந்திரன், குலேந்திரன் அமெரிக்காவை வதிவிடமாகக் கொண்ட பாலேந்திரன், லோகேந்திரன் மற்றும் வசந்தி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் இராமச்சந்திர னின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (03.11.2010) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை இந்து பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொன்னம்பலம் திருச்செல்வம் (சகோதரர்) 0777387151,
திருமதி சுகந்தி மகேஸ்வரன் (மனைவி) 2363551.
36/8, 37ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6.
(சி/572318)

# மணிவாசகர் சபை நடத்தும் சைவசமய பாடப் பரீட்சை

காரைநகர், நவ.3

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் சைவ சமய பாடத் தேர்வு எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காரைநகர் பாடசாலைகளில் இடம்பெற உள்ளதாக சபையின் தேர்வுச் செயலாளர் க.நேர்த்திரானந்தன் தெரிவித்துள்ளார்.

காரைநகரில் உள்ள 9 நிலையங்களில் இடம்பெற உள்ள இந்தத் தேர்வில் தரம்2 தொடக்கம் 11 வரையான வகுப்புகளைச் சேர்ந்த ஆயிரத்து இருநூறு மாணவர்கள் தோற்ற உள்ளனர்.

இந்தத் தேர்வில் அதி உயர் புள்ளிகளைப் பெறும் ஐந்து மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்களும் தரம் ரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் அடுத்த மாதம் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற உள்ள மணிவாசகர் விழாவில் வழங்கப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கிடையே சபையினால் நடத்தப்பட உள்ள பேச்சு, மனனம், பண்ணிசை, வில்லிசை ஆகிய போட்டிகள் பாடசாலை மட்டத்தில் இடம்பெற்று பிரதேச மட்டப் போட்டிகள் அடுத்த மாத முற்பகுதியில் இடம்பெற உள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

(204-250)

## பிறர் துன்பத்தில் இன்பம்.....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகமே இருள் சூழ்ந்தது போல், இவர்களது வாழ்க்கை சூனியமாகின்றது. கொடுமைப்படுத்துவோர், மற்றையோரை அடிமைப்படுத்தித் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதில் தாம் திறமைசாலிகள் என நினைத்துப் பூரிப்படைவர்.

பழிக்குப் பழிவாங்கும் எண்ணம் அல்லது வஞ்சம் தீர்க்க நினைக்காதவர்கள் மீதும் தமது தற்பாதுகாப்பிற்காகவேனும் எதிர்த்துச் சண்டையிட முடியாதவர்கள் மீதுமே தான் இவ்வாறான சேஷ்டைகள், துன்புறுத் தல்கள் பிரயோகிக்கப்படுகின்றது.

மேற்கூறிய துன்புறுத்தல்களை மேற்கொள்வோர் தமது சிறுபராயத்தில் இத்தகைய துன்புறுத்தல்களுக்கு ஆளாவதனால் உளவியல் ரீதியாகவே இவர்களுக்கு மன அழுத்தம் ஏற்பட்டு இவர்களது மனதில் தாழ்வு மனப்பான்மை குடிகொள்கிறது. இதனால் இவர்களது உள்ளுணர்வுகள் ததும்பி உணர்ச்சிவசப்படுகின்றனர். இந்நிலையில் உள்ளடக்கி வைக்கப்பட்ட ஆத்திர உணர்வுகள் எரிமலையாக வெடித்துப் புகை கக்கி மற்றையோரைக் கொடுமைப்படுத்தத் தூண்டுகின்றது என்பது உளவியல் தத்துவமாகும். ✱

# Grade Way @ Achevement

இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. யாழ்ப்பாணத்திலும்,கிளிநொச்சியிலும் ஆரம்பிக்கப்படவுள்ள எமது warld wide multinational கம்பனிக்கு உள்நாட்டு,வெளிநாட்டு முகாமைத்துவத்துக்கான வெற்றிடங்கள் உள்ளன. இதற்கான சர்வதேச ரீதியான முகாமைத்துவ பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளன. நீங்களும் O/L, A/L சித்தியடைந்திருப்பின், கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- Mr.Udaya
0717494735 0214915550 (105521)

# அலுவலர்கள் தேவை

கட்டட நிர்மாணத்துடன் தொடர்புடைய தொழில்நுட்பவியலாளர்கள், தொழில்நுட்பக் கற்கைநெறி மாணவர்கள் தேவை. அலுவலக நாள்களில் காலை 8மணி முதல் நண்பகல் 12மணி வரை நேரில் சமுகம் தரவும்.

தொடர்பு: ஆலின்ஸ் பிறைவேட் லிமிடெட்,
8, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(105517)

# மரண அறிவித்தல்

## செல்வி றஜிந்தா கணேசலிங்கம்



பிரான்ஸைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட றஜிந்தா கணேசலிங்கம் 28.10.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இணுவில் மேற்கைச் சேர்ந்த பிரான்ஸில் வசிக்கும் கணேசலிங்கம் (ராசன்- ரஜிந்தாஸ் உரிமையாளர்)- சதீஸ்வரி (வாணி) தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், அம்பிகை, பரராஜசிங்கம் மற்றும் சிவஞானம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரஜனன், ரஜிதா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தர்மராஜா (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (இலங்கை- இணுவில்), சிவசுப்பிரமணியம் (லண்டன்), சோமேஸ்வரி குலசிங்கம் (இலங்கை), சிவனேஸ்வரி சிவபாலன் (சுவிஸ்) ஆகியோரின் பெறாமகளும் சறோஜினிதேவி சுப்பிரமணியம், ஜெயலட்சுமி வன்னியசிங்கம் (பிரான்ஸ்), சுவேந்திரன் (கிளி- பிரான்ஸ்), சீனிவாசன், சச்சிதானந்தம் ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2010) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
பொ.கணேசலிங்கம் (பிரான்ஸ்).
+33141553558,
+ 33650816726. (105514)

தகவல்: பொ.பாலசுப்பிரமணியம்
"கமலாம்பிகை பவனம்",
இணுவில் மேற்கு, இணுவில்.
தொலைபேசி: 021-3211187.

# மரண அறிவித்தல்

## சாந்தலிங்கம் யோகராசா



சரசாலையைப் பிறப்பிடமாகவும் சிறுவிளான், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தலிங்கம் யோகராசா நேற்று (02.11.2010) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சாந்தலிங்கம்- ஆச்சிமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் பூலோகசுந்தரியின் அன்புக் கணவரும் நிமலன், விமலன், மென்மொழி, வசந்தினி, ஞானமொழி, தமிழினி, அகிலன் ஆகியோரது அன்புத் தந்தையும் சுகந்தினி, லிங்கேஸ்வரி, ரவீந்திரகுமார், ஜெயந்தன், ஜெயசங்கர், அருள்ராஜ், தீபலக்ஷ்மி ஆகியோரது பாசமிகு மாமனும் செந்தூரன்,சிந்துஜன், பிரியங்கா, சிந்துராகுல், அஜீனா, ஜெனேஷன், உத்திரா, பவிஷன், கஜானுகா ஆகியோரது பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2010) புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்திற்காக அளவெட்டி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: யோ.நிமலன்
(மகன்),
குடும்பத்தினர்.
சிறுவிளான், இளவாலை.
தொ.பே.:
0214908345, 0776079658.
(105519)

# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 779
சீட்டிழுப்பு திகதி 01.11.2010

எழுத்து: Y

வெற்றி இலக்கங்கள்: 05 26 52 67

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 25,773,519.20 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000,000/= | - |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 15 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 352 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 649 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100/= | 16361 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 9352 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 234410 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 36942 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,090,220.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 26,725,458.40

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே சுமுக உறவை ஏற்படுத்த அமெ. முயற்சி

ஹனோய்,நவ.3

ஆசியாவின் இரண்டு மிகப்பெரிய பொருளாதார வல்லரசுகளான சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே, சுமுகமான உறவை ஏற்படுத்த அமெரிக்கா விரும்புகிறது. ஆனால் சீனா தன் முடிவிலிருந்து மாறவில்லை.

எனினும், அரிய வகை கனிம வளங்கள் ஏற்றுமதி மீது விதித்துள்ள தடை விலக்கப்படும் என சீனா அறிவித்துள்ளது. சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே உள்ள சில தீவுகளுக்கு இரு நாடுகளும் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து உரிமை கொண்டாடி வருகின்றன.

இப்பிரச்சினையில், சமீபத்தில் ஜப்பானின் கடற்படைப் படகு மீது சீன மீனவர் ஒருவரின் படகு மோதியதால், அவரை கைதுசெய்த ஜப்பான், சீனாவின் கடுமையான மிரட்டலுக்குப் பின்னர் அவரை விடுவித்தது. இதையடுத்து, இரு நாடுகளின் உறவும் சிக்கல் அடைந்துள்ளது.

இதற்கிடையில் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா ஆகிய நாடுகளில் கையடக்கத் தொலைபேசி, காற்றாலை இயந்திரம் தயாரிக்கப் பயன்படும் அரிய வகை கனிமங்களின் ஏற்றுமதியை சீனா நிறுத்தி வைத்து விட்டது.

இந்தக் கனிமங்கள் சீனாவில் மட்டுமே கிடைக்கும். அதனால் இம்மூன்று தரப்பும் அதிர்ச்சியடைந்துள்ளன.

இந்நிலையில், வியட்நாமில் நடந்து முடிந்த, 'ஆசியான்' மாநாட்டின்போது, சீனா, ஜப்பான் ஆகிய இரு நாடுகளும். தங்களுக்கிடையிலான தீவுகளின் உரிமைப் பிரச்சினை குறித்து பேச்சு நடத்தி சுமுகமான தீர்வு காண வேண்டும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கேட்டுக் கொண்டார்.

இதற்கு, ஜப்பான் தயாராகவே இருந்த போதும், சீனப் பிரதமர் வென்ஜியாபோ மறுத்துவிட்டார். ஹனான் உச்சி மாநாட்டின்போது ஜப்பான் பிரதமரைச் சந்திக்கவும் அவர் மறுத்து விட்டார்.

இதுபோன்ற பிரச்சினைகளில் இரட்டை நிலை எடுக்கும் அமெரிக்கா, இப்பிரச்சினையில், தீவுகள் மீதான ஜப்பானின் உரிமை அந்நாட்டின் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டது எனக் கருதுகிறது.

இதனால் இப்பிரச்சினையில் மேலும் சிக்கல் நீடிக்கிறது. எனினும், தென்சீனக் கடல் பகுதியிலுள்ள தீவுகள் பலவற்றின் மீது சீனா, ஜப்பான், வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் உரிமை கொண்டாடும் நிலையில், இப்பிரச்சினையை சர்வதேச சட்டவிதிகளுக்கு உட்பட்டு அமைதியான முறையில் தீர்ப்பதற்கு அமெரிக்கா உதவும் என ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

ஹிலாரியின் இந்த ஆலோசனையை தாம் பரிசீலிப்பார் என சீன வெளியுறவு அமைச்சர் யங் ஜியே சி தெரிவித்துள்ளார். அரிய வகை கனிம ஏற்றுமதி விரைவில் தொடரும் என சீன அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

# நான் கொலை செய்யப்படலாம் பிரான்ஸ் ஜனாதிபதி அச்சம்

லண்டன்,நவ.3

பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோஷி பிரிட்டிஷ் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில், கடந்த 50 ஆண்டுகளில் ஜனாதிபதியாக இருந்த எவரையும் விட என்னைத்தான் அதிகம் பேர் வெறுக்கிறார்கள். அதனால் நான் கொலை செய்யப்படலாம் என்று அஞ்சுகிறேன் என்று கூறியிருக்கிறார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், ''என்னை இந்த அளவுக்கு வெறுப்பதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை'' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வு பெறும் வயதை 60இல் இருந்து 62ஆக இவர் உயர்த்தினார். இதனால் தொழிற்சங்கங்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

உலக அரங்கில்



உடல்நலக்குறைவால் அவதியுற்ற பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் மார்கெரட் தட்சர், லண்டனிலுள்ள தனது இல்லத்திலிருந்து வைத்தியசாலைக்கு தனது மகள் கார்லோ உதவியுடன் கொண்டு செல்லப்படுகிறார்.

# கணினியின் அறிவை மிஞ்சிய மிகச் சிறிய தேனீயின் மூளை

## பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தெரிவிப்பு

லண்டன்,நவ.3

சிக்கலான கணிதத்திற்கு, கணினியை விட தேனீக்கள் தீர்வளித்துள்ளது என பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த உயிரியல் விஞ்ஞானிகள் தேனீக்கள் போக்குவரத்து குறித்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர். அதில், விற்பனைப் பிரதிநிதியின் சிக்கலான போக்குவரத்து வழிக்கு, கணினியை விட தேனீக்கள் எளிதாக தீர்வளித்துள்ளன என்று தெரிவித்துள்ளனர்.

பல்வேறு இடங்களுக்கு விற்பனை பிரதிநிதிகள் செல்வதற்கான வழிகள் குறித்து, கணினி மூலம் ஆய்வு செய்யப்பட்டது.

அதன் மூலம், அதிக இடங்களுக்கு, குறுகிய நேரத்தில், எளிதாகச் சென்று சேர்வதற்கான குறுக்கு வழிகளை கணினி உருவாக்கிக் கொடுத்தது.

ஆனால், பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் நடத்திய தேனீக்கள் குறித்த ஆய்வில், கணினி உருவாக்கிய வழிகளை விட, அதிக வழிகளை தேனீக்கள் பயன்படுத்தியமை தெரிய் வந்தது.

தேனீக்கள் நாள்தோறும், தேனை சேகரிப்பதற்காக, பூக்களைத் தேடி அதிக தூரம் பயணம் செய்கின்றன. பறப்பதற்காக, அதிக சக்தியை செலவழிக்கும் தேனீ, குறுகிய நேரத்தில், அதிக பூக்களுக்குச் செல்கிறது.

இதற்காக, குறுக்கு வழிகளை அதிகமாகப் பயன்படுத்துவது தெரிய வந்தது. இதுகுறித்து பிரிட்டனைச் சேர்ந்த ரோயல் ஹாலோவே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயிரியல் விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

அந்த ஆய்வறிக்கையில் அவர்கள் கூறியுள்ளதாவது:

தேனைத் தேடி, தேனீக்கள் அதிக பயணம் மேற்கொள்கின்றன. ஆனால், அவை அதிக குறுக்கு வழிகளை பயன்படுத்துகின்றன. இதற்காக, கணினியின் உதவியுடன், செயற்கை பூக்களைக் கொண்டு, தேனீக்களின் பயண வழியை கண்காணித்தோம்.

அதில், தேனீக்கள் மிகக்குறைவான நேரத்தில், வெவ்வேறு பூக்களுக்குச் செல்வதற்கு அதிக குறுக்கு வழிகளை பயன்படுத்துவதை கண்டறிந்தோம். அந்த வழிகள், விற்பனைப் பிரதிநிதி செல்வதற்காக, கணினி உருவாக்கி கொடுத்த வழிகளை விட, அதிக வழிகளாகும்.

இதன் மூலம், கணினின் அறிவை, மிகச் சிறிய தேனீயின் மூளை மிஞ்சியுள்ளது.

- இவ்வாறு விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# பஹ்ரைன் முஹாரக் மாநகர சபைக்கு முதல் பெண் மேயர்

துபாய்,நவ.3

பஹ்ரைனில் முஹாரக் மாநகர சபைக்கு நடைபெற்ற தேர்தலில் பாத்திமா சல்மான் வெற்றி பெற்றுள்ளார்.

இதன் மூலம் பஹ்ரைனின் மாநகர சபை முதல் பெண் மேயர் என்ற பெருமையை பாத்திமா பெற்றுள்ளார். மேலும் வளைகுடா நாடுகளின் நகரசபை முதல் பெண் மேயரும் பாத்திமா சல்மானே.

முஹாரக் மாநகர சபைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின்போது ஆரம்பத்தில் இருந்தே பாத்திமா முன்னணியில் இருந்தார்.

முதல்சுற்று வாக்கு எண்ணிக்கையில் 28.8 சதவீத வாக்குகளைப் பெற்று முன்னணியில் இருந்தார். இறுதியாக 52.5 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றிவாகை சூடினார்.

பஹ்ரைன் மாநகர சபைத் தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் பாத்திமா சல்மான் வரலாறு படைத்துள்ளார். இது குறித்து கூறும் பாத்திமா சல்மான், இதுபோன்ற சாதனையை பஹ்ரைனிலுள்ள ஒவ்வொரு பெண்ணாலும் படைக்க முடியும் என்றார்.

சுயேச்சையாக மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்ட பாத்திமா சல்மான் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பே இல்லை என்பதே பெரும்பாலானோரின் கருத்தாக இருந்தது.

எனினும், இதைப்பற்றி எல்லாம் பாத்திமா கவலைப்படவில்லை. சோர்ந்துவிடவில்லை. தேர்தல் களத்தில் தொடர்ந்து மக்கள் ஆதரவைத் திரட்டி வெற்றிவாகை சூடினார்.

பாத்திமா வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டதும் செய்தியாளர்களை சந்தித்த அவர், தேர்தலில் நான் நிச்சயம் வெற்றி பெறுவேன் என்பது தெரியும்.

நான் செய்த சமூக சேவையை மக்கள் அங்கீகரித்துள்ளனர். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

மாநகரசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற பாத்திமா சல்மானுக்கு பஹ்ரைனின் மன்னர் ஹமத் பின் இசா அல்-காலிபா தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

# வெடிபொருள் அனுப்பிய விவகாரம்: கைதான ஏமன் மாணவி விடுதலை

நியூயோர்க்,நவ.3

அமெரிக்கா சென்ற இரு விமானங்களில் வெடிபொருள் வைத்த வழக்கில், ஏமன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மாணவி, ஞாயிற்றுக்கிழமை விடுவிக்கப்பட்டார். அவர் மீது பொலிஸார் வழக்கு எதுவும் பதியவில்லை.

ஏமனிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்ற இருவிமானங்கள், துபாய், லண்டனின் கிழக்கு மிட்லேண்ட்ஸ் ஆகிய விமான நிலையங்களில் தரையிறங்கிய போது, அவற்றில் சக்தி வாய்ந்த வெடிபொருள்கள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வழக்கில், அந்தப் பொருள்கள் வைத்திருந்த பெட்டிகளில், எழுதப்பட்டிருந்த பெயர், கையடக்கத் தொலைபேசி எண் மூலம், ஏமனில் பொறியியல் படித்து வரும் ஹனான் அல்-சமாவியையும், அவரது தாயாரையும் பொலிஸார் கைது செய்து விசாரித்தனர்.

இதைக் கண்டித்து, அவர் படித்து வரும் பல்கலையின் மாணவர்கள் போராட்டம் நடத்தினர். விசாரணையில், தாங்கள் சிக்கிவிடக் கூடாது என்பதற்காக, அந்த மாணவியின் பெயரை திருட்டுத்தனமாக தீவிரவாதிகள் எழுதிவைத்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதுகுறித்து ஏமன் உயரதிகாரி ஒருவர் கூறுகையில்,''இந்தப் பார்சல்கள் ஏற்றப்பட்ட சரக்கு அலுவலகத்தில் பணிபுரியும் அனைவரிடமும், இந்தப் பெண்ணை அடையாளம் காட்டச் சொன்னோம். ஆனால், அவர்கள் பார்சலை அனுப்பியது இவரல்ல என்று தெரிவித்து விட்டனர்.

இவரை நன்கு [illegible] இவரது முழுப்பெயரையும் அடையாளத்தையும் இதில் பயன்படுத்தியிருக்க வேண்டும்'' என்றார்.

# 2,600 ஆண்டுகளுக்கு முன்னர் சீனத்திலிருந்து பரவியது பிளேக்!

பீஜிங்,நவ.3

பிளேக் என்ற நோய் சீனத்திலிருந்துதான் ஐரோப்பாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் பரவியது என்று மரபணு ஆய்வு அறிஞர் மார்க் அச்மேன் கூறுகிறார். இவர் அயர்லாந்தில் பணிபுரிகிறார்.

2,600 ஆண்டுகளுக்கு முன்னால் சீனத்திலிருந்து பிளேக் நோய்க்கிருமிகள், பட்டுச் சாலை என்று அழைக்கப்படும் பட்டு வியாபாரிகள் பயன்படுத்தும் சாலை வழியாக ஐரோப்பா சென்ற சீனர்கள் மூலம் ஐரோப்பாவுக்கும், கப்பலில் சென்ற சீனக் கடலாடிகள் மூலம் ஆபிரிக்காவுக்கும் பரவியிருக்கிறது.

பிளேக் நோய்க் கிருமியால் இறந்தவர்களின் பொதுக் கல்லறைகளைத் திறந்து அவர்களைத் தாக்கிய பிளேக் கிருமியின் மரபியல் தன்மையை ஆராய்ந்ததில் அது 2,600 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டுள்ளமை தெரியவந்தது.

அது சீன நாட்டிலிருந்த பிளேக் கிருமி மரபணுக்களுடன் ஒத்திருந்தது வெவ்வேறு ஆய்வுகளில் தெரியவந்தது. பிரான்ஸின் மார்செய்ல்ஸ் துறைமுகத்திலும் பிரிட்டனின் ஹெர்போர்ட் துறைமுகத்திலும் பிளேக் நோய்க்கிருமியால் ஏராளமானோர் இறந்துள்ளனர்.

அவர்களுடைய சடலங்களைப் பெரிய பள்ளம் தோண்டி அதில் ஒன்றாகப் புதைத்துள்ளனர்.

நோர்வேயில் பெர்ஜன் ஆப் ஜூம் என்ற நகரிலும் பிளேக் நோயால் பலர் இறந்துள்ளனர். ஆனால் அவர்களைத் தாக்கிய நோய்க் கிருமிகள் சீனத்திலிருந்து வந்தவை அல்ல என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பாடசாலைகளின் ஹொக்கிச் சங்கத்துக்கு அங்கீகாரம்

வலிவடக்கு,நவ.3

இலங்கை பாடசாலைகள் ஹொக்கி சங்கத்துடன் யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் இணைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை அணிகளின் ஹொக்கி விளையாட்டை மேம்படுத்தும் வகையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரனின் முயற்சியைத் தொடர்ந்து யாழ்.மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் உருவாக்கப்பட்டு இயங்கத் தொடங்கியுள்ளது.

சங்கம் முதற்கட்டமாக இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்துடன் இணைந்துகொள்ள மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து அது நிறைவேறியுள்ளது.

இவ்வாண்டு அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ள 13,15 வயதுப் பிரிவுகளுக்கான ஹொக்கிப் போட்டியில் விளையாட யாழ்.மாவட்டத்திலிருந்து தலா இரண்டு ஆண், பெண் அணிகளைத் தெரிவு செய்து அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# துசித்தாவுக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம்,நவ.3

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இவ்வாண்டிற்கான தடகளப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மாணவி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

பெண்கள் பிரிவில் யாழ்.பல்கலைக்கழக மாணவி சி.துசித்தா 4×400 மீற்றர் அஞ்சல் ஓட்ட நிகழ்வில் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கல பதக்கத்தினைப் பெற்றுள்ளார். (த-23)

# தட்டெறிதல் போட்டியில் அனுசாவின் சாதனை பதிவு

வலிவடக்கு,நவ.3

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான மெய்வன்மைப் போட்டியில் தட்டெறிதல் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ரி.அனுசாவின் 2009ஆம் ஆண்டு பெறுபேறு வடமாகாணத்தின் சாதனையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டுபெறுபேறுகளின் அடிப்படையில் வடமாகாணத்திற்கான புதிய சாதனைப் பட்டியலை பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்த காலத்தில் 2007 ஆம், 2009ஆம், 2010ஆம் ஆண்டுகளில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ரி.அனுசாவின் பெறுபேறுகள் முறையே 33.1 மீற்றர், 40.77 மீற்றர் 39.31 மீற்றர் சிறந்த பெறுபேறுகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ரி.அனுசாவின் 2009 ஆம் ஆண்டு பெறுபேறான 40.77 மீற்றர் தூரம் வடமாகாணத்தின் புதிய சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

# வடமராட்சிக் கல்வி வலய சம்பியனானது ஹாட்லி

யாழ்ப்பாணம்,நவ.3

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்று வந்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த வியாழக்கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. 18 வயதுப் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது.

இரண்டு அணியினரும் தத்தமது அணிகள் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கோடு களம் இறங்கின.

முதல் பாதி ஆட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி அணி 2 கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியினர் கோல்களைக் அடிப்பதற்கு முயற்சியினை மேற்கொண்டபோதும் அது எதிர் அணியினரின் பின்கள வீரர்களால் தடுக்கப்பட்டது.

ஆட்டத்தின் முதற்பாதி இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது ஹாட்லிக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்பதனை நிரூபிக்கும் வகையில் விளையாடினர். எதிர் அணியினரின் கோல் பரப்பிற்குள் கோல் அடிப்பதற்காக முயற்சிகள் பல தடவைகள் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அபாரமாக விளையாடிய ஹாட்லிக் கல்லூரி அணியினர் அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டு அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர். இறுதியில் 5:0 என்ற கோல் கணக்கில் ஹாட்லி கல்லூரி அணி வெற்றிபெற்றது. (உ-23)



வடமாகாண கரப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனான யாழ். மாவட்ட அணி வீராங்கனைகளைப் படத்தில் காணலாம். (55)

# சைக்கிள் ஓட்டத்தில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம்,நவ.3

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வராஹி சன சமூக நிலையத்தின் வெள்ளி விழாவையொட்டி உள்ளூர் அணிகளுக்கு இடையே இடம்பெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

* முதலாமிடம் - பொ.பாலறஜீன்.
* இரண்டாமிடம் - மா.இலங்கேஸ்வரன்.
* மூன்றாமிடம் - சி.கஜன்ராஜ். (த- 23)

# ஹொக்கி அணிகள் விண்ணப்பிக்கலாம்

வலி.வடக்கு,நவ.3

இலங்கை பாடசாலைகள் ஹொக்கி சங்கத்தினால் நடத்தப்படும் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 13,15 வயது பிரிவினருக்கான ஹொக்கிப் போட்டியில் விளையாட விரும்பும் பாடசாலை அணிகளை யாழ். மாவட்டப் பாடசாலைகளின் ஹொக்கிச் சங்கத்தின் செயலாளருடன் உடன் தொடர்புகொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

செயலாளர், யாழ்.மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம், உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில் என்னும் முகவரியுடன் நேரிலோ அன்றி 0776450806 தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# கொழும்பில் சனியன்று மோ.சைக்கிள் பந்தயம்

யாழ்ப்பாணம்,நவ.3

உலகில் பிரபலமாகிவரும் 'ப்ரீஸ்டைல் மோட்டார் குரோஸ் டேர்டேவில்' எனப்படும் மோட்டார் சைக்கிள் பந்தயம் எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளது.

டேர்டேவில் மோட்டார் சைக்கிள் பந்தயங்களில் பிரபல்யமான பல வீரர்கள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

இப்பந்தயங்களில் புகழ் பெற்ற ரெட்புல் எக்ஸ்பைட்டர்ஸ் ஜேம்ஸ் என்னும் அணியைச் சேர்ந்த போட்டியாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-23)

# சிந்தன விதானகேக்கு தங்கம்

பாரம் தூக்குதல் போட்டியில் சிந்தன விதானகே மீண்டும் புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த கொமன்வெல்த் போட்டிகளில் 306 கிலோ கிராம் பாரம் தூக்கி வெள்ளிப்பதக்கத்தை வென்ற இவர், தேசிய விளையாட்டுப் போட்டியிலும் 306 கிலோ கிராம் பாரம் தூக்கி தங்கம் வென்று சாதனை புரிந்துள்ளார்.

# மஞ்சுள குமார முதலிடம்

தென்மாகாணத்தைச் சேர்ந்த மஞ்சுள குமார உயரம் பாய்தல் போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். இவர் 2.18 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து முதலிடத்தைப் பிடித்தார்.

# மேல் மாகாணம் முதலிடம்

யாழ்ப்பாணம்,நவ.3


கண்டி, போகம்பரையில் நடைபெற்று முடித்த 36 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் மேல் மாகாணம் முதலிடம் பெற்றுள்ளது.

இலங்கை விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்தப்போட்டி கடந்த சனிக்கிழமை கண்டி போகம்பரை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி நேற்று முன்தினம் திங்கட்கிழமை முடிவடைந்தது.

75 தங்கப் பதக்கங்களையும் 54 வெள்ளிப் பதக்கங்களையும், 50 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று மேல் மாகாணம் முதலிடத்தை பெற்றது.

42 தங்கப் பதக்கங்களையும், 33 வெள்ளிப் பதக்கங்களையும், 44 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று மத்திய மாகாணம் இரண்டாம் இடத்தையும் 39 தங்கப் பதக்கங்களையும், 27 வெள்ளிப் பதக்கங்களையும், 29 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று வட மேல் மாகாணம் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. (த-26)

*காரத்தே சம்மேளனம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்திய கராத்தே போட்டியில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த எஸ்.தர்ஷன் தங்கப்பதக்கத்தையும், எஸ்.பிரதிப்குமார் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர். அவர்களைப் படத்தில் காணலாம். (த-26)*



# மகாஜன மூன்றாமிடம்

வலிவடக்கு,நவ.3

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் சமநிலையில் காணப்பட்டதை நிரூபிக்கும் வகையில் இரு அணிகளும் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை மோதிக் கொண்டார்கள்.

கோல்கள் பெற எடுத்த முயற்சிகளும் இரு அணிகளினாலும் மாறி மாறித் தடுக்கப்பட்ட நிலையில் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 4:3 என்ற கோல் கணக்கில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (த-86)

## யாழ்.கோட்ட உதைபந்தாட்டம்

# முதல் சுற்றில் விறுவிறுப்பான ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.3

யாழ். கோட்ட பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமானது. இதில் 14, 16, வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 14 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் நாவாந்துறை ஆர்.சி.வித்தியாலய அணியை எதிர்த்து சென் பற்றிக்ஸ் அணி மோதியது.இதில் 1:0 என்ற கோல் கணக்கில் சென் பற்றிக்ஸ் அணி வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். சாள்ஸ் அணி மோதியது. இதில் 3:0 என்ற கோல் கணக்கில் சென் ஜோன்ஸ் அணி வெற்றிகண்டது.

மற்றைய ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணி மோதியது.

யாழ்.மத்திய கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகண்டது.

16 வயதிற்கு உட்பட்ட பிரிவில் நாவாந்துறை ஆர்.சி வித்தியாலய அணியை எதிர்த்து சென் ஜேம்ஸ் ஆண்கள் வித்தியாலய அணி மோதியது. இதில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் அடிக்காததினால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை த்விர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (உ-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ். கோட்டமட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் 16 வயதுப் பிரிவினருக்கான கால் இறுதியாட்டம்




இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் நாவாந்துறை ஆர்.சி. வித்தியாலய அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணியும் சென்.சாள்ஸ் வித்தியாலய அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

மற்றொரு ஆட்டத்தில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (உ-23)

* * *

யாழ்.கோட்டமட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் 14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு :-

* நாவாந்துறை ஆர்.சி வித்தியாலய அணி எதிர் சென்ஜோன்ஸ் கல்லூரி அணி.
* சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர் சென்.சாள்ஸ் மகா வித்தியாலய அணி.
* யாழ். மத்திய கல்லூரி அணி எதிர் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணி. (உ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியப் போட்டிகளில் சாதனை புரிவோருக்கு ஆயிரம் டொலர்கள்

குவான்கா,நவ.3

சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் உலக சாதனை படைக்கும் வீரர்களுக்கு ஆயிரம் டொலர்கள் வழங்கப்படும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஆசிய வீரர்களை உற்சாகப்படுத்துவதற்கான இம்முயற்சியை சீன உதவி விளையாட்டுத் துறை அமைச்சர் சாய் சிங்குவா வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

அத்துடன், இம்முறை சீன வீரர்கள் பல உலக சாதனைகளை நிகழ்த்தி பதக்கங்களைப் பெறுவார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

சீன நகரமான குவான்காவில் எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், 45 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.

அதேவேளை, இந்த விளையாட்டுப் போட்டிகளில் 42 விதமான விளையாட்டுகள் நடைபெறும்.

## ஆஸி. - இலங்கை மோதல் இன்று



ஆஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணியளவில் (இலங்கை நேரப்படி) நடைபெறவுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த 'இருபது - 20' போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றது.

இந்நிலையில், மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடந்த 'இருபது - 20' வெற்றிக்களிப்புடன் இலங்கை அணி களமிறங்குகிறது.

அதேவேளை, தோல்வி கண்ட ஆஸ்திரேலியா அணி ஒருநாள் போட்டியில் பதிலடி கொடுக்கும் நோக்கில் களமிறங்குகிறது. இந்தியத் தொடரின்போது அடைந்த படுதோல்விக்கு இத்தொடரில் கிடைக்கும் வெற்றியின் மூலம் பரிகாரம் தேடவும் அது முற்படலாம்.

எது எப்படியோ இரு அணிகளும் பலம் பொருந்திய நிலையிலேயே காணப்படுகின்றன. ஆட்டத்தின் இறுதியில் முடிவு தெரியவரும்.

### இன்றைய போட்டியில் பொண்டிங் இல்லை

இலங்கைக்கு எதிரான இன்றைய போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் தலைவரான ரிக்கி பொண்டிங் விளையாடமாட்டார்.

பாட்டியின் இறுதிச் சடங்கு காரணமாக அவர் தமது சொந்த ஊரான டாஸ்மேனியாவுக்குச் செல்கி றார். இதனால், இன்றைய போட்டியில் அவர் விளையாடமாட்டார்.

எனினும், இன்று இறுதிச் சடங்கு முடிந்த கையோடு நேராக மைதானத்திற்கு மதியம் வந்து விடுவேன் என்று பொண்டிங் கூறியுள்ளார்.

## ஆப்கான் கிரிக்கெட் அணி அறிவிப்பு

சீனாவில் நடைபெறவுள்ள ஆசியப் போட்டிகளில் முதன்முறையாக கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன. அதில் பங்கேற்பதற்கான ஆப் கானிஸ்தான் கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கென்யாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரை, ஆப்கான் இழந்தது. இதனால், அத்தொடரின்போது அணித்தலைவராக இருந்த நவ்ரூஸ் மங்கலுக்குப் பதிலாக மொகமட் நபி அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்நாட்டு 'இருபது-20' கிரிக்கெட்டில் அடுத்தடுத்து இரண்டு சதங்களை அடித்த துடுப்பாட்ட வீரரான மொகமட் சமி அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பயிற்சியாளராக ரஷித் லதீப் உள்ளார். இவர் பாகிஸ்தான் அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலிடத்தைத் தக்க வைத்தார் ஆனந்த்

உலக செஸ் சம்பியன்ஷிப் வீரர்களுக்கான தரவரிசையில் இந்திய நட்சத்திரம் விஸ்வநாதன் ஆனந்த் முதலிடத்தைத் தக்கவைத்துள்ளார்.

சர்வதேச செஸ் விளையாட்டுக் கூட்டமைப்பு வீரர்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

உலக செஸ் சம்பியனான சென்னையைச் சேர்ந்த விஸ்வநாதன் ஆனந்த், 2804 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். இம்முறை அவர் பெற்ற புள்ளி சிறந்த பெறுபேறு ஆகும்.

இது உலக செஸ் வரலாற்றில் 5ஆவது சிறப்பான பெறுபேறாகும். இதற்கு முன்பு ஆனந்த் 2008ஆம் ஆண்டில் 2803 புள்ளிகளைப் பெற்றதே சிறப்பானதாக இருந்தது.

சீனாவில் நடைபெற்ற உலக செஸ் சம்பியன் போட்டிகளில் ஆனந்த் இரண்டாவது இடத்தைப் பிடித்தமையையடுத்தே இந்த முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது.

## இந்தியாவுக்கு ஐ.சி.சி. கெடு



அடுத்த மாதம் 31ஆம் திகதிக்குள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கான மைதானங்களை முழு அளவில் தயார் செய்திருக்க வேண்டும் என இந்திய கிரிக்கெட் சபைக்கு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

துபாயில் நடைபெற்ற ஐ.சி.சி. உலகக் கிண்ணப் பொறுப்பு அதிகாரிகள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தின் முடிவில் இதற்கான உத்தவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 30ஆம் திகதிக்குள் போட்டி நடைபெறவுள்ள அனைத்து மைதானங்களையும் தயார் செய்து வைக்குமாறு ஏற்கனவே இந்திய அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் மும்பை, கல்கத்தா, சென்னை உள்ளிட்ட மைதானங்களில் தற்போது வரை கட்டுமானப் பணிகள் மற்றும் சீரமைப்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதனால், மைதானத்தின் ஆடுகளம் மட்டுமின்றி, உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அனைத்தையும் டிசம்பர் 31ஆம் திகதிக்குள் தயார் செய்திருக்க வேண்டும் என இந்தியாவின் உலகக் கிண்ணப் போட்டி அமைப்புக் குழுவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாக்பூர், பெங்களூர், மொஹாலி மைதானங்கள் சிறப்பாக உள்ளன என ஐ.சி.சி. பாராட்டுத் தெரிவித்துள்ளது.

## முதலிடத்தை இழந்தார் வுட்ஸ்

லண்டன், நவ. 03

கோல்ப் தரவரிசைப் பட்டியலில் 5 ஆண்டுகளுக்குப் பின்னர் முதலிடத்தை இழந்தார் அமெரிக்காவின் டைகர் வுட்ஸ்.

சர்வதேச கோல்ப் கூட்டமைப்பு, புதிய தரவரிசைப் பட்டியலை நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதில், அமெரிக்காவின் டைகர் வுட்ஸ் (8.13 புள்ளிகள்), 2ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

இவரை ஒரு சில புள்ளிகளால், பின்னுக்குத் தள்ளிய இங்கிலாந்தின் லீ வெஸ்ட் உட் (8.29 புள்ளிகள்) முதலிடத்தைக் கைப்பற்றினார். இதன் மூலம் 5 ஆண்டுகளாக முதலிடத்தில் நீடித்து வந்த டைகர் வுட்சின் சாதனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைக் கைப்பற்றிய வெஸ்ட் உட், 16 ஆண்டுகளுக்குப் பின் முதலிடத்தை வென்ற முதல் ஐரோப்பிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இதற்கு முன், 1994ஆம் ஆண்டு இங்கிலாந்தின் நிக் பால்டோ முதலிடத்தைக் கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




## தென்னாபிரிக்க வீரர்கள் ஆஸ்திரேலியாவில் குழுவாக பாலுறவில் ஈடுபட்டனர்

### சர்ச்சையைக் கிளப்பியுள்ளார் கிப்ஸ்



ஜோகனஸ்பேர்க், நவ. 03

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியில் வாய்ப்பை இழந்து தவித்து வரும் கிப்ஸ், சுயசரிதை எழுதி பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளார்.

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியின் முன்னணி அதிரடி வீரரான ஹெர்ஷல் கிப்ஸ், இதுவரை 90 டெஸ்ட் போட்டிகள் (6,167 ஓட்டங்கள்) மற்றும் 248 ஒருநாள் (8094 ஓட்டங்கள்) போட்டிகளில் விளையாடியுள்ளார். 36 வயதான இவர், சமீபகாலமாக ஆட்டத்திறனின்றி தவித்து வருகிறார்.

இதனால், கடந்த 6 மாதங்களாகத் தென்னாபிரிக்க அணியில் இவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், இவர் 'ரூ தி பொய்ன்ட்' என்ற பெயரில் சுயசரிதை எழுதியுள்ளார். இப்புத்தகத்தில் தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்களைப் பற்றி அதிரடியான முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

1998ஆம் ஆண்டு தென்னாபிரிக்க அணி, ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டது. அப்போது தென்னாபிரிக்க வீரர்கள் ஹோட்டலில், பெண்களுடன் குழுவாக பாலுறவு (செக்ஸ்) வைத்துக் கொண்டனர்.

இதுதவிர, 2001ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளுக்கு மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின்போது, நெல், டெலிமாக்கஸ், கெம்ப், பொல் ஆதம்ஸ் உள்ளிட்ட வீரர்கள் மரிஜுவானா என்ற போதை மருந்தைப் பாவித்தனர்.

தற்போதைய தென்னாபிரிக்க அணியில் ஒற்றுமை இல்லை. ஸ்மித், கலிஸ், பௌச்சர், டி வில்லியர்ஸ் உள்ளிட்ட மூத்த வீரர்களின் கையில் தென்னாபிரிக்க அணி உள்ளது. இவர்களைப் பகைத்துக் கொண்டால் அணியில் இடம்பெறமுடியாது.''

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுயசரிதையில் கிப்ஸ் தெரிவித்துள்ள கருத்துகளுக்கு தென்னாபிரிக்க அணியின் தற்போதைய முகாமையாளரான மொகமத் மூசாஜி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியவை வருமாறு:-

கடந்த 2 ஆண்டுகளாக கிப்ஸூக்கு அணியில் நிரந்தர இடம் கிடைக்கவில்லை.' அப்படியிருக்கும்போது, அணியில் பிளவு ஏற்பட்டுள்ளது என அவர் எப்படிக் கூற முடியும்? இதுதவிர, ஆஸ்திரேலியச் சுற்றுப்பயணத்தின் போது, வீரர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டனர் என கிப்ஸ் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் நடந்தது எனக் கூறப்படுவது 1998ஆம் ஆண்டு ஆகும். அப்போதைய அணியில் இடம்பெற்ற எவரும், இப்போதைய அணியில் இல்லை. தென்னாபிரிக்க அணியின் சிறந்த வீரரான கிப்ஸ், இது போன்ற கருத்துகளை சுயசரிதையில் தெரிவித்திருப்பது முட்டாள்தனமானது.

- இவ்வாறு மொகமத் தெரிவித்தார்.

சுயசரிதையில் தென்னாபிரிக்க வீரர்களைக் கடுமையாகச் சாடியுள்ள கிப்ஸ், 2000இல் அப்போதைய அணித்தலைவரான குரோனியேயுடன் இணைந்து சூதாட்டத்தில் ஈடுபட்டவர். இதுதவிர, 2001ஆம் ஆண்டு போதை மருந்து உபயோகப்படுத்தி சர்ச்சையில் சிக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் வருட நினைவு ஆராதனை

மலர்வு 14 ★ 03 ★ 1963

உதிர்வு 13 ★ 11 ★ 2009



அமரர் சுப்பிரமணியம் சோதிலிங்கம்

திதி: திரயோதசி (அபரபக்கம்)

எங்கள் குடும்பத்தில் வந்து உதித்த சோதியே
நீங்கள் இன்று எம்மோடு இல்லையே
தாங்குமா எம் இதயம்
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது
எம் துயர் - ஏங்குகின்றோம்
தினம் தினம் உம்மைத் தேடுகின்றோம்

நினைவில் எம்முடனும் நிஜத்தில் இறை வனுடனும் கலந் திருக்கும் உங்களின் ஆத்மா சாந் தியடைய எல்லாம் வல்ல மூன்று முடி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

S.செல்வரத்தினம் (S.S)
(சகோதரன்)

3 ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

## கண்ணீர் அஞ்சலி



**கனகரத்தினம் கதிர்காமத்தம்பி**
(பழவீட்டுத் தம்பி)

பண்பாய் வாழ்ந்த
- பழவீட்டுத் தம்பியே
பார் போற்றும்
- எங்கள் தம்பியே
பண்பினால் உயர்ந்த பழவீட்டுத் தம்பியே
பசுமையான உளம் நிறைந்த எங்கள் தம்பியே

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பொ.இராசேந்திரம் குடும்பமும்.
(இளவாலை வடக்கு கிராம உத்தியோகத்தர்)
இளவாலை வடக்கு மக்களும்

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, நவ. 03

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2313ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "M" என்ற ஆங்கில எழுத்தும் 5/6/8/3/9/4 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில்சுப்பர்பரிசுவெல்லப்படவில்லை.

5/6/8/3/9/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/8/3/9/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/3/9/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 130 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/9/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,337 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

9/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,232 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

4 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,32,076 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 5/6/8/3/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/6/8/3/ என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 134 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

5/6/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,303 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

5/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,284 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"M" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 52,807 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (10)


## Make your career path in MALAYSIA

**Open Day/ Consultations**

Visit us on Saturday 6th November from 9.00am to 6.00pm at the Jaffna MPCS Auditorium, KKS Road, Jaffna.

Begin your career path soon after your O/Ls at **LIMKOKWING** University and step in to a world of opportunities. With us, you now have the advantage of pursuing a foreign degree in Malaysia with minimal expenses!

**Contact: 0776 565258 & 0777 260554**


## முதலாம் வருட நினைவஞ்சலி

மண்ணில் 04 ★ 07 ★ 1921

விண்ணில் 13 ★ 11 ★ 2009



அமரர் வேலுப்பிள்ளை ஞானசுந்தரம்

(வேவில், வல்வெட்டி) திதி: 03.11.2010

அன்பின் திருவுருவே, பாசத்தின் பிறப்பிடமே
ஆண்டவன் தொண்டாற்றி, அணையா விளக்காய்
விரைந்தோடிச் சென்று ஆண்டு ஒன்று மறைந்ததையா!
புன்னகை மாறாத உங்கள் திருமுகம்
நெஞ்சினில் நிலைத்து நிற்குதையா
எவருக்கும் தீமை எண்ணாத நெஞ்சமே
சுவர்க்க மண்டலத்தின் சோதியே
எங்கள் நினைவுகளில் நித்தியமாய் நிலைத்தீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
வேவில் விநாயகரின் பாதார விந்தங்களைப் பணிகிறோம்.

மனைவி பூமணி,
மைத்துனர் தருமலிங்கம்
குடும்பம்.

சேகண்டி ஒழுங்கை,
வல்வெட்டி.

(C/572436)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**நாகமுத்து நாகலிங்கம்**

மலர்வு: 01.06.1935
உதிர்வு: 24.11.2008

திதி: துவாதசி

இல்லம் வெறித்ததையா - நீ
இல்லையென்று ஆனபின்பு
உள்ளம் உருகுதையா - உன்
உயிர் பிரிந்து போனபின்பு
எம் அன்பை
வாழ்வினிலே சுமந்தவரே
கள்ளம் ஏதுமற்ற நற்
கனிவு காண ஏங்குகிறோம்
கொள்ளைப் பிரியத்துடன்

குடும்பத்தைக் காத்தாயே
எங்குதான் சென்றாயோ
ஈராண்டு ஆனதையா! ஆனால்
இன்று போல் உள்ளதையா
எங்கும் கிடைக்காத
இதயத்துத் தாரகையே!
இன்றில்லை என்றுமே - நாம்
உமை மறவோம்.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

காளிகோவிலடி,
அராலி தெற்கு வட்டுக்கோட்டை.


## Computer Express
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
அதிரடிக் கட்டணக் கழிவு

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 1000/= 3 Months | Diploma in Desktop Publishing 1000/= 4 Months | Diploma in Web Page Designing 1000/= 3 Months |
| Diploma in Graphic Designing 1000/= 4 Months | Diploma in Hardware Engineering 1000/= 3 Months | Diploma in Auto CAD 1000/= 3 Months |
| Diploma in Accounting Package 1000/= 3 Months | Diploma in Computer Science 1000/= 4 Months | Honors Diploma in Computer Science 1000/= 3 Months |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும்
பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Batch i - 3.11.2010 - 9am or 3pm
Batch ii - 5.11.2010 - 9am or 3pm
Batch iii - 6.11.2010 - 9am or 3pm
Batch iv - 7.11.2010 - 9am or 3pm

20.11.2010க்கு முன்
பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Monday to Friday 9Am to 3.30Pm
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன்
தொடர்புகொள்ளுங்கள்...

முதன்முறையாக...
Full Version Software Tally-9.0
Tallyஇல் Date மாற்றலாமா???

NEW Batch :- Saturday (6.11.2010) & Sunday (7.11.2010) 2pm to 3pm


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவுக் காவலாளி தேவை

எமது சங்கத்துக்கு இரவுக் காவலாளி ஒருவர் தேவை.

55 வயதுக்கு மேற்பட்ட ஆண் க்காவலாளி தேவை. நாளை (04-11-2010) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

செயலாளர்,
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
தொ.பே.இல:-021-222 3814

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/572432)


## கண்ணீர் அஞ்சலி



*அமரர்*

**வெள்ளையன் அடைக்கன்**
(இல.164, விவேகானந்தநகர் கிழக்கு, கிளிநொச்சி.)

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆசிரியை திருமதி துஷ்யந்தி பகீரதன் அவர்களின் அன்புத் தந்தையான வெள்ளையன் அடைக்கன் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆசிரியர், ஊழியர் நலன்புரிச் சங்கம்,*
கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி.

(சி/572437)

## இரண்டாம் ஆண்டு நினைவு நாள்



*அமரர்*

திருமதி சுகிர்தமலர் அருமைலிங்கம்

*மண்ணில்*
*11.03.1942*

*விண்ணில்*
*03.11.2008*

வருடங்கள் இரண்டு கடந்தாலும்
வற்றாத நீரூற்றாய் எம்மனதில்
என்றும் நிலையாக வாழும்
எங்கள் அம்மா அம்மம்மாவே!

*மடத்துக்கடவை,*
*அல்வாய் மேற்கு.*

-குடும்பத்தினர்.

## நீங்காத நினைவில் ஓராண்டு

*அமரர்*

முத்தையா பரஞ்சோதி

கண் மகிழ
16.06.1936

கண் நெகிழ
11.11.2009



*அண்ணன் என்ற*
*அற்புத ஜீவன் மறைந்து*
*ஆண்டு ஒன்று ஆனதே!*
*இன்று மட்டும் அல்ல*
*இந்த உலகம் முடியும்வரை*
*உங்கள் நினைவுகளுடன்*

VTS*லேன், உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*

ச.ரதிதேவி, ச.லதினன்
*சகோதரி, மருமகன்.*

## துயர் பகிர்கின்றோம்



எங்கள் பாடசாலையில் கல்வி கற்பித்த முன்னாள் ஆசிரியை செல்வி சி.விஜயரஜனியின் பாசமிகு தந்தை

அமரர் விநாசித்தம்பி சிவசுப்பிரமணியம்

அவர்கள் 01.11.2010 அன்று காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும்அடைந்தோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, அவர்தம் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்ளும்

யா/சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை,
நீர்வேலி.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*மாணவர்கள்.*

(105524)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பழைய மாணவியும், இளைப்பாறிய ஆசிரியையுமான

திருமதி **கனகாம்பிகை திருநாவுக்கரசு**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

***ஆசிரியர் கழகம்,***
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(105529)

# டிப்ளோமா கற்கைகள்; விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.2

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகக் கற்கைகள் பீடம் ஏற்கனவே அறிவித்திருந்த மூன்று டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களின் முடிவுத் திகதிகள் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பீடாதிபதி கே.தேவராஜா தெரிவித்திருப்பதாவது:

மனிதவள முகாமைத்துவம், சந்தைவள முகாமைத்துவம், நுண்நிதியியல் ஆகிய டிப்ளோமா கற்கை நெறிகளின் முடிவுத் திகதி எதிர்வரும் 15ஆம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கைநெறிக்கு ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். இக்கற்கை நெறிகள் வார இறுதி நாள்களில் இடம் பெறவுள்ளதால் நிறுவனங்களில் தொழில் புரிவோரும் இக் கற்கைநெறிகளைத் தொடரமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஒ-319)

## தவறிவிட்டது

செந்தீஸ்வரன் பிரசாந்தி என்பவரின் DK00315440, இலக்கம் கொண்ட விசா காட் (VISA CARD) மற்றும் வேறு பொருள்கள் அடங்கிய சிறிய கைப்பை தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்துக்கோ அறியத் தரவும்.தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொலை பேசி என்:
021 226 2157

*க.இரத்தினசிங்கம்*
*சாமியன் அரசடி,*
*கரவெட்டி வடக்கு,*
*கரவெட்டி.*


## கட்டடம் வாடகைக்கு

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய தனியார் நிறுவனத்திற்கும் மற்றும் விருந்தினர் விடுதி நடத்துவதற்கும் சகல வசதிகளுடன் கூடிய பெரிய கட்டடம் ஒன்று வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: சுனில் பிரசாந்
0773444050

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரம், நல்லூர், வண்ணார் பண்ணை, கொட்டடி பகுதிகளில் 2 அறைகள் 1 ஹோல் கொண்ட சிறிய வீடு சிறிய குடும்பத்துக்குத் தேவை.

தொடர்பு :
071 4220013


## மரண அறிவித்தல்



தம்பு கனகரட்ணம்
கதிர்காமத்தம்பி
(இளவாலைத் தம்பி)

யாழ்ப்பாணம், இளவாலையைச் சேர்ந்த கனகரட்ணம் புவனேஸ்வரி தம்பதியரின் புத்திரனான கதிர்காமத் தம்பி கொழும்பில் 31-10-2010 அன்று காலமானார்.

அன்னார் க்னகரட்ணம் மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கொழும்பு கனத்தை மயானத்தில் 01-11- 2010 இல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காலம் தாழ்த்திய இந்த அறிவித்தலுக்கு மனம் வருந்துகின்றோம்

தகவல்:
க.மகேஸ்வரி
*(சகோதரி).*

(சி/572319)


## அடிப்படை உடல் பரிசோதனை.




கிரமமான உடல் பரிசோதனைகள் பாரிய நோய்களை முற்கூட்டியே இனங்காட்டி உங்களை பாதுகாக்கும்.

*இலவச வைத்திய ஆலோசனை வழங்கப்படும்

A full package includes
Scan,ECG,Blood and Urine Tests&Reports

Lava Diagnosis & LH Lava Hospitals

Member of
Lava Holdings Pvt Ltd
Reg No:PV74170

கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் அறிக்கைகள்.

Tel: 0212224333 | # 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com


## வடமாகாணத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு வழங்கல் சேவை தொடர்பான கலந்துரையாடல்

***10.10.2010ஆம் திகதிய வீரகேசரி பத்திரிகையிலும் 14.10.2010 ஆம் திகதிய*** **Daily News** ***பத்திரிகையிலும்*** வெளியிட்ட வட மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு வழங்கலுக்கான கேள்விப் பத்திரங்கள் தொடர்பான முன் அறிவுறுத்தல் கூட்டம் **(Pre Bid Meeting)** யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு இணங்க 09.11.2010 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பி.சு.சே. பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன். மேற்படி வைத்தியசாலைக்கு உலர் உணவு வழங்கலுக்கான கேள்விப் பத்திரங்களைப் பெற்றவர்களும், பெற விரும்புபவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,*
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(சி/572442)

## மரண அறிவித்தல்

*திருமதி கதிரவேலு பொன்னாச்சி(தேவி)*

கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பொன்னாச்சி நேற்று (02-11-2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி நாவற்குழி,*
*கைதடி.*

தகவல்:
சு.கதிரவேலு(கணவர்)
077 9072467

(105530)

## VACANCIES

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**

This is with reference to the advertisement appeared on 03rd October 2010 calling applications for the Vacancies for the Academic Posts at this University. It is hereby notified that:

1. **The Schemes of Recruitment for the Post of Lecturer (Probationary)** (Medical/Dental) and Non-(Medical/Dental) have been amended by the University Grants Commission by its circular No-935 dated 25.10.2010.

   In accordance with the above circular the **requirement of one year experience for the Post of Lecturer (Probationary) (Medical/Dental) and Non-(Medical/Dental) has been relaxed** and the qualified candidates are required to make a presentation before the Selection Committee in order to prove their teaching ability as Lecturer (Probationary).

   The Candidates who have already obtained the application forms and other details may obtain the amended scheme of recruitment at the Academic Establishments Branch of this University or the University Website **www.jfn-ac.lk**.

2. **For the Post of Lecturer (Probationary) in the Dept. of Education,** the candidates who have special degree of B.Sc with Education with 1st class or 2nd class (upper division) will be considered under category I of the scheme of recruitment.

REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA.
SRI LANKA.
02.11.2010

(C/572429)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பொது நூலகச் சம்பவம் குறித்து மாநகர மேயர் வெளியிட்ட அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ். நூலகத்தின் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதம் குறித்து விளக்கம் அளிக்கும் வகையில் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா நீண்ட அறிக்கை ஒன்றை நேற்றிரவு வெளியிட்டிருந்தார்.

உல்லாசப் பயணிகள் பொது நூலகத்தில் நடந்துகொண்ட அத்துமீறல்கள் குறித்துப் பத்திரிகைகளில் செய்திகளும், கண்டன அறிக்கைகளும் வெளியாகி இருந்தன. இந்தத் தகவல்களால் குடாநாட்டு மக்கள் மத்தியிலும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டிருந்தன.

எனினும் நேற்றைய மேயரின் அறிக்கையில் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளைப் போன்று பெரிய அசம்பாவிதம் ஏதும் நடக்கவில்லை என்ற சாரப்பட கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''தென்னிலங்கை உல்லாசப் பயணிகளால் புத்தகங்கள் எடுத்து வீசப்பட்டன. அவர்கள் கற்களுடன் காணப்பட்டனர். நூலகத்தைத் தாக்க முற்பட்டார்கள் என்ற செய்திகளைப் பொறுப்புள்ள முதல்வர் என்ற வகையில் முற்றாக மறுக்கிறேன்'' என்றும் அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேயரின் நீண்ட அறிக்கை நாளைய 'உதயனில்' வெளிவரும்.

# யாழ். - கொழும்பு அதி சொகுசு பஸ் உரிமையாளர்களுக்கு நாளை வழித்துணைப் பத்திரங்களை அமைச்சர் வழங்குவார்

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்-கொழும்பு தனியார் அதி சொகுசு பஸ் உரிமையாளர்கள் 65 பேருக்கு நாளை வியாழக்கிழமை மு.ப பதினொருமணிக்கு போக்குவரத்து அமைச்சில் வைத்து வழித்துணைப் பத்திரங்கள்(ROUTE PERMITS) வழங்கப்பட உள்ளன. போக்குவரத்து அமைச்சர் குமார் வெங்கம வழித்துணைப் பத்திரங்களை அதிசொகுசு பஸ்உரிமையாளர்களுக்கு வழங்குவார்.

அதிசொகுசு பஸ் கட்டணங்கள் குருநாகல் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு 1, 050 ரூபாவும் புத்தளம் ஊடான பயணத்திற்கு 1, 035 ரூபாவும் அறவிடப்படும்.

யாழ்-கொழும்பு தனியார் அதிசொகுசு பஸ் உரிமையாளர்கள் சார்பில் தி.துவாரகேசன் அமைச்சருடன் நேற்று நடத்திய சந்திப்பின் போது வழித்துணைப் பத்திரத்துக்கான பதினொரு லட்சம் ரூபா கட்டணத்தை மாதாந்த அடிப்படையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு செலுத்தலாம் என்றும் அமைச்சர் என்றுஇணக்கம் தெரிவித்தார். அதேபோன்று அரை சொகுசு பஸ்ஸிற்கான வழித்துணைக் கட்டணமான ஏழுலட்சம் ரூபாவையும் மாதாந்தத் தவணை அடிப்படையில் செலுத்த முடியும்.

இவை சம்பந்தமான விவரங்களை அதிசொகுசு பஸ்களின் உரிமையாளர்கள் தி.துவாரகேசனுடன் தொடர்புகொண்டு கேட்டறியலாம். (அ)

# ஜனாதிபதியின் இரண்டாவது பதவி ஏற்பு எங்களது விடுதலைக்கு வழி வகுக்குமா?

## 17 வருடங்களாக சிறை இருக்கும் மகசின் கைதிகள் ஆதங்கம்

ஆயுதம் ஏந்திப் போராடிய விடுதலைப் புலிகளுக்குப் புனர் வாழ்வும், கல்வித் திட்டங்களும், தொழிற்பயிற்சியும் வழங்கி திருமணமும் செய்துவைக்கும் அரசு, 17 வருடங்களாக சிறையில் வாடும் அரசியல் கைதிகள் குறித்து கரிசனை காட்டாதது ஏன்? ஜனா திபதியின் இரண்டாவது பதவி ஏற்பு வைபவம் எங்களது விடுதலைக்கு வழி வகுக்கவேண்டும்.

இப்படி கொழும்பு மகசின் சிறைச்சாலை அரசியல் கைதிகள், அனைத்து மத குருமார்களுக் கும் மூவினப் பொதுமக்களுக்கும் எழுதியுள்ள பகிரங் கக் கடி தத்தில் உருக்கமாகக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடித விவரம் கீழே தரப்படுகின்றது.

1993இலிருந்து 2010 வரைக்கும் சிறைக்கம்பிகளுக்கு இடையே 17 வருடங்கள் நகர்ந்துவிட்டன. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் ஆகியவற்றின் மூலம் சந்தேகத் தின்பேரில் கைதுசெய்யப்பட்டோம். சிலர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டோம், சிலர் விசாரணை இன்றி எதிர்காலத்தையும் குடும்பத்தையும் தொலைத்து வாழ்வை அழித்துக் கொண்டிருக்கிறோம். ஆயுதம் ஏந்திப் போராடிய விடுதலைப் புலிகளுக்குப் புனர்வாழ்வும், கல்வித் திட்டங்களும், தொழிற்பயிற்சிகளும் அளித்துள்ளார் ஜனாதிபதி, திருமணமும் செய்து கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால், எமக்கு மட்டும் எவ்வித உதவியோ, விடு தலையோ இல்லை.

ஏன் எங்களை மனிதர்களாக நினைக்கவில்லை? நாம் சிறையில் சித்திரவதைப் படுவது உங்கள் கண்ணுக்கும், மனதுக்கும், அறிவுக்கும் தென்படவில்லையா?

நாங்கள் வாழ்வை இழந்து அநாதைகளாகிவிட்டோம். மனிதர்களிலிருந்து ஒதுக்கப்பட்டுவிட்டோமா? குழந்தைகள், மனைவிமார்கள், கணவன்மார்கள் சொந்த பந்தங்களை இழந்துவிட்டோமா? என்ற கேள்வி எங்கள் முன் எழுகின்றது.

எத்தனையோ தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதினோம். கடைசிவரையும் ஏமாந்தோம். அதிகாரிகளையும், அதிகாரங்களையும் கடந்தகாலங்களில் நம்பி ஏமாந்துவிட்டோம். நீங்கள் அனைவரும்தான் எமக்காக ஜனாதிபதியிடம் வேண்டிக் கொள்ள வேண்டும். உங்கள் வார்த்தைகளை அவர் செவிமடுப்பார். ஆண்டு தோறும்பலபண்டிகைகள், பெருநாள்கள் வந்து போகின்றன. அத்தனையும் எங்கள் அனைவரது வாழ் விலும் இருளாகிவிட்டது.

எங்களுக்கு அமைதியான - நிம்மதியான வாழ்வை அளித்திடுங்கள். சிறைக்குள் இருந்து உடலாலும், மனதாலும் பட்ட காயங்கள் சொல்ல முடியாதவை. இனியும் எம்மால் தாங்க முடியாது. மனிதன் வாழும் காலம் குறுகியது. அக்காலத்தில் பாதியை சிறையிலே கழித்துவிட்டோம். மீதி வாழ் நாளாவது எமது குடும்பங்களுடன் சேர்ந்து வாழ ஆசைப்படுகிறோம்.

தவறு செய்தவர்களில் பலர் பிணையில் சென்றும், விடுதலை பெற்றும் குடும்பத்துடன் சந்தோஷமாக வாழ்கின் றனர். நாங்கள் மட்டுமே 17 வருடங்களாக சிறையில் உள்ளே வாழ்கிறோம். அனைத்து மத குருமார்களும், பொதுமக்களும எங்களுக்காக ஜனாதிபதியிடம் பரிந்துரை செய்யுங்கள். மக்கள் சக்தியிடம் விடுதலை விண்ணப்பம் விடுத்திருக்கிறோம். சிறைக் கம்பிகளுக்கு இடையிலுள்ள எம்மை ஏமாற்றமாட்டீர்கள் என நம்பிக்கையிலும், எதிர்பார்ப்பிலும் காத்திருக்கிறோம்.

- இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## ஏ-9 வீதி...

(முதலாம் பக்கம் பார்க்க)

பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டு புனரமைக்கப்பட உள்ளது. கற்குளம் முதல் மதவாச்சி வரை ஒரு பகுதியாகவும் மதவாச்சி முதல் புளியங்குளம் வரை ஒரு பகுதியாகவும் புளியங்குளம் முதல் யாழ்ப்பாணம் வரை ஒரு பகுதியாகவும் பிரிக்கப்பட்டு வீதி புனரமைக்கப்பட உள்ளது. இதற்கென மூன்று ஒப்பந்த நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்கான பணிப்பாளர்களாக எந்திரிகள் ஆர்.எம்.காமினி மற்றும் வேலுப்பிள்ளை மோகன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏ-9 வீதி கார்ப்பெட் வீதியாக மாற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு வந்த போதும் அது கருங்கற்கள் போடப்பட்ட வீதியாகவே புனரமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-302)

## நாடு முழுவதும்.....

(முதலாம் பக்கம் பார்க்க)

சம்பள உயர்வு உட்பட சுயாதீன அரச சேவைகள் ஆணைக் குழுவை மீண்டும் ஸ்தாபிக்கும்படியும் கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டங்கள் எதிர்வரும் 9ஆம் திகதி முக்கிய மூன்று இடங்களில் நடத்தப்படவுள்ளன. 9ஆம் திகதி இரத்மலானை பெலெக்கடே சந்தி, டெக்னிகல் சந்தியிலுள்ள ரயில்வே தலைமையகம், தெமட்டகொடை ரயில்வே அலுவலகம் ஆகிய இடங்களில் பகல் 12 மணிக்கு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளன என மேற்படி சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, அடுத்தவாரம் மேலும் பல தொழிற்சங்கங்கள் சம்பள உயர்வை வலியுறுத்திப் போராட்டங்களை ஆரம்பிக்கவுள்ளன எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல்களின் போது அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுமென ஆளும் கட்சி உறுதியளித்தபோதும் கடந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. ஆனால் விலைவாசி விஷம்போல் ஏறிக் கொண்டிருக்கின்றது. இரண்டு வருடங்களுக்குள் கோதுமை மாவின் விலை ஐந்து தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. தேங்காய் ஒன்றின் விலை 50 ரூபாவாக அதிகரித்துள்ளது. அத்தியாவசிய பொருள்களின் விலைகள் என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளன. சமையல் காஸ் உட்பட எரிபொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க அரசு தேர்தல்களின் போது அறிவித்த 2,500ரூபா போதுமானதல்ல. குறைந்த பட்சம் 8,000ரூபா சம்பள உயர்வு வழங்கப் பட வேண்டுமென தொழிற்சங் கங்கள் கோரிக்கை விடுக்கின்றன. (சி)

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கம் பார்க்க)

வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்தியா மேலும் உதவிகளை வழங்குமென இந்தியத் தூதுவர் சந்திப்பின் போது உறுதியளித்தார். (உ-சி)

## சட்டவிரோத.....

(முதலாம் பக்கம் பார்க்க)

ஒப்புக்கொண்டதை அடுத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் நீதிவான் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அத்துடன், இதுவரை காலமும் அவர்கள் சட்டவிரோதமாகப் பயன்படுத்திய மின்சாரத்துக்கான பெறுமதியை மின்சார சபைக்கு நஷ்ட ஈடாக வழங்குமாறும் உத்தரவிட்டார்.

அவரவர் மின்பாவனைனக்கேற்ற வகையில் 7 ஆயிரம் முதல் 70 ஆயிரம் வரையில் இந்த நஷ்ட ஈடு அறவிடப்பட்டது. இதன் பிரகாரம் மொத்தமாக 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்ட ஈட்டுத் தொகையாகப் பெறப்பட்டது. (உ-9)

## கப்பலில்....

(முதலாம் பக்கம் பார்க்க)

கைது செய்யப்பட்டவர்கள் தலா ஒரு லட்சம் இந்திய ரூபா வீதம் தமது கப்பல் பயணத்துக்காகப் பணம் செலுத்தி உள்ள னர். அவர்களை அழைத்துச் செல்ல ஏற் பாடுகளைச் செய்திருந்த முகவர்கள் தொடர்பான விசாரணையை தமிழக பொலிஸார் முடுக்கி விட்டுள் ளனர். (உ)

## இலங்கை அரசின்....

(முதலாம் பக்கம் பார்க்க)

பிரெஞ்சுப் பெண் ஒருவர் தமிழ்ச்செல்வனின் சிலையை வடித்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். சிலைதிறப்புநிகழ்வின் போது இவருக்கு பிரான்ஸ் தமிழ்ச் சங்கம் நடராஜர் சிலைஒன்றைப்பரிசளித்துகௌரவித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராகவிருந்த சு.ப. தமிழ்ச்செல்வன் 2007 நவம்பர் 2ஆம் திகதி விமானக் குண்டு வீச்சில் பலியானமை குறிப்பிடத்தக்கது. (சி)

## தமிழகத்தில்....

(முதலாம் பக்கம் பார்க்க)

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ தமிழக அரசின் கருத்தை மறுத்தார். அதற்கு ஆதாரங்கள் எவையும் இல்லை என்றார்.

இதனைத் தொடர்ந்து புலிகள் அமைப்பு மீதான தடையை நீடிப்பதா இல்லையா என்பது தொடர்பிலான தீர்ப்பை நீதிபதி ஒத்திவைத்தார்.

முன்னதாக, கடந்த 19 ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடை இருந்த போதும் தமிழகத்தில் அதன் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருந்தன என தமிழ்நாடு அரசு தெரிவித்தது.

''தடை நீக்கப்பட்டால் அவர்களைக் கட்டுப்படுத்துவது மாநில அரசுக்குக் கடினமாகிவிடும்'' என்றார் தமிழக அரச சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன். தடையை நீடிப்பது என்கிற இந்திய மத்திய அரசின் முடிவுக்கு அவர் ஆதரவு தெரிவித்தார்.

### வைகோ எதிர்ப்பு

தீர்ப்பாயத்தில் ஆஜராகி இருந்த வைகோ, தமிழக அரசின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். தமிழகத்தில் புலிகளின் தலைவர்கள் இரகசிய நடவடிக்கைகளில் சிலர் ஈடுபடுகின்றனர் என்ற குற்றச்சாட்டை மறுத்தார் அவர். தமிழ் ஈழத்தின் ஒரு பகுதியாகத் தமிழ் நாட்டைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுகள் ஒருபோதும் சேர்த்துக் கொண்டதில்லை என்றும் அவர் கூறினார்.

''இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களுக்காக விடுதலைப் புலிகள் போராடினார்கள். அவர்கள் தமக்கெனத் தனித் தேசம் ஒன்றைக் கோரினார்கள். இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஆகக் குறைந்த உரிமைகள் கூட மறுக்கப்பட்டன. அதனால் வித்தியாசமான முறையில் அவர்கள் தமது எதிர்ப்பைப் பதிவு செய்தார்கள்'' - என்றார் வைகோ. (உ)


யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

**Diploma in Mobile Phone Repairing**

(Software & Hardware Repairing)

(பல புதிய விடயங்களுடன்)

(யாது இக் கற்கை நெறியை கற்றதன் பின் 100% நீங்கள் Mobile Phone இனை திருத்தி கொடுக்க முடியும்)

**Course Fees - Rs.6000/= Only**

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

வகுப்பு ஆரம்பம் - 14/11/2010 நேரம்10மணி காலம் 2 மாதங்கள் -

உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS

No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.

T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862


## மரண அறிவித்தல்

### திருமதி ரமணேஸ்வரி தர்மலிங்கம்

''திருவருள் அகம்'', தாவடி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரமணேஸ்வரி தர்மலிங்கம் நேற்றுமுன்தினம் (01.11.2010) திங்கட்கிழமை அதிகாலை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் 42, இராஜவீதி, நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் தாவடியைச் சேர்ந்த பண்டிதர் சிவப்பிரகாசம் - அன்னலக்சுமி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் கமலா, சந்திவர் (அவுஸ்திரேலியா), யசோதா, சிவசுப்பிரமணியம் (தாவடி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*42, இராஜ வீதி,*
*நல்லூர்.* (சி/512444)

தகவல் :
பேபி (மைத்துனி)


ஒரே முகவரியில்......

01.11.2010 முதல் எமது நிறுவனம் கீழ்வரும் முகவரியில் மட்டும் இயங்குகின்றது.



ஒலிம்பியா ஸ்போர்ட்ஸ்

OLYMPIA SPORTS

இல.6, ஜும்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (E.S.பேரம்பலம் முன்பாக)

T.P 021 222 3490 - 077 8060267 - 077 8010219


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும்....



தமிழரின் வீரம் தரணியெங்கும் பரவ வழிவகுத்த மன்னன் ராஜராஜ சோழன். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவன். அந்தக் கோயில் கட்டப் பட்டு 1,000 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அண்மையில் அதற்காக தமிழக அரசு சார்பில் மிகப் பெரிய விழா எடுத்துக் கொண்டாடினார்கள்.

சிறு வயதில் அம்மா கூட்டிக்கொண்டு போன ஏ.பி.நாகராஜனின் 4975 மீற்றர் நீளமுள்ள ராஜராஜ சோழன் படத்தினை வாயில் ஈ போவது கூடத் தெரியாமல் வியந்திருக்கிறேன். தமிழில் வெளிவந்த முதல் 'சினிமாஸ்கோப் படம்' அதுதான். பின்னர் பல வருடங்கள் கழித்து தஞ்சை மண்ணில் கால் வைத்தபோது பிரமிப்பு விலகாமல் அணு அணுவாக ரசித்த இடம் ஒன்று உண்டென்றால் அது தஞ்சை பெரிய கோயிலாகத்தான் இருக்க முடியும்.

பதிமூன்று அடுக்குகள் கொண்ட அதன் வேலைப்பாடுகளும் அழகும் நம்மை வியக்க வைக்கின்றன. அண் மையில் கட்டிய கொமன்வெல்த் விளை யாட்டிற் கான பாலமே குப்புறக் கவிழ்ந்து பலபேர் குற்றுயிரானபோது, பத்து நூற்றாண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட இந்த கோபுரம் இன்னமும் கம்பீரமாய் காட்சி தருகிறதே என்ன காரணம்?

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கலைமாணி பொறியியல் படிப்பும் இல்லை முதுகலைமானி பொறியியல் படிப்பும் இல்லை. பொறியியல் பல் கலைக்கழகங் களும் இல்லை. பின்னர் எப்படிக் கை வந்தது இந்தக் கலை? அதுதான் பட்டறிவுக்கும் பாட அறிவுக்கும் உள்ள வேறுபாடு.

பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த அந்த மக்களது அயராத உழைப்பும், தொழில்நுட்ப அறிவும். கலை நயமும்தான் இன்று அது விண்ணுயர எழுந்து நிற்கக் காரணம். மன்னனது ரசனையும் கூடவே கூடுதல் பலம் சேர்த்திருக்கும்தான்.

சரி இப்படி சோழர் காலத்து அரண் மனைகள் வழிபாட்டுத்தலங்கள் சிற்பங் கள்.. ஓவியங்கள் அவர்களது வீர தீர பராக்கிரமங்கள் எல்லாம் அற்புதம்தான்.

ஆனால் மக்கள் எப்படி இருந்தார்கள் அவர்கள் காலத்தில்? அதுதானே முக்கியம்?

மாதம் மும்மாரி பொழிகிறதா மந்திரி யாரே? எனக் கேட்டுவிட்டு உபரிகை யில் ஓய்வெடுக்கப் போய் விட்டார்களா? அல்லது மக்களோடு மக்களாக நின்று அவர்களது துயரங்களைத் துடைக்கத் துணை நின்றார்களா? இதுதான் இன்று நம் முன் உள்ள கேள்வி.

தஞ்சைப் பெரிய கோவில் கம்பீரமாக நிற்கிறது வெளிப்புறத்தில். ஆனால் மக்கள் வழிபாடு நடத்துவதற்கும்.... வழிபடுவதற்கும் சமத்துவம் நிலவியதா உட் புறத்தில்?

இல்லை. இல்லை. இல்லை. இல்லை. இல்லவேயில்லை என்கின்றன சோழர் காலத்திய கல்வெட்டுகளும் ஆய்வு நூல்களும்.

சமயத்தலத்தில் சமத்துவமின்மை மட்டுமல்ல சோழப்பேரரசில் மக்கள் நிலை எவ்வாறிருந்தது? அவர்களது கல்வி எவ் வாறு இருந்தது? பெண்களது நிலை எவ் வாறு இருந்தது? நிலம் யார் வசம் இருந்தது? பாழாய்ப்போன சாதி என்ன பங்கை ஆற்றியது? இதுவெல்லாம் முக்கியமில் லையா நமக்கு?

சரி...! மக்கள் எப்படி இருந்தார்கள்? அதை முதலில் பார்ப்போம். சோழப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காவிரி ஆற்றின் தென் கரையில் இருந்த இரு ஊர்களைத் தங்களின் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட அறிஞர்கள் அதிர்ந்து போனார்கள், ஊரே சாதியால் பிரிக்கப் பட்டிருப்பதைப் பார்த்து.

ஒன்பதாம் நூற்றாண்டில் விஜயாலய சோழன் தஞ்சையைக் கைப்பற்றி சோழப் பேரரசின் உருவாக்கத்திற்கு அடித்தளம் இடுகிறான். அதன் பின்னர் வந்த சோழப் பேரரசர்களும் வைதீகம் செழித்து வளர பொன்னையும் பொருளையும் நிலத்தையும் தானமாக அள்ளி வழங்குகிறார்கள். எல்லோருக்கும் அல்ல. சிலருக்கு மட்டும். இதனைத் துல்லியமாகப் போட்டு உடைக்கிறார் கே.கே.பிள்ளை என்கிற வரலாற்று ஆய்வாளர்.

''வேத நெறி தழைத்தோங்குவதற் காக மன்னரும் மக்களும் புதிதாகக் குடி புகுந்த பிராமணருக்கு பொன்னையும் பொருளையும் வழங்கினர். பிராமணர்களுக்குத் தனி நிலங்களும், முழு கிராமங்களும் தானமாக வழங்கப்பட்டன. அக்கிராமங்கள் அக்கிரகாரம், அகரம், சதுர்வேதி மங்கலம், பிரம்மதேயம் எனப் பல பெயரில் வழங்கின. இக்குடியிருப்புகள் அனைத்தும் பிராமணரின் நிர்வாகத்திற்கே விடப்பட்டன. அரசனுடைய ஆணைகள் கூட அவற்றினுள் செயல்பட முடியாது. அக்கிராமங் களுக்கு வரிகள், கட்டணங்கள், கடமைகள், ஆயங்கள் என அனைத்தில் இருந்தும் முழு விலக்கு அளிக்கப்பட்டன'' என்று சோழர் களது கல்வெட்டுக்களில் இருந்தே எடுத்துக் காட்டி அம்பலப்படுத்துகிறார் கே.கே.பிள்ளை.

நிலமும் இலவசம்.., வரிகளும் கிடையாது, கட்டணங்களும் இல்லை.., அரசன் கூடக் கேள்வி கேட்க முடியாது. அதுதான் அன்றைக்கு ஒரு சாராருக்கான நிலை.

அதாவது இன்றைக்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்காக ஏகப்பட்ட வரிச் சலுகைகளுடனும், ஏகப்பட்ட வரி விலக்கு களுடனும் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ள தொழிற்பேட்டைகள் (SEZ-Special Economic Zone) போல...

அன்றைக்கு ராஜராஜ சோழன் அமைத்துக் கொடுத்தது சிறப்புப் பிராமண மண்டலங்கள். அதாவது (SBZ - Special Bramanical Zone).

இதிலென்ன தவறு? தனக்கு எவ ரைப் பிடிக்கிறதோ அவருக்கு விருப்பமான வற்றையெல்லாம் வாரி வழங்குவது தானே மன்னர்களது விருப்பம்? குற்றமில்லைத்தான். ஆனால் அதே சோழ சாம்ராஜ்ஜியத்தில் மற்ற மக்கள் எப்படி வாழ்ந்தார்கள்? அதற்கும் இருக்கிறது கல் வெட்டு.

''வேதம் ஓத வந்தவர்களுக்கு சோழ அரசு சலுகை காட்டிய அதேவேளையில் உழவர்கள், கைவினைக் கலைஞர்கள், பிறதொழில் செய்வோர் மீது கடுமையான வரிகளை விதித்தது. இவற்றுள் அடித்தள எளிய மக்களான சலவையாளர்கள், குயவர், தறி நெய்பவர், தட்டார், ஓடங்களைச் செலுத்தியோர் மீது முறையே வண்ணார்பாறை பயன்பாட்டு வரி, குசக்காணம், தறிக்கூரை, தட்டார்பாட்டம், என வரி மேல் வரி போட்டுத் தள்ளியதோடு நிறுத்தாமல் உழவர்கள் ஒரு பயிருக்கு ஊடாக இன்னொரு பயிரை வளர்த்தால் கூட அதற்கும் ஊடுபோக்கு என வரி [illegible]லனம் செய்திருக்கிறார்கள்.

நிர்வாகமும் நீதியும் இப்படியிருக்க.. பெண்கள் நிலை எப்படி இருந்தது? எண்ணற்ற பெண்கள் பொட்டுக் கட்டு தல் என்கிற பெயரால் கோயில்களில் தேவரடியார்களாக ஆக்கப்பட்டதும் இக்காலத்தில் தான்.

அது சரி. கல்வி? அதுவும் குலத்துக்கொரு நீதிதான். அப்புறம் எங்கு போகும் எல்லோருக்கும் கல்வி?

இதையெல்லாம் பொதுமகன் சொன்னால் தப்பென்று சொல்லலாம். ஆனால் பண்டிதர்கள் சொன்னால்? அதுவும் இவைகளை தமிழக அரசே வெளியிட் டால்? ஆம் தமிழக அரசே வெளியிட் டது.. இப் போதல்ல. 1976 இல். அதுவும் தி.மு.க. அரசு.

தி.மு.க.ஆட்சியில் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே தமிழ் நில வர லாறு என்கிற நூலை வெளியிட்டது. அதன் பதிப்பாசிரியர் கோ.தங்கவேலு. சோழர் கால ஆட்சி உழைக்கும் மக்க ளுக்கு எப் பேர்ப்பட்ட பொல்லாத கால மாக விளங்கியது என்பதை அக்கு வேறாக அலசியது அந்த நூல். பிற்பாடு தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு இது பரம் மதேய ஆலோசகர் குழுவால் தடை செய்யப்பட்டது.

மன்னர் காலத்தில் ஏன் மார்க்சீயம் வரவில்லை? ராஜராஜ சோழன் ஏன் பின் நவீனத்துவம் பற்றிப் பேசவில்லை? என்பது போன்ற கேள்விகளல்ல நமது கேள்விகள்.

ஈழம் வென்றதும், கடாரம் சென்றதும், வெற்றிக்கொடி நாட்டியதும் மகிழத்தக்கது தான் ஆனால். தனது குடிமக்களுக்குள் ளேயே ஏன் பாகுபாடு காட்டினார்கள் மன்னர்கள்? ஒரு பக்கம் சுகத்தையும், ஒரு பக்கம் சுமையையும் ஏற்றியது ஏன்? ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் அவற்றின் எச்சங்கள் இன்றும் நிலைத்து நிற்கின்றனவே....! நிறைகளைப் பற்றிச் சிலாகிக்கும் வேளையிலும் நெஞ்சில் உறுத்தும் கேள்விகள் அல்லவா இவை?

பாமரன்

சோழர்கள் என்றில்லை பல்லவ மன்னர்களும், நாயக்க மன்னர்களும் இன்ன பிற மன்னர்களும்தான் என்ன கிழித்தார்கள்? நாம் மன்னர் காலத்தை விட்டு வெகு நூற்றாண்டு வந்தாயிற்று. ஆனா லும் அது வழி வந்த பண்பாடுகளும் பிரிவினைகளும் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

நிலைமை அப்படி இருக்கையில் - வறுமையும் சாதியப் பிரிப்புகளும் இன்றும் தாண்டவம் ஆடிவரும் நிலையிலும் - சோழப் பெருங்கோயிலுக்காக அரச செலவில் விழா எடுப்பது எந்த வகை யில்



தஞ்சைப் பெருங்கோயிலில் வரையப்பட்டிருந்த ராஜராஜசோழனின் படம்

நியாயமாகிறது?

கோயில்கள், தேவாலயங்கள் கூடாதென்பதல்ல. அவை ஆன்மாக்களை மட்டுமின்றி பண்பையும் ஒற்றுமையையும் கூட வளர்ப்பனவாக இருக்க வேண்டும். இது அன்று மட்டுமல்ல இன்றும் பொருந்தும். இருக்க இடமும், உடுக்கத் துணியும், உண்ண உணவும் இல்லாது ஆயிரம் ஆயிரம் மக்கள் துயரப்படுகையில் இங்கே கோயில்கள் புனரமைக்கப் படுகின்றன. தேவாலயங்கள் புதுப்பொலிவு பெறுகின்றன. புத்தர் புத்துயிர் பெற்று வருகிறார்.

சிந்திப்பது மனிதனை மற்றைய விலங்குகளிடம் இருந்து வேறுபடுத்துவதாக மனிதனே சொல்லிக் கொள்கிறான்.

இத்தீபாவளிக்கு அளவற்ற மகிழ்ச்சியை உங்கள் அன்புக்குரியவர்களுக்கு அனுப்புங்கள்.

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு DHL மூலம்
தீபாவளி அன்பளிப்புக்களைத் துரிதமாக அனுப்பலாம்.
எமது 24/7 வாடிக்கையாளர் சேவைக்கு அழையுங்கள் 2304304.



EXCELLENCE. SIMPLY DELIVERED. DHL EXPRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org